கடைசியாக நிகழ்நிலைப்படுத்தியது: ஜூலை 1, 2021

## கிரெடிட் காாடு வசதிகளை நிாவகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்டால் வழங்கப்படும் கிரெடிட் கார்டு வசதிகளுக்கு பொருந்தும் மற்றும் வழங்கப்படுவதை ஒழுங்குப்படுத்துகிறது.

i. விளக்கங்கள் மற்றும் விளக்கத் தெளிவு ''அஃபிலியேட்'' அர்த்தம் மற்றும் உள்ளடங்கியது:

- ஐசிஐசிஐ வங்கியின் ஹோல்டிங் அல்லது துணை நிறுவனமாக உள்ள எந்தவொரு நிறுவனம், அல்லது ஐசிஐசிஐ வங்கியின் கீழ் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது பொது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு நபா், அல்லது ஐசிஐசிஐ வங்கி ஒரு நேரடி அல்லது ஆதாய நலன் அல்லது கட்டுப்பாட்டை
- கொண்டுள்ள வோட்டிங் செக்யூரிட்டிசில் 26% அல்லது அதிகம் கொண்டுள்ள எந்தவொரு நபர்.

அஃபிலியேட் விளக்கம் நோக்கத்துக்காக, ''கட்டுப்பாடு'' என்பதை எந்தவொரு நபர் சம்பந்தமாக பயன்படுத்துகையில், அந்த நபரின் மேலாண்மை மற்றும் கொள்கைகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, வாக்களிக்கும் செக்யூரிட்டிசின் உரிமை மூலமாகவோ, ஒப்பந்தம் அல்லது இதரவகையில் எப்படியிருப்பினும் உத்தரவிடும் அதிகாரத்தை குறிக்கிறது மற்றும் ''நபர்'' என்றால் எந்தவொரு தனிநபர், நிறுவனம், ஃபர்ம், கார்ப்பொரேஷன், ஒரு பார்ட்னர்ஷிப், டிரஸ்ட் அல்லது வேறு ஏதாவது என்டைடிட்டி அல்லது அமைப்பு அல்லது இதர உண்மையில் இருக்கும் அல்லது சட்டப்பூர்வ நபர் என அர்த்தமாகிறது.

''விண்ணப்பதாரர்'' என்றால் ஒரு கார்டு பெற ஐசிஐசிஐ வங்கிக்கு விண்ணப்பித்துள்ள நபர்(கள்) என அர்த்தமாகிறது.

''அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்'' என்றால் அவ்வப்போது திருத்தப்படும் அன்னிய செலாவணி நிர்வாக சட்டம், 1999ல் வரையறுத்தப்படி ஒரு அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரை குறிக்கிறது.

''வணிக நாள்'' என்பது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ வங்கியின் சம்பந்தப்பட்ட அலுவலகம் அல்லது கார்டு வழங்கப்படும் அலுவலகம் அல்லது கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கியால் தெரியப்படுத்தப்படும் அவ்வாறான வேறு அலுவலகம் வழக்கமான வணிக பரிவர்த்தனைகளுக்கு திறந்திருக்கும் ஒரு நாள் என்பதை குறிக்கிறது.

''கார்டு'' அல்லது ''கிரெடிட் கார்டு'' அல்லது ''இஎம்ஐ கார்டு'' அல்லது ''ஆன்லைன் கிரெடிட் கார்டு'' அல்லது ''வணிக கார்டு'' அல்லது 'விசா எம்செக் கிரெடிட் கார்டு' என்றால் விண்ணப்பதாரரின் கோரிக்கையின்படி ஐசிஐசிஐ வங்கியால் விநியோகிக்கப்படும் ஒரு ஐசிஐசிஐ வங்கி விசா/ஏமெக்ஸ்/மாஸ்டர் கார்டு கிரெடிட் கார்டு அல்லது வேறு ஏதாவது கிரெடிட் கார்டு ஆகும்.

''ஏபின்'' என்பது கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கியால் ஒதுக்கப்படும் அல்லது கார்டு சம்பந்தமாக அவ்வப்போது கார்டு உறுப்பினரால்/ஐசிஐசிஐ வங்கியால் தேர்ந்தெடுக்கப்படும் தனிப்பட்ட அடையாள எண். (விசா எம்செக் கார்டுக்கு பொருந்தாது)

''கார்டு கணக்கு'' என்றால் கார்டு உறுப்பினர் பெயரில் திறக்கப்பட்ட மற்றும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படி கார்டை பயன்படுத்தும் நோக்கத்துக்காக ஐசிஐசிஐ வங்கியால் பராமரிக்கப்படுவது.

''ரொக்க-வரம்பு'' என்றால் கார்டு உறுப்பினர் தனது கார்டு கணக்கில் இருந்து பயன்படுத்தக்கூடிய ஐசிஐசிஐ வங்கியால் வரையறுக்கப்பட்ட அல்லது பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச ரொக்க தொகை அல்லது ரொக்கத்துக்கு சமமானது. ரொக்க வரம்பு கார்டு உறுப்பினரின் கடன்-வரம்பு/வாங்கும் வரம்பின் ஒரு துணைதொகுப்பாக விளங்குகிறது. (விசா எம்செக் கார்டுக்கு பொருந்தாது).

‘‘கட்டணங்கள்’’ அல்லது ‘‘கட்டணங்கள்’’ என்றால் அந்த கட்டணங்கள் இங்கே பிரிவு 6ல் வகைப்படுத்தப்பட்டுள்ள அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எங்காவது குறிப்பிடப்பட்டுள்ள அந்த கட்டணங்கள் என்பதாகும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின் அனைத்து விவரங்களும், அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டப்படி கார்டு உறுப்பினருக்கு பிரத்யேகமாக தெரிவிக்கப்படாத பட்சத்தில் கட்டணவிவர பிற்சேர்க்கையில் வழங்கப்பட்டதாக இருக்கும்.

‘‘நிறுவனம்’’ என்பது அவ்வப்போது திருத்தியமைக்கப்படும் நிறுவனங்கள் சட்டம், 1956ல் வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனம் என அர்த்தமாகிறது.

‘‘கடன்-வரம்பு/வாங்கும் வரம்பு’’ என்றால் கார்டு உறுப்பினர் அவரது கிரெடிட் கார்டில் செலவிட அதிகாரமளிக்கப்பட்ட வரம்பு என அர்த்தமாகும்.

‘‘ஐசிஐசிஐ லிமிட்’’ என்பது கிரெடிட் கார்டு உரிமையாளர்களான ஐசிஐசிஐ வங்கி லிமிடெட், அதன் பின்வருபவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நியமனதாரர்கள் என அர்த்தமாகும்.

‘‘ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம்’’ என்பது கார்டு உறுப்பினர்களுக்கு ஐசிஐசிஐ வங்கியால் வழங்கப்படும் ஐசிஐசிஐ வங்கி-தொலைபேசி பேங்கிங் சேவையை குறிக்கிறது.

‘‘இன்ஃபினிட்டி’’ என்பது ஐசிஐசிஐ வங்கியின் இன்டர்நெட் பேங்கிங் சேவையின் வணிகப் பெயர்/ஐசிஐசிஐ வங்கிக்கு சொந்தமான, நிர்மாணிக்கப்பட்ட மற்றும் ஐசிஐசிஐ வங்கியால் www.icicibank.com என்பதில் பராமரிக்கப்படும் இணையதளத்தை குறிக்கிறது. (விசா எம்செக் கார்டுக்கு பொருந்தாது)

‘‘காப்பீடு நிறுவனம்’’ என்பது ஐசிஐசிஐ லம்பார்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் அல்லது ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் வேறு இன்சூரன்ஸ் கம்பெனியை குறிக்கிறது.

‘‘உறுப்பினர்’’ அல்லது ‘‘கார்டுதாரர்’’ அல்லது ‘‘கார்டு உறுப்பினர்’’ என்பது விண்ணப்பதாரரின் பெயரில் அவருக்கு கொடுக்கப்பட்ட மற்றும் அந்த கார்டை வைத்திருப்பவரை குறிக்கிறது.

‘‘மெர்ச்சன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட்’’ என்பது எந்தவொரு இடத்திலும் அமைந்திருக்கும் கார்டுக்கு சேவை வழங்கும் தொழிலகத்தை குறிக்கிறது மற்றும் மற்றவைகள், ஸ்டோர்கள், கடைகள், ரெஸ்டாரென்ட்கள், ஹோட்டல்கள், ஏர்லைன்ஸ், ஏடிஎம் உள்பட கேஷ் அட்வான்ஸ் பாயின்ட்ஸ் மற்றும் மெயில் ஆர்டர் அட்வர்டைசர்ஸ் உள்ளடங்கும் (ரீடெய்லர்ஸ், விநியோகஸ்தர்கள் அல்லது உற்பத்தியாளர்கள் என யாராகவும் இருக்கலாம்).

‘‘மெர்ச்சன்ட்’’ என்பது மெர்ச்சன்ட் எஸ்டாபிளிஷ்மென்ட்டை சொந்தமாக கொண்டிருக்கும் அல்லது நிர்வகிக்கும் அல்லது செயல்படுத்தும் எந்தவொரு தனிநபர், அதன் பின்வருபவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நியமனதாரர்களை குறிக்கிறது.

‘‘குறைந்தபட்ச பாக்கி தொகை’’ அல்லது ‘‘எம்ஏடி’’ என்பது ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிட்டுள்ள அந்த தொகையை குறிக்கிறது. ‘‘மொத்த பாக்கி தொகை’’ அல்லது ‘‘டிஏடி) என்பது ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிட்டுள்ள அந்த தொகையை குறிக்கிறது.

‘‘பணம் செலுத்தும் உரிய தேதி’’ என்பது கார்டு உறுப்பினரால் கார்டை பயன்படுத்தியதால் ஏற்பட்ட கட்டணங்கள் சம்பந்தமாக ஸ்டேட்மென்ட் மூலமாக தெரிவிக்கப்பட்ட தொகையை ஒவ்வொரு மாதமும் செலுத்தும் தேதியை குறிக்கிறது.

‘‘பிரைமரி கார்டு மெம்பர்’’ என்பது கார்டு கணக்கு திறக்கப்பட்ட நபரின் பெயர் மற்றும் யாருக்கு கார்டு கொடுக்கப்பட்டதோ அவரை குறிக்கிறது.

‘‘ஆர்பிஐ’’ என்பது இந்திய ரிசர்வ் வங்கியை குறிக்கிறது.

''ஸ்டேட்மென்ட்'' என்றால் ஒரு கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கியால் அனுப்பப்படும் மாதாந்திர கணக்கு அறிக்கை/கள் என அர்த்தமாகிறது, இதில் கார்டு கணக்கு சம்பந்தமாக ஐசிஐசிஐ வங்கிக்கு முதன்மை கார்டு உறுப்பினர் மற்றும் துணை கார்டு உறுப்பினர் யாராவது அந்த தேதியில் செலுத்த வேண்டிய நிதிப் பொறுப்புகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

''துணை கார்டு உறுப்பினர்'' என்பது முதன்மை கார்டு உறுப்பினரின் குடும்ப உறுப்பினரை குறிக்கிறது அவர் முதன்மை கார்டு உறுப்பினருடன் கொண்டுள்ள உறவுமுறை காரணமாக உரிமையுள்ள ஒரு கார்டு உறுப்பினராகிறார். (எம்செக்-ல் துணை கார்டு பொருந்தாது)

''கட்டண பிற்சேர்க்கை'' என்றால் கார்டு மீது வழங்கப்படும் சேவைகளுக்கு உரித்தாகும் கட்டணங்களை விவரிக்கும் ஒரு இணைப்பு என அர்த்தமாகிறது. இந்த கட்டணங்கள் ஐசிஐசிஐ வங்கியின் தனியுரிமை முடிவின்படி மாற்றங்களுக்கு உட்பட்டது. இருப்பினும், கட்டணங்களில் அந்த மாற்றங்கள் கார்டு உறுப்பினருக்கு 30 நாட்களுக்கு முன்பு அறிவிப்பு கொடுத்து பிறகே செய்யப்படும்.

''பரிவர்த்தனை அறிவுறுத்தல்'' என்பது ஒரு கார்டு உறுப்பினரால் ஐசிஐசிஐ வங்கிக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக மற்றும்/அல்லது ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம் மூலமாக மற்றும்/அல்லது இன்ஃபினிட்டி மூலமாக அந்த பரிவர்த்தனையை செயலாக்கம் செய்ய கொடுக்கப்படும் எந்தவொரு அறிவுறுத்தல் என அர்த்தமாகிறது. பரிவர்த்தனை அறிவுறுத்தலில் உள்ளடங்குபவை வருமாறு ஒரு கட்டணம் ஸ்லிப், ஒரு கேஷ் அட்வான்ஸ் ஸ்லி அல்லது ஒரு அஞ்சல் உத்தரவு கூப்பன் இருக்கலாம் ஆனால் இவை மட்டுமே உட்பட்டது அல்ல.

இந்த ''விதிகள் மற்றும் நிபந்தனைகள்'' என்பது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள மற்றும்/அல்லது திருத்தியப்படி அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கியால் கொண்டுவரப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை குறிக்கிறது. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில், எதிர் நோக்கம் தோன்றினால் ஒழிய:-

(ஏ) ஒரு ''திருத்தத்தை'' மேற்கோள் காட்டுவதில் ஒரு துணை, மாற்றப்பட்ட, புதிதாக சேர்க்கப்பட்ட, பதிலானது அல்லது மீள் இயற்றப்பட்ட சட்டம் உள்ளடங்கும் மற்றும் ''திருத்தப்பட்டது'' அதற்கேற்ப பொருள் கொள்ளப்பட வேண்டும்; ஒரு ''அதிகாரமளித்தல்'' அல்லது ''அங்கீகரித்தல்'' என்பதில் ஒரு அதிகாரமளிப்பது, சம்மதம், ஒப்புதல், அங்கீகாரம், அனுமதி, தீர்மானம், உரிமம், விலக்கு, தாக்கல் செய்தல் மற்றும் பதிவு உள்ளடங்கும்; ''சட்டம்'' என்பதில் ஏதாவது சாசனம், இயற்றுச்சட்டம், சட்டம், விதி, ஒழுங்குமுறை, அவசர சட்டம், தீர்ப்பு, உத்தரவு, தீர்ப்பாணை, அதிகாரமளித்தல், அல்லது ஏதாவது பிரசுரிக்கபட்டது, உத்தரவு, வழிகாட்டுமுறை, உத்தரவு அல்லது சட்ட அமல் கொண்டிருக்கும் அரசாங்க கட்டுப்பாடு, அல்லது ஏதாவது இறுதி செய்யப்பட்டது, அல்லது முந்தைய எவற்றின் பொருள் விளக்கம், எந்தவொரு நீதிமன்ற அதிகாரத்தால், விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்ட/சமர்ப்பித்த தேதியில் அமலில் இருந்தது அல்லது அதன் பிறகு மற்றும் அவ்வப்போது ஒவ்வொரு தடவை திருத்தியமைக்கப்பட்டது உள்ளடங்கும்.

(பி) ஒருமையில் பன்மை உள்ளடங்கியது (மற்றும் நேர் எதிராகவும்);

(சி) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள தலைப்புகள் படிக்கும் வசதிக்காக மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது மற்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பொருள் கொண்டு மற்றும் விளக்கம் காணும் போது புறக்கணிக்கப்பட வேண்டும்;

(டி) ''உட்பட'' அல்லது ''உள்ளடங்கியது'' குறிப்பிடப்படும் வார்த்தைகள் வரம்பின்றி பொருள் கொள்ளப்பட வேண்டும்;

(இ) ஒரு பாலினத்தை குறிப்பிடும் போது அதில் பெண், ஆண் மற்றும் மூன்றாம் பாலினத்தவரும் உள்ளடங்கும்;

(எஃப்) எந்தவொரு விஷயத்துக்கும் ஐசிஐசிஐ வங்கியில் இருந்து தேவைப்படும் அனைத்து அங்கீகாரங்கள், அனுமதிகள், சம்மதங்கள் அல்லது ஏற்றுக்கொள்ளுதலுக்கு முன்பாக ஐசிஐசிஐ வங்கியின் எழுத்துப்பூர்வ அங்கீகாரம், அனுமதி, சம்மதம் அல்லது ஒப்புகை தேவைப்படுகிறது;

(ஜி) விசா/மாஸ்டர்கார்டு ஒழுங்குமுறைகளுக்கான குறிப்புகள் விசா/மாஸ்டர்கார்டு அதன் நெட்வொர்க்கில் உள்ள அனைத்து உறுப்பு வங்குகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுமுறைகள் சம்பந்தப்பட்டதாக இருக்கும்.

(எச்) ஐசிஐசிஐ வங்கி மற்றும் கார்டு உறுப்பினர் இடையே ஏதாவது நிகழ்வு, சம்பவம், சூழல், மாற்றம், உண்மை, தகவல், ஆவணம், அதிகாரமளித்தல், செயலாக்கம், சட்டம், விடுபடுதல், உரிமைகோரல், மீறல், இயல்பிருப்பு அல்லது இதரவகையில் உள்பட எந்தவொரு விஷயம் சம்பந்தமாக ஏதாவது முரண்பாடு அல்லது விவகாரம் இருந்தால், முன்கூறப்பட்டுள்ள எந்தவொரு விஷயத்திலும் ஐசிஐசிஐ வங்கியின் அபிப்பிராயமே இறுதியானதாக மற்றும் கார்டு உறுப்பினரை கட்டுப்படுத்துவதாக இருக்கும்.

(ஐ) கார்டு மீது அல்லது வேறு எங்கேனும் ''ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டு உடன்பாடு'' வார்த்தைகள் பயன்படுத்துவது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை குறிக்கிறது.

## II. கார்டு சேவைகள்

கார்டு ஐசிஐசிஐ வங்கியின் உடைமையாகும். ஐசிஐசிஐ வங்கியானது (1) விண்ணப்பதாரரின் கடன் தகுதியை கிரெடிட் பீரோ ரிப்போர்ட் மற்றும் அவசியம் என கருதும் அது மாதிரியான வேறு அறிக்கைகள் பெறுவதன் மூலம் மதிப்பிடவும் மற்றும் (2) எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் தனது சுயவிருப்ப முடிவின்படி கார்டு வழங்க மறுக்கவும் உரிமையை தக்க வைத்துள்ளது. கார்டு மாற்றத்தக்கதல்ல மற்றும் அதன் பயன்பாடு இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டும் ஏதாவது கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. கார்டை பெற்றுக் கொண்டதும் கார்டு உறுப்பினர் உடனடியாக அதன் பின்பக்கத்தில் கையொப்பமிட வேண்டும். அனைத்து கார்டு உறுப்பினர்களுக்கும் ஐசிஐசிஐ வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையம் மற்றும்/அல்லது இன்ஃபினிட்டி வசதி கிடைக்கிறது. கார்டு உறுப்பினர்கள் பெறும் ஏதாவது சேவைகள்/வசதிகளில் கடன் வரம்பை உயர்த்துவது, பரிவர்த்தனைகள் மீதான விசாரணை, மொத்த பாக்கி தொகை, ஸ்டேட்மென்ட் விவரங்கள், பணம் செலுத்தும் உரிய தேதி, இத்யாதி உள்பட ஆனால் அவை மட்டுமல்லாது ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம் மற்றும்/அல்லது இன்ஃபினிட்டியால் வழங்கப்படுபவை அனைத்து நேரங்களிலும் ஐசிஐசிஐ வங்கியால் நிர்ணயிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சேவைகள் /வசதிகள் மற்றும் அந்த வசதிகள்/சேவைகளை பெறும் முறை சம்பந்தமாக அவ்வப்போது திருத்தியப்படி பிணைக்கப்பட்டதாக இருக்கும்.

## III. கார்டை பயன்படுத்துதல்

(ஏ) சர்வதேச அளவில் செல்லத்தக்க ஒரு கார்டாக இருந்தால், அந்த கார்டு இங்கே கீழே பிரிவு III (எச்)ல் கூறப்பட்டது நீங்கலாக உலகம் முழுவதும் செல்லுபடியாகும். வேறு கார்டுகளை பொறுத்த வரை, பயன்பாடு இந்தியாவில் விசா/விசா எலக்ட்ரான் கிரெடிட் கார்டுகள்/மாஸ்டர் கார்டு/ஏமெக்ஸ் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளும் வணிக நிறுவனங்களில் மட்டுமே செல்லுபடியாகும். இருப்பினும், ஐசிஐசிஐ வங்கி மற்றும் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனம் எந்த நேரத்திலும் எந்தவொரு காரணமாக இருந்தாலும் வணிக நிறுவனத்தில் கிரெடிட் கார்டு

பயன்படுத்துவதை மறுக்கும் உரிமையை கொண்டுள்ளது. கிரெடிட் கார்டு நல்லெண்ணத்தோடு தனிப்பட்ட அல்லது அதிகாரப்பூர்வ நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படலாம் மற்றும் கார்டு உறுப்பினர் சுயலாபத்துக்காக அதனை பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை. வணிக நிறுவனத்தில் கொள்முதல் செய்தது அல்லது வேறு வசதியை பயன்படுத்தியதற்காக கட்டணம் எதுவும் விதிக்கப்பட்டால் கார்டு உறுப்பினருக்கு உண்டான அந்த கட்டணங்கள் குறித்து வணிக நிறுவனத்துடன் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் மற்றும் அதற்கு ஐசிஐசிஐ வங்கி எந்த விதத்திலும் பொறுப்பாகாது. வணிக நிறுவனத்தில் கார்டை பயன்படுத்தியதும், கட்டணச் சீட்டில் கையொப்பமிட்டு கட்டணச் சீட்டு நகலை கார்டு உறுப்பினர் சேகரித்துக் கொள்ள வேண்டும். கட்டண-சீட்டில் கையொப்பமிடுவதற்கு கார்டு உறுப்பினரே பொறுப்பு; கார்டு உறுப்பினர் கட்டணச்-சீட்டில் கையொப்பமிடவில்லை எனில், அது சம்பந்தமான பரிவர்த்தனை/கள் மற்றும் அனைத்து கட்டணங்களுக்கும் கார்டு உறுப்பினரே பொறுப்பாவார். கார்டு உறுப்பினரிடம் கட்டண சீட்டுகளின் பிரதிகளை ஐசிஐசிஐ வங்கி வழங்காது; இருப்பினும், கார்டு உறுப்பினர் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனையில் இருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் அந்த கோரிக்கையை வைத்தால், ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி கட்டணச் சீட்டுகளின் நகல் பிரதிகளை கட்டண விவர இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தின் பேரில் வழங்கும். தபால் ஆர்டர் அல்லது தொலைபேசி ஆர்டர் கொள்முதலை நடைமுறைப்படுத்தும் வசதியை கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி வழங்க ஒப்புக் கொள்ளலாம்.

ஒரு ஆன்லைன் கிரெடிட் கார்டு பயன்பாடு ஆன்லைன் பரிவர்த்தனைகள்/ அஞ்சல் ஆர்டர்களுக்கு மட்டுமே என கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். ஒரு ஆன்லைன் கிரெடிட் கார்டு ஒரு துணை கார்டு / ஆட்-ஆன் கார்டாக மட்டுமே வழங்கப்படும் மற்றும் ஒரு முதன்மை கார்டாக அல்ல, அல்லது ஐசிஐசிஐ வங்கியால் தனது சுயவிருப்ப முடிவின்படி அவ்வப்போது தெரிவிக்கப்படும். விசா எம்செக் கார்டு பயன்பாடு மொபைல் மூலமாக செய்யப்படும் பணம் செலுத்துதல் மற்றும்/அல்லது கொள்முதலுக்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கும். விசா எம்செக் கிரெடிட் கார்டு ஒரு துணை கார்டாக வழங்கப்படும் மற்றும் ஒரு முதன்மை கார்டாக அல்ல, அல்லது ஐசிஐசிஐ வங்கியால் தனது சுயவிருப்ப முடிவின்படி அவ்வப்போது தெரிவிக்கப்படும். அஞ்சல் ஆர்டர் தொலைபேசி ஆர்டர் அல்லது மொபைல் மூலம் கொள்முதலாக இருக்கும் பட்சத்தில் கொள்முதல் சமயத்தில் கார்டு உறுப்பினர் கட்டணச் சீட்டுகளில் கையொப்பமிட மாட்டார் என்பது கார்டு உறுப்பினருக்கு தெரிந்திருக்கும். அதன்படி, அவ்வாறான ஒரு கொள்முதல் அல்லது ஒரு கட்டணத்தின் நம்பகத்தன்மை அல்லது செல்லுபடியாதல் சம்பந்தமான எந்தவொரு காரணம் எப்படியிருப்பினும் விவகாரம் எதுவும் எழும் பட்சத்தில் நிலுவையில் உள்ள பாக்கி அனைத்தையும் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த கார்டு உறுப்பினர் ஒப்புக் கொள்கிறார்.

(பி) அனைத்து விவகாரங்களும் கார்டு உறுப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனத்துக்கு இடையிலானது மற்றும் அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். அவற்றுக்கு எவ்வகையிலும் எந்தவொரு விதத்திலும், ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது.

(சி) கார்டு பயன்படுத்தப்படலாம் இதன்படி: (i) கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கி தெரிவித்துள்ள கடன் வரம்புக்குள்; மற்றும் (ii) அதன் முன்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள மாதத்தின் கடைசி தேதிக்கு பிறகு

(டி) கார்டை பயன்படுத்தும் கார்டு உறுப்பினரின் உரிமை உடனடியாக தீர்மானிக்கப்படும்: (i) கீழேயுள்ள பிரிவு 5ஐ செயல்படுத்தி ரத்து செய்யப்படும் நிகழ்வு; அல்லது (ii) கார்டு தொலைந்தது/தவறான பயன்படுத்தப்பட்ட நிகழ்வு.

(இ) கார்டை பயன்படுத்துவதன் மூலம், கார்டு காலம் புதுப்பித்தல் மற்றும்/அல்லது மாற்று கார்டுகள் ஒவ்வொரு கார்டு உறுப்பினருக்கும் வழங்கப்பட நிலைப்படுத்தும் ஒரு கோரிக்கை விடுத்ததாக கருதப்படுவார் இதரவகையில் கார்டு உறுப்பினரால் ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம்/இன்ஃபினிட்டி அந்த நேரம் வரை தெரிவிக்கப்பட்டிருக்கும், மற்றும் அவ்வாறான புத்துப்பித்தல் மற்றும்/அல்லது மாற்று கார்டு வழங்குதல் ஐசிஐசிஐ வங்கியின் சுயவிருப்ப முடிவின் அடிப்படையிலானதாக இருக்கும்.

(எஃப்) ஒரு கிரெடிட் கார்டு நிரல் மூடப்படும் பட்சத்தில் அல்லது கிரெடிட் கார்டு புதுப்பிக்கப்படும் நேரத்தில், கார்டு உறுப்பினர் ஏற்கனவே வைத்திருந்த கார்டு வகையில் இருந்து வித்தியாசமான ஒரு கார்டு வகையை வழங்கும் உரிமையை ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் தனது சுயவிருப்ப முடிவின்படி தக்க வைத்துள்ளது. எந்தவொரு காலகட்டத்திலும் எந்தவொரு கிரெடிட் கார்டு மீதும் கடன் வரம்புகள் மற்றும் ரொக்க வரம்புகள் ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்டின் சுய விருப்ப முடிவின்படி இருக்கும்.

(ஜி) கார்டு மற்றும் ஐசிஐசிஐ வங்கியுடன் மேற்கொள்ளும் அனைத்து செயல்பாடுகளிலும் எல்லா நேரமும் நல்ல நம்பிக்கையுடன் கார்டு உறுப்பினர் செயலாற்ற வேண்டும்.

(எச்) கார்டு உறுப்பினருக்கு வழங்கப்பட்ட சர்வதேச செல்லத்தக்க கார்டு நேபாளம் மற்றும் பூட்டானில் வணிக நிறுவனங்களில் அன்னிய செலாவணியில் பணம் செலுத்துவது நீங்கலாக உலகம் முழுவதும் செல்லத்தக்கது. இந்தியா/நேபாளம்/பூட்டானில் மட்டுமே வரையறுக்கப்பட்ட பயன்பாடு உள்ள கார்டுகளை பொறுத்த வரை, இந்தியா/நேபாளம்/பூட்டானுக்கு வெளியே பயன்படுத்துவது ''அன்னிய செலாவணி மேலாண்மை சட்டம்'' (ஃபெமா) அல்லது வேறு ஏதாவது ஒத்திருக்கும் சட்டத்தை மீறுவதாகும். இந்த நிபந்தனைகளுக்கு முரணாக தவறான பயன்பாட்டுக்கு முழு பொறுப்பை கார்டு உறுப்பினர் ஏற்றுக் கொள்கிறார் மற்றும் இந்த விதிமுறைகளை மீறி கார்டு உறுப்பினர் செயல்படுவதன் விளைவாக ஐசிஐசிஐ வங்கிக்கு ஏற்படும் மற்றும் / அல்லது சங்கடப்படும் ஏதாவது இழப்பு, சேதம், நலன், மாற்றுதல், இதர ஏதாவது நிதி கட்டணத்தை ஏற்றுக் கொண்டு மற்றும் ஐசிஐசிஐ வங்கிக்கு இழப்பீடு செய்ய ஒப்புக் கொள்கிறார்.

(ஐ) சர்வதேச செல்லத்தக்க கார்டு எந்தவொரு நோக்கத்துக்கும் இணையதளத்தில் பயன்படுத்த முடியும் அதற்கு பரிமாற்றமாக இந்தியாவில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரிடம் இருந்து வாங்க முடியும்.

(ஜே) சர்வதேச அளவில் செல்லத்தக்க கார்டு மற்றும் வேறு கார்டுகள் அனைத்தும் இணையதளத்தில் பயன்படுத்தப்பட முடியாது அல்லது இதரவகையில் தடை செய்யப்பட்ட வகைகளான லாட்டரி சீட்டுக்கள், தடை செய்யப்பட்ட அல்லது விலக்கப்பட்ட பத்திரிகைகள், ஸ்வீப்ஸ்டேக்களில் பங்கேற்றல், கால்பேக் சேவைகளுக்கு பணம் செலுத்தல், வெளிநாட்டு நாணய பரிமாற்ற வர்த்தகத்துக்கு எந்தவொரு விதத்தில் பணம் செலுத்தல், வெளிநாட்டு பங்குசந்தைகள்/வெளிநாட்டு எதிர்தரப்புக்கு மார்ஜின் கால்கள், உள்நாட்டு/வெளிநாட்டு பங்கு சந்தைகளில் அந்நிய வர்த்தக பரிமாற்றம் இத்யாதிக்கு பயன்படுத்தக் கூடாது.

(கே) இறக்குமதி க்ளையன்ட் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளாரா அல்லது இல்லையா என்பதை பொருட்படுத்தாது இந்தியாவுக்கு வெளியே செய்யப்படும் ஏற்றுமதிகளுக்கு கிரெடிட் கார்டில் இருந்து டெபிட் செய்து பணத்தை அங்கீகரிக்கப்பட்ட டீலர்கள் ஏற்றுக்

கொள்ளலாம். ஆகவே, இந்தியாவுக்கு வெளியே செய்யப்படும் ஏற்றுமதிகளுக்கு ஒரு இறக்குமதியாளரின் கிரெடிட் கார்டில் டெபிட் செய்வதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட டீலர்கள் பணம் பெறலாம், இதில் கார்டு வழங்கிய வங்கி/அமைப்பில் இருந்து திரும்பப் பெறப்படும் பணம் அன்னிய செலாவணியாக பெறப்படும்.

(எல்) கார்டு மீதான அதிகாரமளிக்கும் கோரிக்கைகளை எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் முழுமையான சுயவிருப்ப முடிவு மற்றும் சுதந்திரம் ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. அவ்வாறான சூழல்களில், ஐசிஐசிஐ வங்கி அதன் சுயவிருப்ப முடிவின்படி பரிவர்த்தனையை அங்கீகரித்து மற்றும் கார்டு கணக்கில் வசூலிக்கும் முன்பு அதனை உறுதி செய்ய ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்ளும்படி கார்டு உறுப்பினருக்கு வங்கி உத்தரவிடும்.

(i) எந்தவித சட்டவிரோத/சட்டத்துக்கு புறம்பான கொள்முதல்/நோக்கங்களுக்கு பணம் செலுத்த கார்டை தான் பயன்படுத்துவதில்லை என்று கார்டு உறுப்பினர் ஒப்புக்கொள்கிறார்.

(ii) கிரெடிட் கார்டு தனிப்பட்ட செலவுகள் மற்றும் நோக்கங்களுக்கு மட்டுமே பிறப்பிக்கப்படுகிறது. வர்த்தக அல்லது வணிக நோக்கங்களுக்காக மறுவிற்பனைக்கு எதையேனும் கொள்முதல் செய்யா கார்டுதாரர் கிரெடிட் கார்டை பயன்படுத்தக் கூடாது. கிரெடிட் கார்டை சட்டப்பூர்வ, நல்லெண்ண தனிப்பட்ட நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் பண மோசடி, சமூக-விரோத அல்லது ஊக செயல்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடாது அல்லது வணிகத்தில் வர்த்தகரீதியான சுயலாபத்துக்கு கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது (எ.கா. நடப்பு மூலதனம் நோக்கங்களுக்காக).

(எம்) தடை செய்யப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட, வணிகரீதியிலான நோக்கங்கள் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது நோக்கங்களுக்கு கிரெடிட் கார்டு பயன்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால், கார்டுதாரருக்கு எந்த அறிவிப்புமின்றி சம்பந்தப்பட்ட கிரெடிட் கார்டு மற்றும் கூடுதல்/ஆட்-ஆன் கார்டுகளை மூட தனக்குள்ள உரிமையை தனது சுயவிருப்ப முடிவின்படி ஐசிஐசிஐ வங்கி பயன்படுத்தும். தொலைபேசி அல்லது வேறு முறைப்படியான தகவல் தொடர்பு மூலம் விசாரிக்கும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது மற்றும் கிரெடிட் கார்டு பரிவர்த்தனைகள், பயன்பாடு வகை இத்யாதி பற்றிய விவரங்கள், தகவல், சான்றுகளை கோர முடியும் மற்றும் ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது கேட்கப்படும் தகவலை வழங்க கார்டுதாரர் ஒப்பந்தப்படி பிணைக்கப்பட்டுள்ளார். திருப்திகரமான பதில்கள் இல்லையென்றால் அல்லது கார்டுதாரரிடம் இருந்து பதில் இல்லை என்றால் ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டை முடக்கும்/மூடும்.

(i) கிரெடிட் கார்டில் முன்பு கொள்முதல் செய்யப்பட்ட ஏதாவது பொருட்கள் அல்லது சேவைகளுக்கு ரீஃபண்ட் தவிர்த்து வேறு எந்த காரணத்துக்கும் கார்டு கணக்கிற்கு கார்டுதாரர் கண்டிப்பாக பெறவோ அல்லது அறிமுகப்படுத்தவோ கூடாது. கார்டு கணக்கில் மொத்த கடன் வரம்பில் பயன்படுத்தப்படாத தொகை வரை மட்டுமே கிரெடிட் கார்டு மீதான பரிவர்த்தனைகள் அனுமதிக்கப்படும்.

## IV. ஏற்கனவே சேமிப்பு கணக்கு உடன், ஏதாவது இருந்தால் கார்டை இணைத்தல்

ஐசிஐசிஐ வங்கியின் சுயவிருப்ப முடிவின்படி ஐசிஐசிஐ வங்கியில் ஏற்கனவே இருக்கும் சேமிப்பு கணக்கு உடன், ஏதாவது இருந்தால், விண்ணப்பதாரர் தனது கார்டு இணைக்கப்படுவதை ஏற்றுக் கொண்டு மற்றும் ஒப்புக் கொள்கிறார். இது ஐசிஐசிஐ வங்கியில் சேமிப்பு கணக்கு, ஏதாவது இருந்தால், அதன் கீழ் அவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பயனாளர் ஐடி-யை பயன்படுத்தி இன்டர்நெட் பேங்கிங் சேவைகள் மற்றும் ஐமொபைல் வசதி மூலம் அவரது கார்டு கணக்கை அணுக வகை செய்யும் என்பதை

விண்ணப்பதாரர் மேலும் ஏற்றுக் கொள்கிறார் மற்றும் புரிந்துக் கொள்கிறார். மேற்கூறப்பட்ட நோக்கத்துக்காக விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட கேஒய்சி விவரங்களை ஐசிஐசிஐ வங்கி பயன்படுத்தவும் விண்ணப்பதாரர் மேலும் சம்மதம் வழங்கி மற்றும் அதிகாரமளிக்கிறார். ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை அழைத்து விண்ணப்பதாரர் தனது ஐசிஐசிஐ வங்கி சேமிப்பு கணக்கில் இருந்து தனது கார்டை விலக்கிக் கொள்ள முடியும் என்பதை விண்ணப்பதாரர் புரிந்துக் கொள்கிறார்.

## V. தனிப்பட்ட அடையாளப்படுத்தும் எண்

கார்டு உறுப்பினர் கார்டை பயன்படுத்த ஏதுவாக, அவருக்கு ஒரு தனிப்பட்ட அடையாளப்படுத்தும் எண் (ஏபின்) அவருக்கு வழங்கப்படும். அவருக்கு ஏபின் அஞ்சலில் அனுப்பப்படும் மற்றும் அது சீலிடப்பட்ட ஒரு உறையில் பெறப்படவில்லை எனில் கார்டு உறுப்பினர் ஒரு ஐசிஐசிஐ வங்கி கிளையை அல்லது ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம். இந்த ஏபின் கார்டு உறுப்பினரால் அவரது சொந்த ரிஸ்க்கின் பெயரில் ஒரு ஏடிஎம்மில் அல்லது ஐசிஐசிஐ வங்கி கிளையில் அல்லது ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தில் மாற்றிக் கொள்ள முடியும். கார்டு கணக்கை அணுக ஏபின் உதவுகிறது மற்றும் ஏபின் பயன்பாடு, ரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பு அதே போல் அந்த ஏபின் பயன்படுத்தி கார்டு கணக்கில் உள்ளீடு செய்யப்பட்ட அனைத்து உத்தரவுகள் மற்றும் தகவல் மாற்றங்களுக்கு முழுப் பொறுப்பை கார்டு உறுப்பினர் ஏற்றுக் கொள்கிறார். ஏபின்-ஐ எந்தவொரு வடிவத்திலும் கார்டு உறுப்பினர் பதிவு செய்யக் கூடாது, அவ்வாறு செய்தால் ஏபின் ஒரு மூன்றாவது தரப்புக்கு தெரிய வரும். ஏபின் மூலம் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களை உறுதிச்செய்ய ஐசிஐசிஐ வங்கிக்கு கார்டு உறுப்பினர் அதிகாரமளித்துள்ளார் மற்றும் அதனை ரத்த செய்யக் கூடாது. அனுப்பப்பட்ட பரிவர்த்தனை அறிவுறுத்தல் அல்லது கார்டு உறுப்பினரிடம் இருந்து அனுப்பப்பட்டதாக கருதப்படுவதன் நம்பகத்தன்மையை, கார்டு உறுப்பினரின் ஏபின் சரிபார்த்தல் தவிர்த்து வேறும் வகையில் சரிபார்க்கும் பொறுப்பு ஐசிஐசிஐ வங்கிக்கு கிடையாது. ஏபின் பாதுகாப்பை பராமரிக்க இங்கே குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளிட்ட அனைத்து பொருத்தமான நடவடிக்கைகளையும் கார்டு உறுப்பினர் எல்லா நேரங்களிலும் எடுக்க வேண்டும். கார்டு உறுப்பினர் பாதுகாப்பு தேவைகளை கடைப்பிடிக்க தவறி விட்டால், அவரே ஐசிஐசிஐ வங்கிக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஐசிஐசிஐ வங்கி, தனது முழு சுயவிருப்ப முடிவின்படி ஏற்கனவே உள்ள கார்டுக்கு ஒரு புதிய ஏபின் வழங்க முடியும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டு மற்றும் அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கியால் நிர்ணயிக்கப்பட்டப்படி கார்டு மற்றும்/அல்லது ஏபின் முறையற்ற/ மோசடியாக/ அதிகாரமளிக்கப்படாத/போலித்தனமான/தவறான பயன்பாட்டுக்கு ஐசிஐசிஐ வங்கியை கார்டு உறுப்பினர் பொறுப்பாக்க முடியாது. கார்டு யாராவது மூன்றாவது நபர் கையில் கிடைத்ததால் அல்லது ஏபின் யாராவது மூன்றாவது நபருக்கு தெரிய வந்து கார்டை பயன்படுத்தியது/தவறாக பயன்படுத்துவதுடன் தொடர்புள்ள எந்தவித விளைவுகளுக்கும் ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது. கார்டு கணக்கு உள்ளிட்ட சேவைகள் ஏதாவது மூன்றாவது நபர்களுக்கு பெற்றால் கார்டு உறுப்பினரே அதற்கு பொறுப்பாவார் மற்றும் அந்த தவறான பயன்பாடு / மூன்றாவது நபர்கள் பயன்படுத்தியதன் அடிப்படையில் அல்லது அந்த அணுகல் மற்றும் பயன்பாடு, அல்லது இதரவகையில் தொடர்பாக ஏற்படும் எந்தவொரு பொறுப்பு, செலவுகள் அல்லது சேதங்களுக்கு எதிராக ஐசிஐசிஐ வங்கிக்கு ஈட்டுறுதி செய்ய வேண்டும். விசா எம்செக் கிரெடிட் கார்டுதாரர்களுக்கு ஒரு பின் விநியோகிக்கப்படுவதில்லை.

கிரெடிட் கார்டு உறுப்பினர்கள் ஏபின் எஸ்எம்எஸ் மூலம் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணில் அனுப்பப்படும். ஒருவேளை மொபைல் எண் பதிவு செய்யப்படவில்லை எனில், ஏபிஎன் அஞ்சல் முகவரிக்கு தனியே அனுப்பி வைக்கப்படும். ஒருவேளை ஏபின் பெறவில்லை எனில், ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை அழைத்து அல்லது இன்டர்நெட் பேங்கிங்/ஐமொபைல் மூலம் கார்டு உறுப்பினர் இன்ட்ராக்டிவ் வாய்ஸ் ரெஸ்பான்ஸ் சிஸ்டம் (ஐவிஆர்) முறையில் அதனை உருவாக்கிக்

கொள்ள முடியும். கார்டு உறுப்பினர் தவறான ஒரு மொபைல் எண்ணை பதிவு செய்திருந்தால் அதற்கு ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது.

## VI. மீறல் மற்றும் ரத்து/திரும்பப் பெறுதல்

(ஏ) மீறல்: எந்தவொரு கார்டு உறுப்பினரால் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவையேனும் மீறப்படும் பட்சத்தில்; (i) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் வேறு வழங்கல்கள் படி செயல்படாவிட்டால் அவ்வாறான ஒரு மீறலின் விளைவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் எந்தவொரு இழப்புக்கும் கார்டு உறுப்பினரே பொறுப்பாவார்; மற்றும் (ii) கார்டு உறுப்பினரிடம் இருந்து ஐசிஐசிஐ வங்கிக்கு வரவேண்டிய அனைத்து தொகைகள், அந்த கோரிக்கை தேதியில் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டியது இருந்தால் கோரிக்கை விடுக்கப்பட்டதும் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டியது கார்டு உறுப்பினரின் பொறுப்பாகும். (பி) ரத்து /திரும்பப் பெறுதல்: கார்டு உறுப்பினர் கார்டு கணக்கை ரத்து செய்யும் கோரிக்கையை எப்போது வேண்டுமானாலும் எழுத்துப்பூர்வமாக ஐசிஐசிஐ வங்கி லிமிடெட், ஐசிஐசிஐ போன் பேங்கிங் சென்டர், ஐசிஐசிஐ பேங்க் டவர், 7வது தளம், சர்வே ண்: 115/27, பிளாட் எண். 12, நானக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஹைதராபாத் - 500032, இந்தியா, என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

(i) மேற்குறிப்பிட்ட அறிவிப்பு கார்டின் மேலே வலது பக்க மூலையில் ஹோலோகிராம் மற்றும் மேக்னடிக் ஸ்டிரிப்பை வெட்டி சேதப்படுத்திய நிலையில் (ஒரு ஆன்லைன்ட் கிரெடிட் கார்டு மற்றும் விசா எம்செக் கிரெடிட் கார்டு நீங்கலாக) மற்றும் ஐசிஐசிஐ வங்கியால் பெறப்படும் வரை நடைமுறைக்கு வராது. மேற்கூறியபடி இல்லாமல் பெறப்பட்டால், கார்டு கணக்கோ எந்தவொரு கணக்கோ ரத்து செய்யப்படாது.

(ii) கார்டு உறுப்பினர் கார்டை அழித்து விட்டதாக கூறிய பிறகு, ஆனால் ஐசிஐசிஐ வங்கியால் கார்டு பெறப்பட்டிருக்காத போது கார்டு மீது ஏற்பட்ட கட்டணங்கள், அது தவறான பயன்பாட்டின் விளைவாகவோ அல்லது அதின்றி மற்றும் கார்டு அழிக்கப்பட்டது ஐசிஐசிஐ வங்கிக்கு தெரிவிக்கப்பட்டது அல்லது இல்லை என்றாலும் கார்டு மீது ஏற்பட்ட கட்டணங்களை முழுமையாக செலுத்தும் பொறுப்பு கார்டு உறுப்பினருக்கு உண்டு.

(iii) ஐசிஐசிஐ வங்கியின் முழுமையான சுயவிருப்ப உத்தர சூழல்கள்படி எப்போது வேண்டுமானாலும் அறிவிப்புடன் அல்லது அறிவிப்பின்றி கார்டு கணக்கு மற்றும் கணக்கை ஐசிஐசிஐ வங்கி ரத்து செய்யலாம். கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கியின் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் நிர்வகிக்கப்படும் இரண்டு அல்லது அதிக கார்டு கணக்குகளை வைத்துள்ளார் மற்றும் ஒரு கார்டு கணக்கின் கீழ் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தவில்லை எனில் கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கியின் இதர அனைத்து கார்டு கணக்குகளின் கீழ் கிடைக்கும் கடன் வரம்பை முடக்கவும் அதே போல் அந்த மாதிரி அனைத்து கார்டு கணக்கு/கள் கீழ் கிடைக்கப்பெற்ற அந்த தனியுரிமைகள்/பயன்களை டீஃபால் கார்டு கணக்கு கார்டுதாரரால் ஒழுங்குமுறைப்படுத்தும் அந்த நேரம் வரை திரும்பப் பெறவும் ஐசிஐசிஐ வங்கிக்கு அதிகாரமுள்ளது என்பதை கார்டு உறுப்பினர் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார் மற்றும் ஏற்றுக் கொள்கிறார். மேலும் மேற்குறிப்பிட்டவற்றுக்கு கூடுதல் உதவி எதுவும் ஐசிஐசிஐ வங்கி வழங்க தேவையில்லை என்பதையும் கார்டு உறுப்பினர் ஒப்புக் கொள்கிறார் மற்றும் ஏற்றுக் கொள்கிறார்.

(iv) கார்டு கணக்கு ரத்து செய்யப்பட்டதும் மற்றும் ஐசிஐசிஐ வங்கி மற்றும் கார்டு உறுப்பினர் இடைவே முந்தைய உடன்பாடு எப்படி இருந்தாலும் நேர்மாறாக: (ஏ) அச்சமயம் நிலுவையில் இருக்கும் அனைத்து மொத்த கட்டணங்கள், ஏற்கனவே ஸ்டேட்மென்ட்டில் இடம்பெற்றது அல்லது பெறாதது மற்றும், (பி) ரத்து செய்தப் பிறகு ஏதாவது இயல்பான கட்டணங்களின் தொகை (சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை அறிவுறுத்தல் தேதியில் இருந்து), செலுத்த வேண்டிய பாக்கியாக இருக்கும் மற்றும் அவை இடம்பெற்றது போல் கார்டு உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டும் மற்றும் அவ்வப்போது உரித்தாகும் படி அந்த தேதியில் இருந்து உண்டான அந்த கட்டணங்கள் மீது வட்டி சேர்ந்துக் கொண்டே வரும்.

(V) ஐசிஐசிஐ வங்கிக்கு தனது சுயவிருப்ப முடிவின்படி கார்டுக்கு கொடுக்கப்பட்ட முன்னுரிமைகளை தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக விலக்கிக் கொள்ளும் உரிமை உள்ளது மற்றும்/அல்லது அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் அல்லது அதற்கு காரணம் எதுவும் கூறாமல் எப்போது வேண்டுமானாலும் கார்டை ரத்து செய்ய முடியும். தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டது என்றால், முன்னுரிமைகளை ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி திருப்பிக் கொண்டு வரலாம். நிரந்தரமாக விலக்கிக் கொள்ளப்பட்டது என்றால், உறுப்பினராகும் உரிமையை கார்டு உறுப்பினருக்கு நிரந்தரமாக மறுக்கும் உரிமையும் ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. இருப்பினும், விலக்குதல் என்பது (தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக) கார்டு உடன் இணைக்கப்பட்ட அனைத்து துணைப் பயன்கள், முன்னுரிமைகள் மற்றும் சேவைகள் தானாகவே விலக்கிக் கொள்ளப்பட சட்டப்படி வகைச் செய்கிறது. அவ்வாறு தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக திரும்பப் பெறப்பட்டால், அந்த விலக்குதலுக்கு முன்பு கார்டு மீது ஏற்பட்ட அனைத்து கட்டணங்களுக்கும், அதன்மேல் உரித்தாகும் வேறு அனைத்து கட்டணங்களும், ஐசிஐசிஐ வங்கி இதர வகையில் குறிப்பிடாத வகையில் அதனை செலுத்தும் முழுப் பொறுப்பு கார்டு உறுப்பினருக்கே இருக்கும். கார்டு திரும்பப் பெறப்படலாம் மற்றும் கார்டு மீது குறிப்பிடப்பட்ட செல்லத்தக்க காலம் பொருட்படுத்தப்படாமல் எப்போது வேண்டுமானாலும் கார்டு கணக்கு நிறுத்தப்படலாம். கார்டை ஒப்படைக்க கோரும் போது கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கியிடம், அல்லது அதன் பிரதிநிதியிடம் அவ்வாறே செய்ய ஒப்புக் கொள்கிறார். கார்டு மீதான முன்னுரிமைகள் விலக்கப்பட்ட அறிவிப்புக்கு பிறகு கார்டை பயன்படுத்துவது மோசடியாகும் மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்கு கார்டு உறுப்பினரை உட்படுத்துகிறது.

## VII. கட்டணங்கள் மற்றும் பணம் செலுத்தல்

கட்டணங்களில் பின்கூறப்பட்டுள்ள ஒவ்வொன்றும் உள்ளடங்கியது:

(ஏ) இயல்பான கட்டணங்களில் அடங்குபவை வருமாறு: ஒரு பரிவர்த்தனை குறிப்புப்படி ஏதாவது பொருட்கள் கொள்முதல் மற்றும்/சேவை செய்யப்பட்டதன் தொகை; ஒரு பரிவர்த்தனை குறிப்புக்கு இணங்க வழங்கப்பட்ட ஏதாவது ரொக்க அட்வான்ஸ் தொகை; ஒரு பரிவர்த்தனை குறிப்புப்படி முறையாக கார்டு கணக்கில் கழித்துக் கொள்ளும்படி ஐசிஐசிஐ வங்கியிடம் கார்டு உறுப்பினர் கோரியிருந்த எந்தவொரு தொகை

(பி) இயல்பற்ற கட்டணங்களில் அடங்குபவை வருமாறு: ஒரு கார்டு கணக்கு அல்லது ஒரு கார்டு தொடர்பாக ஐசிஐசிஐ வங்கியால் வசூலிக்கப்படும் எந்தவொரு கட்டணங்களில் சேர்க்கை, வருடாந்திர, மாற்று, புதுப்பித்தல், கையாளுதல், தாமத கட்டணம் மற்றும் வேறு கட்டணங்கள் உள்படும். சேர்க்கை / ஆண்டு கட்டணங்கள் ஐசிஐசிஐ வங்கியின் நடப்பிலுள்ள விகிதங்களில் கார்டு கணக்கில் இருந்து கழித்துக் கொள்ளப்படும். இந்த கட்டணங்கள் திருப்பிச் செலுத்தப்படாது. உறுப்பினர் புதுப்பிப்பு சம்பந்தமான ஒரு வருடாந்திர கட்டணம், கார்டின் முதலாம் ஆண்டு அன்று அல்லது அதற்கு முன்பாக கார்டு உறுப்பினரால் செலுத்தப்பட வேண்டும். பரிவர்த்தனைகளில் பிரத்யேக வகைகள் மீது சேவை கட்டணங்கள் ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு விதிக்கப்படலாம். இயல்பற்ற கட்டணங்களை தொகுக்கும் முறை ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது தெரியப்படுத்தப்படும்.

(சி) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஐசிஐசிஐ வங்கியின் ஏதாவது கட்டண தொகை பதிவேடு, வெளிப்படையான தவறு இல்லாதிருந்தால், அதுவே கார்டு உறுப்பினருக்கு இறுதியானதாக மற்றும் கட்டுப்படுத்துவதாக இருக்கும், மற்றும் ஐசிஐசிஐ வங்கியானது ஒரு இயல்பான கட்டணத்துக்கு இணக்கமாக ஐசிஐசிஐ வங்கி பேமென்ட் எதையேனும் செயல்படுத்தியிருந்தால் எந்தவொரு சூழலிலும் இறுதியானதாக இருக்கும். சட்டப்பூர்வ அனைத்து வரிகள், ஜிஎஸ்டி, வேறு அனைத்து தீர்வைகள், வரிகள் (முத்திரை வரி மற்றும் சம்பந்தப்பட்ட பதிவு கட்டணங்கள், ஏதாவது இருந்தால் கார்டு தொடர்புடையது உள்பட) மற்றும் வரிகள் (எப்படியிருப்பினும்

எந்தவொரு விவரணத்திலும்) அரசாங்கத்தால் அல்லது கார்டு சம்பந்தமாக அல்லது தொடர்பாக இன்னொரு ஆணையத்தால் அவ்வப்போது விதிக்கப்படலாம்.

(டி) தாமத அல்லது திருத்தப்பட்ட கட்டணங்கள்

ஏ) ஒரு ஹோட்டல், கார் வாடகை நிறுவனம், அல்லது சொகுசு கப்பல் பரிவர்த்தனை அல்லது வேறு ஏதாவது பரிவர்த்தனைகளில் தாமத அல்லது திருத்தப்பட்ட கட்டணங்களுக்கு பொறுப்பு ஏற்க கார்டு உறுப்பினர் சம்மதித்திருந்தால் தாமத அல்லது திருத்தப்பட்ட கட்டணங்களை ஒரு வணிகர் செயலாக்கம் செய்யலாம்.

பி) ஒரு தாமத அல்லது திருத்தப்பட்ட கட்டணம், சம்பந்தப்பட்ட பரிவர்த்தனைக்கான பரிவர்த்தனை தேதியில் இருந்து 90 காலண்டர் நாட்களுக்குள் கார்டு கணக்கில் செயலாக்கப்படும்.

சி) இந்த பரிவர்த்தனைகளில் அறை, உணவு அல்லது பானம் கட்டணங்கள், வரிகள், எரிபொருள், காப்பீடு, வாடகை கட்டணங்கள், வாடகை வாகனங்களுக்கு சேதம், பார்க்கிங் டிக்கெட்கள் மற்றும் வேறு போக்குவரத்து விதிமீறல்கள், மற்றும் ஒரு சொகுசு கப்பலில் பயணிக்கைகள் பொருட்கள் சேவைகள் பெற்றது உள்ளடங்கலாம்.

(இ) சர்வதேச செல்லத்தக்க கார்டுகள் தவிர்த்து வேறு கார்டுகளில் அந்நிய கரன்சி கட்டணங்களை பொறுத்த வரை, நேபாளம் மற்றும் பூடான் தவிர்த்து வேறு நாடுகளில் அன்னிய செலாவணியில் ஏற்பட்ட ஏதாவது கட்டணங்கள் எப்படியாக இருந்தாலும் கவனத்தில் எடுத்துக் கொள்ள ஐசிஐசிஐ வங்கி கடமைப்பட்டதல்ல மற்றும் எந்தவொரு விதத்திலும் பொறுப்பாகாது. முன்கூறப்பட்டதில் பாரபட்சம் எதுவுமின்றி, அந்த கட்டணங்களுக்கு ஐசிஐசிஐ வங்கியால் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அது கார்டு உறுப்பினருக்கு முழு வழிவகை செய்யப்பட்டதாக இருக்கும், மற்றும் அந்த கட்டணங்கள் ஏற்பட்டது அல்லது ஐசிஐசிஐ வங்கி பணம் செலுத்தியது தொடர்பாக கார்டு உறுப்பினரை எந்தவொரு பொறுப்பில் இருந்தும் விடுவித்ததாக கருதப்படாது. ஐசிஐசிஐ வங்கிக்கு முழு ஈட்டுறுதி செய்யப்பட வேண்டும் மற்றும் கார்டு உறுப்பினரால் செலுத்தப்பட்ட அந்த பேமென்ட்டின் அனைத்து விளைவுகளுக்கும் எதிராக பாதிப்பின்றி வைத்திருக்க வேண்டும்.

(எஃப்) ரயில்வேக்கள் உடன் பரிவர்த்தனைகள்:

ஒரு கிரெடிட் கார்டு பயன்படுத்தி ஒரு டிக்கெட் பதிவு செய்தால், உரித்தாகும் கூடுதல் கட்டணங்கள் ஏதாவது இருந்தால் அதனையும் சேர்த்து டிக்கெட் வாங்கியதற்கு கார்டு உறுப்பினர் பணம் செலுத்த வேண்டும். தொடர்ச்சியாக டிக்கெட் ஏதாவது ரத்து செய்யப்பட்டால் அதற்கான பணம் ஐசிஐசிஐ வங்கியால் பெறப்பட்டப் பிறகே அந்த தொகை (ரத்து கட்டணங்கள் கழித்து) கார்டு கணக்கில் வரவு வைக்கப்படும்.

எனினும், சார்ஜ் சிலிப்பை கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கிக்கு ரத்து செய்ய தேதியில் இருந்து 150 நாட்களுக்குள் டிக்கெட் வாங்கிய தேதியை உறுதிப்படுத்தும் ஒரு கடிதம், ரத்து செய்யப்பட்ட தேதி மற்றும் டிக்கெட்களை வாங்கியதற்கு டெபிட் செய்யப்பட்ட ஸ்டேட்மென்ட் நகல் உடன் சேர்த்து வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டால், கிரெடிட் கார்டு உறுப்பினரின் கார்டு கணக்கில் வைக்கப்படும். உரித்தாகும் பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படும்.

(ஜி) எரிபொருள் நிலையங்களில் பரிவர்த்தனைகள்:

எரிபொருளுக்கு பணம் செலுத்த கார்டை கார்டு உறுப்பினர் பயன்படுத்தும் போது, கட்டண இணைப்பில் குறிப்பிட்டவாறு ஒரு பரிவர்த்தனை கட்டணம் வசூலிக்கப்படும்.

ஆஃப் யுஎஸ் டெர்மினல்ஸ் மற்றும் எச்பிசிஎல் அவுட்லெட்களில் எரிபொருள் வாங்கினால், திருப்பிச் செலுத்தும் சர்சார்ஜ் வரியில் ஜிஎஸ்டி அடங்காது.

(எச்) கிரெடிட் கார்டை பயன்படுத்திய உடனே ஏற்பட்ட ஒரு கட்டணத்துக்கு கார்டு உறுப்பினரே பொறுப்பு. ஒரு பேமென்ட் தவணை தேதியில் செலுத்தப்படாமல் நிலுவைத் தொகை (பில் செய்யப்பட்டது அல்லது படாதது) எதுவும் இருந்தால், அந்த நிலுவைத் தொகைக்கு கட்டண இணைப்பில் குறிப்பிட்டப்படி கட்டணங்கள் பொருந்தும். இந்த கட்டணம் ஒரு சராசரி தினசரி பேலன்ஸ் முறையில் தொகுக்கப்படுகிறது மற்றும் பின்கூறப்பட்டுள்ள தேதிகளில் ஏதாவது ஒன்றின்படி விதிக்கப்படும்: கட்டணம் பொருட்கள் வாங்கியது அல்லது சேவைகள் பெற்றது சம்பந்தமானது என்றால், அது ஐசிஐசிஐ வங்கியின் பதிவேடுகளில் சேர்க்கப்பட்ட தேதிகளில் இருந்து. அந்த கட்டணம் பணம் எடுக்கப்பட்டது சம்பந்தமானது என்றால், பணம் எடுக்கப்பட்ட தேதியில் இருந்து பணத்தை ஐசிஐசிஐ வங்கி பெற்றுக் கொண்ட தேதி வரை.

(ஐ) அனைத்து கட்டணங்களுக்கும் கார்டு உறுப்பினருக்கு பொறுப்புக்கு பாரபட்சமின்றி உடனடியாக பணம் செலுத்தும் தவணை தேதியில் அல்லது அதற்கு முன்பு, ஸ்டேட்மென்ட்டில் தெரிவித்தப்படி, பேமென்ட் தவணை தேதியன்று அல்லது அதற்கு முன்பு ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தவணை தொகையை (எம்ஏடி) மட்டுமே செலுத்தும் தெரிவை கார்டு உறுப்பினர் பயன்படுத்தலாம். எம்ஏடி மொத்த பாக்கி தொகையில் 5% ஆகவோ, அல்லது ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி வேறு தொகையாகவோ இருக்கும். தவணை மூலமாக பணம் ஏதாவது திருப்பிச் செலுத்தப்பட்டால், ஸ்டேட்மென்ட் காலத்தின் போது பாக்கியுள்ள தவணைப் பணம் குறைந்தபட்ச பாக்கி தொகை உடன் சேர்க்கப்படும். மொத்த நிலுவைத் தொகை கடன் அல்லது ரொக்க வரம்புக்கு அதிகமாக இருந்தால், கடன் அல்லது ரொக்க வரம்பை தாண்டிய தொகையும் எம்ஏடி-யில் சேர்க்கப்படும்.

குறைந்தபட்ச பாக்கி தொகையில் முந்தைய ஸ்டேட்மென்ட்களில் செலுத்தப்படாத குறைந்தபட்ச பாக்கி தொகை, ஏதாவது இருந்தால் அதுவும் அதில் சேர்க்கப்படும். எந்த சூழலிலும் எம்ஏடி மட்டுமே செலுத்தப்பட்டது என்றால், பரிவர்த்தனைகள் தேதியில் இருந்து மொத்த பாக்கி தொகையில் மீதமுள்ள தொகைக்கு வட்டி வசூலிக்கப்படும். கார்டு உறுப்பினர் எம்ஏடி-யை மட்டுமே செலுத்தும் தெரிவை பயன்படுத்தியிருந்தால், அது பின்கூறப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கூடுதலாக உட்பட்டதாக இருக்கும்:

ஏ) ஸ்டேட்மென்ட்டை பெற்றதும், கார்டு உறுப்பினர் பணத்தை பின்கூறப்பட்டுள்ள ஏதாவது ஒரு வழியில் செலுத்த முடியும், அதாவது இன்ஃபினிட்டி பேமென்ட், காசோலை பேமென்ட், வரைவோலை, ரொக்க பேமென்ட், ஆட்டோ டெபிட் பேமென்ட், ஆர்டிஜிஎஸ் பேமென்ட், பே பேமென்ட் என்பதில் கிளிக் செய்தல் அல்லது ஐசிஐசிஐ வங்கிக்கு என்இஎஃப்டி பேமென்ட் என ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த பாக்கி தொகை அல்லது குறைந்தபட்ச பாக்கி தொகைக்கு (எம்ஏடி) சமமான அல்லது அதிகமான ஒரு தொகையை பேமென்ட் தவணை தேதியில் செலுத்த வேண்டும்.

பி) கார்டை பயன்படுத்தியதால் ஏற்பட்ட அனைத்து கட்டனங்களுக்கும் ஒரு சேவை கட்டணம் உண்டு இது (மேலே பிரிவு (எச்)) என்பதன் கீழ் குறிப்பிட்டவாறு இருக்கும்.

சி) எம்ஏடி-க்கு பணம் செலுத்தப்பட்டால் அல்லது மொத்த பாக்கி தொகைக்கு குறைவாக ஏதாவது தொகை செலுத்தப்பட்டால், வட்டி மற்றும் சேவைக் கட்டணமானது கொள்முதல் தேதியில் இருந்து மொத்த நிலுவைத் தொகை, மற்றும் அதனை தொடர்ந்து அடுத்த பேமென்ட் தேதி வரை புதியதாக வாங்கிய கொள்முதல்களுக்கு பொருந்தும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் போக கூடுதலாக, பேமென்ட் தவணை தேதிக்குள் குறைந்தபட்ச பாக்கி தொகை (எம்ஏடி) செலுத்தப்படவில்லை எனில் தாமத பேமென்ட் கட்டணங்கள் பொருந்தும். ஏதாவது எம்ஏடி அல்லது அதன்பகுதியாக செலுத்தப்பட்டது, கார்டு உறுப்பினரிடம் இருந்து ஐசிஐசிஐ வங்கியால்

அது பெறப்பட்டிருந்தால் பணம் செலுத்திய தேதிக்கு பிறகு வட்டி வசூலிக்கப்படுவது நிறுத்தப்படும்.

* ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி எந்த நேரத்திலும், முன்னறிவிப்பு எதுவுமின்றி, முன்கூறப்பட்டுள்ள பிரிவுகளில் விவரித்தப்படி எந்தவொரு கார்டு உறுப்பினர் சம்பந்தமாக எம்ஏடி-யை செலுத்தும் தெரிவை விலக்கிக் கொள்ளலாம்.

ஐசிஐசிஐ வங்கியால் இதரவகையில் ஒப்புக் கொண்டிருந்தால் ஒழிய, ஒரு குறிப்பிட்ட ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிடப்பட்ட தொகைகளுக்கு எதிராக கார்டு உறுப்பினரிடம் இருந்து பெறப்பட்ட ஏதாவது பேமென்ட்கள் பின்வரும் வரிசைமுறைப்படி அக்டோடர் 20, 2008ல் அமலில் உள்ளப்படி அந்த பாக்கிகளுக்கு ஒதுக்கப்படும்:

1. அனைத்து வரிகள், கட்டணங்கள், வட்டி, செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள்;
2. கிரெடிட் கார்டுகள் மீது வாங்கிய தனிப்பட்ட கடன்களுக்காக பணம் செலுத்தல் மற்றும் பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர் வசதியில் செலுத்தப்படும் தவணைகள்;
3. சில்லறை கொள்முதல்களுக்கு தவணைகளில் பணம் செலுத்தல் (சில்லறை கொள்முதல்களுக்கு பணம் செலுத்துவது தவணைகளாக மாற்றப்பட்டிருந்தால்);
4. ரொக்கமாக பணம் எடுத்தல் மற்றும் போன் பேங்கிங் வசதியில் டிராஃப்டுக்கு பணம் செலுத்தல்;
5. பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர் வசதிப்படி வேறு வகைகளுக்கு பணம் செலுத்தல், இவை கார்டு உறுப்பினரால் பெறப்பட்டிருக்கலாம்;
6. சில்லறை கொள்முதல்களுக்கு பணம் செலுத்தல்.

எப்படியிருந்தாலும் இங்கே மேலே குறிப்பிடப்பட்டதில் அடங்கியதில்: (i) ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி, கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கியில் இருந்து பெற்ற இதர வசதிகளை பொறுத்த வரை கார்டு உறுப்பினரால் செலுத்தக்கூடிய பாக்கிகள், ஏதாவது இருந்தால், அந்த பணம் செலுத்தல்களை கைப்பற்ற முடியும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்லது இதரவகையில் குறிப்பிட்ட வரிசைக்கிரமப்படி; (ii) நிதி கைப்பற்றல் உத்தரவில் ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்பி முடிவின்படி மாற்றம் செய்யலாம். அவ்வாறான நிதி கைப்பற்றலுக்கு பிறகு அதிகப்படியான தொகை, ஏதாவது இருந்தால், ஐசிஐசிஐ வங்கியா உருவாக்கப்படும் அடுத்த உடனடிய ஸ்டேட்மென்ட்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு எதிராக ஒதுக்கி வைக்கப்படும். ஒரு கார்டு கணக்கிற்கு ஒரு கடன் வரம்பை ஐசிஐசிஐ வங்கி ஒதுக்கும், இவை எந்த காலத்திலும் தாண்டபடக் கூடாது.

எனினும், மொத்த நிலுவைத்தொகை கடன் வரம்புக்கு அதிகமாக இருந்தால் அதிக தொகை மீது ஒரு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும்.

உறுப்பினராகி 12 மாதங்கள் நிறைவடைந்தப் பிறகு, கடன் வரம்பு மற்றும்/அல்லது ரொக்க வரம்பு ஒரு மீளாய்வு/ அதிகரிப்பு / குறைவுக்கு விண்ணப்பிக்கும் உரிமை (ஐசிஐசிஐ வங்கியால் வழங்கப்பட்டால்) கார்டு உறுப்பினருக்கு உள்ளது.

அந்த மீளாய்வை தொடர்ந்து மாற்றங்கள், ஏதாவது இருந்தால், கடன் வரம்பு மற்றும்/அல்லது ரொக்க வரம்பு ஐசிஐசிஐ வங்கியின் ஒருமித்த முடிவின்படி இருக்கும். கார்டுக்கு ஒதுக்கப்பட்ட கடன் வரம்பு மற்றும்/அல்லது ரொக்க வரம்பை எந்த நேரத்திலும் மீளாய்வு செய்யும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது மற்றும் கடன் வரம்பு மற்றும்/அல்லது ரொக்க வரம்பு அதிகரிப்புகள் மட்டும், ஏதாவது இருந்தால் கார்டு உறுப்பினரின் சம்மதத்துடன் ஐசிஐசிஐ வங்கியால் செயல்படுத்தப்படும்.

குறிப்பு: மொத்த நிலுவைத் தொகைக்கான பேமென்ட் பணம் செலுத்தும் தவணை தேதி அன்று அல்லது முன்பாக ஐசிஐசிஐ வங்கியால் பெறப்பட்டால், சேவை கட்டணம் எதுவும் விதிக்கப்படாது. எனினும்,

அனைத்து ரொக்கப் பரிவர்த்தனைகள் மற்றும் டிராப்ட்களுக்கு பரிவர்த்தனை செய்த தேதியில் இருந்து அதற்கான பேமென்ட் ஐசிஐசிஐ வங்கியால் பெறப்படும் வரை நடப்பு விகிதத்தில் சேவை கட்டணம் வசூலிக்கப்படும்.

(ஜே) கார்டு உறுப்பினர் தனது கிரெடிட் கார்டு பேமென்ட்களுக்கு தனது கார்டு கணக்கில் வரவு வைத்து மற்றும் அந்த தொகையை கழித்தல், மற்றும் ஐசிஐசிஐ வங்கியுடன் கார்டு உறுப்பினர் நிர்மாணித்துள்ள அது போன்ற வேறு கணக்கின் விளைவாக கார்டு உறுப்பினரால் கொடுக்கப்பட்ட எந்தவொரு அறிவுறுத்தல்களையும் செயல்படுத்த ஐசிஐசிஐ வங்கிக்கு உரிமையுள்ளது, ஆனால் கடமைப்பட்டதல்ல. கார்டு கணக்கில் உள்ள பாக்கி நிலுவை முழுவதும், கார்டு பரிவர்த்தனைகளில் நிலுவையில் உள்ள எந்தவொரு தொகையுடன் சேர்த்து செயல்படுத்தப்பட்டது ஆனால் கார்டு கணக்கில் இன்னமும் வசூலிக்கப்படாதது, உடனடியாக பாக்கியாகி விடும் மற்றும் அதனை முழுமையாக ஐசிஐசிஐ வங்கிக்கு கார்டு உறுப்பினர், அவருக்கு பின் வருபவர்கள், நியமனதாரர்கள், அவர் இறக்கும் பட்சத்தில் சட்டப்பூர்வ வாரிசுகள் (கிரெடிட் ஷீல்ட் பயன் அட்ஜஸ்ட் செய்யப்பட்டப் பிறகு*) அல்லது திவால் அல்லது கார்டு உறுப்பினர் வணிகத்தை மூடும் பட்சத்தில் செலுத்தப்பட வேண்டும். * விவரங்களுக்கு, தயவு செய்து பார்க்கவும் icicibank.com.

(கே) பாக்கி செலுத்தும் தேதிப்படி பணம் எதுவும் செலுத்த தவறி விட்டதை கார்டு உறுப்பினர் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார், அல்லது அது இதரவகையில் பாக்கியாக வந்திருக்கும் தேதிக்கு முன்பே பாக்கி அறிவிக்கப்பட்டிருந்தால் அல்லது ஐசிஐசிஐ வங்கியுடன் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் செயாநிலை எதையும் மேற்கொண்டிருந்தால் கார்டு உறுப்பினர் ஏதாவது நிதி/கிரெடிட்/இதர வகையில் அனுபவித்து வரும் நிலையில், பாரபட்சம் எதுவுமின்றி ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும்/அல்லது உரித்தாகும் சட்டங்களின் கீழ் தனக்குள்ள உரிமைகள் மற்றும் நிவாரணிகள் அனைத்தையும் அல்லது எதையேனும் பயன்படுத்தும்.

(எல்) இங்கே குறிப்பிட்டுள்ள ஐசிஐசிஐ வங்கியின் இதர உரிமைகளுக்கு பாதகம் இன்றி, பணம் செலுத்துவதில் தாமதம் இருக்கும் பட்சத்தில் கிரெடிட் கார்டுக்கு உரிய தனியுரிமைகளை விலக்கி கொள்ளும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது இதன்படி கிரெடிட் கார்டுக்கு மதிப்பளிக்க வேண்டாம் என்று வணிக நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி விடும். கார்டை முன்பு பயன்படுத்தியதற்கு உள்ள கட்டணங்களுக்கு பணம் வசூலிப்பதற்காக ஐசிஐசிஐ வங்கி தனது சுயமுடின்படி அல்லது அதன் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள்/முகவர்கள், கார்டு உறுப்பினரை தொடர்பு கொள்ளலாம் என்பதற்கு அவர் ஒப்புக் கொள்கிறார். மேலும் அனைத்து பாக்கிகள், தொடர்புள்ள மற்றும் சம்பவ விஷயங்களுக்கு அதாவது புதுப்பித்தல்/வேறு கார்டு தருவது, நகல் ஸ்டேட்ம்னெட் / சார்ஜ்-இன் ஸ்லிப், ரொக்க அட்வான்ஸ்க்கான பரிவர்த்தனை கட்டணம், வெளியூர் காசோலைகளுக்காக சேகரிப்பு கட்டணங்கள், ரிட்டர்ன் பேமென்ட்களுக்கு அபராத கட்டணம் மற்றும் போன்ற செலவுகள் உள்பட அனைத்து செலவுகளையும் (சட்டப்பூர்வ செலவுகள் உள்பட) செலுத்த கார்டு உறுப்பினர் ஒப்புக் கொள்கிறார், மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கை தொடங்கப்பட்டால் அனைத்து சட்டப்பூர்வ செலவுகள் மற்றும் வட்டியுடன் மொத்த தொகையை செலுத்தவும் ஒப்புக் கொள்கிறார். அனைத்து கட்டணங்கள் பற்றிய விவரங்களுக்கு கட்டண இணைப்பை பார்க்கவும்.

(எம்) கார்டுதாரர்/கார்டு உறுப்பினர் தான் கட்ட வேண்டிய பாக்கியை சம்பந்தப்பட்ட உரிய தேதிகளில் செலுத்தாத பட்சத்தில், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ள பல்வேறு உரிமைகள் மற்றும் நிவாரணிகள் போக கூடுதலாக, கார்டுதாரரின் /கார்டு உறுப்பினரின் முதலாளிகளை தொடர்பு கொண்டு கார்டுதாரர்/கார்டு உறுப்பினருக்கு கொடுக்கும் சம்பளம்/கூலியில் பிடித்தம் செய்து அத்தொகையை கார்டுதாரர்/கார்டு உறுப்பினர் பாக்கி வைத்துள்ள நிலுவைத் தொகை முழுமையாக தீர்க்கப்படும் வரை ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்தும்படி கேட்டுக் கொள்ளும் மாற்ற முடியாத உரிமை மற்றும் அதிகாரத்தை ஐசிஐசிஐ வங்கி கொண்டுள்ளது. இந்த பிடித்தங்கள் கார்டுதாரர்/கார்டு உறுப்பினரின் முதலாளிக்கு ஐசிஐசிஐ வங்கி தெரிவிக்கும் (மற்றும்

அறிவுறுத்தும்) அந்த தொகை, மற்றும் அந்த வரம்பில் இருக்கும். அவ்வாறான பிடித்தங்களுக்கு கார்டுதாரர்/கார்டு உறுப்பினர் ஆட்சேபனைகள் எதுவும் தெரிவிக்க முடியாது அல்லது உருவாக்க முடியாது. அவ்வாறு பிடித்தம் செய்து மற்றும் கார்டுதாரர்/கார்டு உறுப்பினரின் முதலாளி ஐசிஐசிஐ வங்கிக்கு பணத்தை செலுத்த ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ள முன்கூறப்பட்ட உரிமையை எந்த விதத்திலும் தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சட்டம் கார்டுதாரர்/கார்டு உறுப்பினர் மற்றும்/அல்லது கார்டுதாரர்கள்/கார்டு உறுப்பினரின் முதலாளிக்கு இல்லை அல்லது நிர்வகிக்கும் ஒப்பந்தமும் இல்லை.

## VIII. ரொக்கப்பணம் எடுத்தல்

ஐசிஐசிஐ வங்கி கிளைகளில்/ஆட்டோமேட்டட் டெல்லர் மெஷின்ஸ் (ஏடிஎம்கள்) குறிப்பிட்ட ஐசிஐசிஐ வங்கி அமைவிடங்களில் அல்லது ஒத்துப்போக்கும் வங்கிகள்/வேறு இடங்களில் ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது தீர்மானித்தப்படி மற்றும் கார்டு உறுப்பினருக்கு அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கி குறிப்பிட்டப்படி அவசரத்துக்கு பணம் எடுக்க கார்டை கார்டு உறுப்பினர் பயன்படுத்த முடியும். இந்த வசதியின் கீழ் எந்த நேரத்திலும் எடுக்கப்படும் மொத்த தொகை, ஒவ்வொரு கார்டு உறுப்பினருக்கும் ஐசிஐசிஐ வங்கியால் குறிப்பிடப்பட்ட ரொக்க வரம்புக்கு அதிகமாக இருக்கக் கூடாது.

கார்டு உறுப்பினர் ஏடிஎம்-ல் தான் செய்த பரிவர்த்தனைக்கான பதிவை தக்க வைக்க அவருக்கு உத்தரவிடப்படுகிறது. அனைத்து சார்ஜ்களிலும் ஒரு பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படும் மற்றும் அதன் பிறகு அனுப்பப்படும் ஸ்டேட்மென்ட்டில் கார்டு உறுப்பினருக்கு பில் செய்யப்படும். மேலும், அனைத்து பணம் எடுத்தலுக்கும் ஒரு சேவை கட்டணம் விதிக்கப்படும், இது அவ்வாறு பணம் எடுக்கப்பட்ட தேதியில் இருந்து ஐசிஐசிஐ வங்கி பணத்தை பெறுவது வரை நிலுவையில் இருக்கும் தொகைக்கு ஒரு சராசரி அன்றாடம் அடிப்படையில் கணக்கிடப்படும். இந்த சேவைக் கட்டணம் கார்டு கணக்கில் கழித்துக் கொள்ளப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரிவர்த்தனை கட்டணங்கள் மற்றும் சேவை கட்டணங்கள் திருப்பிச் செலுத்தத்தக்கது அல்ல. ஐசிஐசிஐ வங்கியால் குறிப்பிட்டப்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட கார்டு மூலம் ரொக்கப் பணம் எடுக்கும் வரம்பு கார்டு வழங்கப்பட்ட தேதியில் இருந்து முதல் நூற்று எண்பது நாட்களுக்கு (180) இருக்காது. முதல் 180 நாட்கள் காலாவதியான பிறகு, ரொக்க பணம் வரம்பை ஐசிஐசிஐ வங்கி தனது முழு சுயவிருப்பப்படி கார்டு உறுப்பினருக்கு கிடைக்கச் செய்யும் மற்றும் ஐசிஐசிஐ வங்கி அவ்வப்போதும் தெரிவிக்கும் அந்த விதிமுறைகளின்படி கிடைக்கச் செய்யப்படும்.

## IX. தொலைபேசியில் டிராப்ட் வசதி

ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம் மூலம் தொலைபேசி வழியே கார்டு கணக்கு மீது டிராஃப்ட் வழங்க கோர முடியும். கிடைக்கும் ரொக்க வரம்புக்கு மிகாத தொகைக்கு மட்டுமே அனைத்து டிராஃப்ட்களும் வழங்கப்படும் மற்றும் அனைத்து டிராஃப்ட்கள் மீது ஒரு பரிவர்த்தனை கட்டணம் விதிக்கப்படும் மற்றும் ஸ்டேட்மென்ட்டில் கார்டு உறுப்பினருக்கு பில் செய்யப்படும். பரிவர்த்தனை கட்டணம் போக கூடுதலாக அனைத்து டிராஃப்ட்களுக்கும் ஒரு சேவை கட்டணமும் வசூலிக்கப்படும் மற்றும் இதனை டிராஃப்ட் வழங்கப்பட்ட தேதியில் இருந்து கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கிக்கு திருப்பிச் செலுத்தும் தேதி வரை செலுத்தப்பட வேண்டும். ஐசிஐசிஐ வங்கியின் நடப்பிலுள்ள விகிதத்தின் அடிப்படையில் சேவைக் கட்டணம் கார்டு கணக்கில் இருந்து கழிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ள பரிவர்த்தனை கட்டணங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் திருப்பிச் செலுத்தக்கது அல்ல. இந்த வசதியை முன்னறிவிப்பு எதுவுமின்றி மற்றும் கார்டு உறுப்பினருக்கு பொறுப்பின்றி எந்த நேரத்திலும் நிறுத்தி விடும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. வழங்கப்பட்ட டிராஃப்ட், ஐசிஐசிஐ வங்கியின் பதிவேடுகளில் கடைசியாக பதிவு செய்யப்பட்ட கார்டு உறுப்பினரின் அஞ்சல் முகவரிக்கு தபாலில்/கூரியரில் அனுப்பப்படும். ஐசிஐசிஐ வங்கி - வாடிக்கையாளர் சேவை மையத்தால் கோரிக்கை பெறப்பட்ட நேரத்தில் இருந்து 4 வேலை நாட்களுக்குள் டிராஃப்ட்டை விநியோகிக்க அனைத்து முயற்சிகளும் செய்யப்பட்டாலும், இது சம்பந்தமாக உறுதி எதுவும் கொடுக்கப்படாது. டிராஃப்ட்கள்

டெலிவரி செய்யப்படாதது அல்லது டெலிவரி செய்வதில் தாமதம் அல்லது டிராஃப்ட்கள் பெறப்படாததற்கு ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது. ஒரு டிராஃப்ட் தொலைந்து விட்டால் அல்லது ரத்து செய்யப்பட வேண்டும் என்றால், உடனடியாக ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்துக்கு கண்டிப்பாக தெரிவிக்கப்பட வேண்டும். கார்டு உறுப்பினர் முறையாக நிரப்பிய ஒரு ஈட்டுறுதி (ஐசிஐசிஐ வங்கியால் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு வடிவில்) பெறப்பட்டப் பிறகு டிராஃப்ட்டின் முதன்மைத் தொகையை மட்டுமே கார்டு கணக்கில் வரவு வைப்பதன் மூலம் ஐசிஐசிஐ வங்கி திருப்பிச் செலுத்தும். டிராஃப்ட்களை ரத்து செய்ய வேண்டுமெனில், டிராஃப்ட் திருப்பி அனுப்பப்பட வேண்டும் மற்றும் ஒரு ரத்து கட்டணம் விதிக்கப்படும். ஒரு டிராஃப்ட் காணாமல் போனால்/திருடப்பட்டால், மாற்றி வழங்க அல்லது இழப்பீடு செய்ய ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது.

## X. காப்பீடு பயன்

காப்பீடு நிறுவனத்துடன் ஒரு டை அப் செய்திருப்பதன் மூலம் ஐசிஐசிஐ வங்கி அவ்வப்போது பல்வேறு காப்பீடு பயன்களை கார்டு உறுப்பினருக்கு வழங்கலாம். உரிமை கோரும் அனைத்து சூழல்களிலும், உரிமை கோரலுக்கு செட்டில்மென்ட் செய்யும் முழுப் பொறுப்பு காப்பீடு நிறுவனமாகும், மற்றும் இழப்பீடு, இழப்பீட்டை மீட்டல், க்ளெய்களை செயலாக்கம் செய்தல் அல்லது வேறு ஏதாவதொரு காரணம் எப்படியிருப்பினும் எந்த விதத்திலும் ஐசிஐசிஐ வங்கியை கார்டு உறுப்பினர் பொறுப்பாக்கக் கூடாது. கீழேயுள்ள பத்தியின் விதிகளுக்கு உட்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட பாக்கிகளை கார்டு உறுப்பினரின் நியமனதாரருக்கு யார் பெயர் மற்றும் கையொப்பம், முறையாக சாட்சியம் அளிக்கப்பட்டு கார்டு உறுப்பினரால் காப்பீடு நிறுவனத்துக்கு நேரடியாகவோ அல்லது ஐசிஐசிஐ வங்கி மூலமாகவோ அனுப்பப்பட்ட காப்பீடு வாரிசு படிவத்தில் தோன்றுகிறதோ அவருக்கு பாக்கிகளை கொடுப்பதன் மூலம் தனது பொறுப்புகள் அனைத்தையும் காப்பீடு நிறுவனம் விலக்கிக் கொள்கிறது. வாரிசுவில் மாற்றம் எதுவும் இருந்தால் அதனை எழுத்துப்பூர்வமாக கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கிக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் காப்பீடு பயன்கள், கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கியின் ஒரு கார்டு உறுப்பினராக இருக்கிறார் மற்றும் நீடிக்கிறார் அவரது கார்டு கணக்கு சீராகவும் முறையாகவும் உள்ளது மற்றும் பணம் கட்ட தவறிய நிகழ்வு எதுவும் இல்லை என்றிருக்கும் வரை மட்டுமே கார்டு உறுப்பினருக்கு கிடைக்கும் என்பதையும் கார்டு உறுப்பினர் ஏற்றுக் கொள்கிறார்.

காப்பீடு க்ளெய்மில் கிடைப்பவை, ஐசிஐசிஐ வங்கியின் உத்தரவுப்படி கார்டின் மீது நிலுவையில் இருக்கும் அனைத்து பொறுப்புகளும் திருப்திகரமாக கார்டு உறுப்பினரால் நிறைவேற்றப்படும் வரை காப்பீடு நிறுவனத்தால் மூன்றாவது தரப்பு பாதுகாப்பில் வைக்கப்படலாம் என்பதையும் கார்டு உறுப்பினர் ஏற்றுக் கொள்கிறார். கார்டு வசதி எந்தவொரு காரணத்துக்காகவும் ரத்து செய்யப்படும் பட்சத்தில், அந்த காப்பீடு பயன்கள் அனைத்தும் தன்னியல்பாகவும் மற்றும் மெம்பர்ஷிப் நிறுத்தப்பட்ட அந்த தேதியிலிருந்து அது நிமித்தமாகவும் நிறுத்தப்படும். இந்த காப்பீடு பயன்களை ஐசிஐசிஐ வங்கி எந்த நேரத்திலும் (முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமல் தனது சுயவிருப்ப முடிவின்படி) மாற்றலாம், சஸ்பெண்ட் செய்யலாம், திரும்பப் பெறலாம் அல்லது ரத்து செய்யலாம் மற்றும் இந்த பயன்களை தொடர்ந்து வழங்க வேண்டும் என ஐசிஐசிஐ வங்கியை பிணைக்கும் பொறுப்பு எதுவுமில்லை.

## XI. கிரெடிட் கார்டுகள் தொலைதல், திருடப்படுதல் அல்லது தவறாக பயன்படுத்துதல்

ஒரு கார்டு தொலைந்தால் அல்லது திருடப்பட்டால், அது பற்றி உடனடியாக ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்துக்கு தெரிவிக்க வேண்டும். எனினும், திருட்டு காரணமாக கார்டு தொலைந்து விட்டால் உள்ளூர் காவல் நிலையத்தில் கார்டு உறுப்பினர் கண்டிப்பாக புகார் செய்து அதன் ஒரு நகல் பிரதியை ஐசிஐசிஐ வங்கி கேட்டுக் கொண்டால் வழங்க வேண்டும். ஐசிஐசிஐ வங்கி போதுமான சரிபார்த்தலுக்கு பிறகு கார்டு கணக்கை நிறுத்தி வைக்கும் மற்றும் அது சம்பந்தமான அனைத்து வசதிகளையும் ரத்து செய்யும் மற்றும் இதனால் கார்டு உறுப்பினருக்கு ஏற்படும் எந்த அசௌகரியத்துக்கும் பொறுப்பாகாது. கார்டு தொலைந்து விட்டது, திருடு போய்விட்டது அல்லது

சேதமடைந்து விட்டது என்று ஒரு தடவை தெரிவிக்கப்பட்டு விட்டால், அதன்பிறகு கார்டு கிடைத்து விட்டால் கூட மறுபடியும் கார்டை பயன்படுத்தக் கூடாது என்பதை கார்டு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு கார்டு தொலைந்து விட்டது, சேதமடைந்தது அல்லது திருடப்பட்டதாக கார்டு உறுப்பினர் அறிவிக்கிறார் என்றால், அது கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது சேதமடையாத நிலையில் இருப்பதாக கூறப்பட்டாலும் கூட அதனை மறுபடியும் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறான சூழல்களில், கார்டு உறுப்பினர் கார்டை 4 துண்டுகளாக வெட்ட வேண்டும் மற்றும் அது ரத்து செய்யப்பட ஐசிஐசிஐ வங்கிக்கு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். கார்டு பாதுகாப்புக்கு கார்டு உறுப்பினரே பொறுப்பாவார் மற்றும் கார்டு தவறாக பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். கார்டு தொலைந்தால் / திருடப்பட்டால் /அழிக்கப்பட்டால் மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க கார்டு உறுப்பினர் தவறி விட்டால் என்று ஐசிஐசிஐ வங்கி தீர்மானிக்கும் பட்சத்தில் மற்றும் அவை கேள்வி கேட்கத்தக்கது என்றால் தொலைந்த, திருடப்பட்ட அல்லது சேதமடைந்த கார்டு மீதான நிதி பொறுப்பு கார்டு உறுப்பினரை சேர்ந்தது மற்றும் கார்டு கணக்கு ரத்து செய்யப்பட கூட வழிவகுக்கலாம்.

கார்டு தொலைந்தது/திருடப்பட்டது/சேதமடைந்தது பற்றி தெரிவித்தப்பிறகு மற்றும் ஐசிஐசிஐ வங்கி கார்டு கணக்கை முடக்கி வைத்ததும் செய்யப்படும் அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் எதுவும் கார்டு உறுப்பினரின் பொறுப்பாகாது. கார்டு தொலைந்தது/திருடப்பட்டது/சேதமடைந்தது தெரிவித்தப்பிறகு கார்டு மீது செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையின் பொறுப்பு வங்கியை சேர்ந்தது. எனினும், குறிப்பிட்ட கார்டு தொலைதல்/திருடு போகுதல்/தவறாக பயன்படுத்தியது தெரிவிக்கப்பட்டப் பிறகு கார்டு பற்றி தெரிவித்தது மற்றும்/அல்லது கார்டு மீது செய்யப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான நேரத்தில் விவகாரம் எதுவும் இருந்தால், சர்ச்சைக்குள்ளான பரிவர்த்தனையின் நேரம் மற்றும்/அல்லது உண்மைத்தன்மையை உறுதி செய்யும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. கார்டு உறுப்பினரின் நலனை பாதுகாக்க ஏதுவாக மற்றும் கார்டு கணக்கு மீது எந்த விதத்திலும் தவறான பயன்பாட்டை தவிர்க்க சமரசம் செய்யப்பட்ட அபாயம் இருந்தால் கிரெடிட் கார்டை முடக்கும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. முடக்கப்பட்ட கார்டை எந்தவொரு பரிவர்த்தனை/களுக்கு கார்டு உறுப்பினரால் பயன்படுத்த முடியாது மற்றும் 7 (ஏழு) வேலை நாட்களுக்குள் ஒரு மாற்று கார்டை பெறலாம்.

சாத்தியமாகும் மோசடி அபாயம் பற்றி ஐசிஐசிஐ வங்கி தெரிவித்தப்பிறகும் கார்டு உறுப்பினர் கார்டு முடக்கத்தை நீக்க வேண்டும் என்று கோரினால், கார்டு மோசடியாக அல்லது இதரவகையில் பயன்படுத்தியது சம்பந்தமாக அதன் பிறகு தெரிவிக்கப்படும் எந்தவொரு மோசடி பரிவர்த்தனைகளுக்கு எந்த விதத்திலும் ஐசிஐசி வங்கி பொறுப்பாகாது.

## XII. பொறுப்பு விடுவித்தல்

ஐசிஐசிஐ வங்கி மற்றும் இந்த விதிகளில் கிடைக்கும் நிவாரணங்களுக்கு பாரபட்சமின்றி, பின்கூறியபடி கார்டு உறுப்பினருக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதத்துக்கு எப்படியிருப்பின் ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது:

ஏ) வழங்கப்பட்ட ஏதாவது பொருட்கள் அல்லது சேவைகளில் ஏதாவது குறைபாடு;

பி) ஒரு கார்டுக்கு மதிப்பளிக்க அல்லது ஏற்றுக் கொள்ள எந்தவொரு நபர்/வணிக நிறுவனம் மறுத்தல்;

சி) ஏதாவது கணினி டெர்மினல் தவறாக செயல்படுதல்;

டி) ஒரு கார்டு உறுப்பினர் தவிர்த்து வேறு நபர் யாரேனும் பரிவர்த்தனை குறிப்பு கொடுப்பது;

இ) கார்டை ஐசிஐசிஐ வங்கி அல்லது அதன் பிரதிநிதிகள் தவிர்த்து வேறு யாருக்காவது கார்டு உறுப்பினர் கொடுத்தல்;

எப்) கார்டு முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதி தேதிக்கு முன்பு கார்டை திருப்பிக் கேட்டு வாங்கும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது;

ஜி) எந்தவொரு கார்டு மற்றும் கார்டு கணக்கை ரத்து செய்யும் உரிமையை ஐசிஐசிஐ வங்கி பயன்படுத்தலாம்;

எச்) கார்டு உறுப்பினரின் கிரெடிட் பண்பு மற்றும் மரியாதைக்கு ஏதாவது பாதிப்பு கார்டை மீள்சொந்தமாக்கிக் கொண்டதால் ஏற்பட்டதாக கூறப்படுவது மற்றும்/அல்லது, அதனை திருப்பிச் செலுத்தும் ஏதாவது கோரிக்கை அல்லது ஏதாவது வணிக நிறுவனம்/மெயில் ஆர்டர் நிறுவனம் கார்டை ஏற்றுக் கொள்ள மறுப்பது;

ஐ) ஏதாவது தவறான ஸ்டேட்மென்ட், தவறாக கொடுத்தல், ஐசிஐசிஐ வங்கி வெளிப்படுத்திய ஏதாவது விவரங்களில் பிழை அல்லது விடுபட்டிருத்தல்; நிலுவையில் உள்ள பாக்கியை செலுத்துவதற்கான ஒரு கோரிக்கை அல்லது க்ளெய்ம் ஐசிஐசிஐ வங்கி அல்லது ஐசிஐசிஐ வங்கி சார்பாக செயல்படும் எந்தவொரு நபரால் கார்டு உறுப்பினருக்கு செய்யப்பட்டால், அவ்வாறான கோரிக்கை அல்லது க்ளெய்ம் ஒரு அவதூறு செயலாக அல்லது ஒரு பாரபட்சமற்ற செயலாக இருக்காது அல்லது கார்டு உறுப்பினரின் நடத்தையை எந்த விதத்திலும் பிரதிபலிக்காது.

கிரெடிட் கார்டு வசதிக்கு விண்ணப்பிக்கும் போது கார்டு உறுப்பினர் வழங்கிய மொபைல் எண் அல்லது மின்னஞ்சலில் அலர்ட்களை பெறும் வசதியை வழங்குவது உள்ளக்கட்டமைப்பு, ஐசிஐசிஐ வங்கி அல்லது இதரவகையில் சேவை வழங்குபவர்களின் இணைப்பு விஷயம் மற்றும் சேவைகளை பொறுத்தது என்பதை கார்டுதாரர் ஏற்றுக் கொள்கிறார். ஐசிஐசிஐ வங்கி அனுப்பும் அலர்ட்களின் நேரவரம்புகள், துல்லியத்தன்மை மற்றும் படிக்கக்கூடியது ஐசிஐசிஐ வங்கி ஈடுபடுத்தியுள்ள வேறு சேவை வழங்குபவர்கள் அல்லது இதரவகையில் பாதிக்கும் காரணிகளை பொறுத்தது என்பதை கார்டுதாரர் ஏற்றுக் கொள்கிறார். அலட்ர்கள் வழங்கப்படாதது அல்லது தாமதமாக வழங்கப்பட்டது, பிழை, கார்டுதாரர்களுக்கு அலர்ட்கள் வழங்கும் பரிமாற்றத்தின் போது காணாமல் போவது அல்லது ஒழுங்கின்மை போன்றவற்றுக்கு ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது.

## XIII. பேலன்ஸ் டிரான்ஸ்பர் வசதி

‘‘வசதி’’ என்பது கார்டு உறுப்பினருக்கு வேறு வங்கிகளின் கிரெடிட் கார்டில் நிலுவையில் இருக்கும் அந்த தொகையை ஐசிஐசிஐ வங்கியின் சுயவிருப்ப முடிவின்படி கார்டு உறுப்பினரின் கார்டுக்கு, கிடைக்கும் கடன் வரம்புக்கு மிகாமல் ஐசிஐசிஐ வங்கி வழங்கியது/வழங்க ஒப்புக் கொண்டது என அர்த்தமாகிறது.

‘‘ஈஸி பிடி’’ என்றால் பணத்தை திருப்பிச் செலுத்தும் முறையை கார்டு உறுப்பினர் மாத தவணைகளாக மாற்றும் வசதி என அர்த்தமாகிறது.

‘‘இஎம்ஐ’’ அல்லது ‘‘ஈக்குவேட்ட மன்த்லி இன்ஸ்டால்மென்ட்’’ கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகை சமமாக மாதாந்திர தவணையாக பிரிக்கப்பட்டது என அர்த்தமாகிறது, இது அசல் தொகை மற்றும் அதன் மீதனான வட்டி உள்ளடங்கியது.

‘‘வட்டி இல்லாத பேலன்ஸ் டிரான்ஸ்பர்’’ என்றால் ஐசிஐசிஐ வங்கி குறிப்பிட்ட ஒரு வரையறுத்த காலத்துக்கு 0% வட்டி விகிதத்தில் கார்டுதாரர் அந்த வசதியை பெறுகிறார் என அர்த்த்மாகிறது.

‘‘எல்டிபிடி’’ (லைப்-டைம் பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர்) என்றால் வசதியை பெறும் நேரத்தில் ஐசிஐசிஐ வங்கி குறிப்பிட்ட ஒரு விகிதத்தில் வரையறுக்கப்படாத ஒரு கால வரம்புக்கு வசதியை கார்டுதாரர் பெறுகிறார் என அர்த்தமாகிறது.

### வசதியை பயன்படுத்துதல்:

இந்த வசதியின் கீழ், கார்டுதாரருக்கு வேறு வங்கிகள்/நிறுவனங்கள் வழங்கிய கிரெடிட் கார்டுகளில் நிலுவையில் இருக்கும் பாக்கி அனைத்தையும் அல்லது பகுதியாக தனது கார்டு கணக்கிற்கு கார்டு உறுப்பினர் மாற்றம் செய்ய ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி அனுமதிக்கலாம். அவ்வாறான மாற்றம் ஐசிஐசிஐ வங்கியில் கடைசியாக பதிவு செய்யப்பட்ட கார்டுதாரரின் அஞ்சல் முகவரிக்கு ஒரு கேட்பு வரைவோலையாக அனுப்பப்படும், கார்டை வழங்கிய வேறு வங்கி/நிறுவனத்தில் கார்டு உறுப்பினருக்கு உள்ள கார்டு கணக்கில் வரவு வைக்கப்பட அனுமதிக்கப்பட்ட தொகைக்கு வரைவோலை இருக்கும்.

இந்த வசதியை ஐசிஐசிஐ வங்கி வழங்கிய/வழங்க ஒப்புக் கொண்ட பிறகு கார்டு உறுப்பினரின் வேறு கிரெடிட் கார்டை பொறுத்த வரை ஏற்பட்ட அதிக பாக்கி பேமென்ட்கள் அல்லது சேவை கட்டணத்துக்கு ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது. வேறு கிரெடிட் கார்டு வழங்கிய வங்கி/நிறுவனத்துக்கு மாற்றம் செய்த தொகை வேறு கிரெட் கார்டு வழங்கிய வங்கி/நிறுவனத்தால் பெறப்படும் வரை பேமென்ட்களை தொடர்ந்து செலுத்தும் பொறுப்பு கார்டு உறுப்பினரை சேர்ந்தது. மேலும், கார்டு உறுப்பினருக்கு வேறு கிரெடிட் கார்டு வழங்கும் வங்கி/நிறுவனத்தில் உள்ள கார்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டதை ஒரு எதிர்கால ஸ்டேட்மென்ட்டிலும் கார்டு உறுப்பினர் பெறுவார். இந்த வசதி முதன்மை கார்டு உறுப்பினர் அதே போல் துணை கார்டு உறுப்பினருக்கு கிடைக்கும், இது கிடைக்கும் ரொக்க வரம்பு மற்றும்/அல்லது கடன் வரம்புக்கு உட்பட்டது மற்றும் இவ்வசதியை கோரும் கார்டு உறுப்பினருக்கு வழங்கப்படும்.

கார்டு மீது ரொக்க வரம்பு மற்றும்/அல்லது கடன்-வரம்பு கார்டு உறுப்பினருக்கு வழங்கப்பட்ட வசதியின் தொகைக்கு முடக்கப்படும். கட்டண இணைப்பில் குறிப்பிட்டுள்ளப்படி கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கியால் தெரிவிக்கப்பட்ட சதவீதம் வரை இவ்வசதிக்காக திரும்பத்தரப்படாத செயலாக்க கட்டணத்தை கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டியதிருக்கும். செயலாக்கக் கட்டணம் மீது ஜிஎஸ்டி மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் நடப்பிலுள்ள விகிதங்கள் படி வட்டி தொகைக்கு ஜிஎஸ்டி பொருந்தும். அந்த தொகை குறிப்பிட்ட மாதத்துக்கான ஸ்டேட்மென்ட்டில் பிரதிபலிக்கும். கார்டு உறுப்பினர் இந்த வசதியை பெற ஐசிஐசிஐ வங்கிக்கு விண்ணப்பித்ததும், இந்த வசதி பெறப்பட்ட வேறு வங்கியின் கிரெடிட் கார்டுக்கு ரூ. பத்து (10) அனுப்பி ஐசிஐசிஐ வங்கி சோதனை பரிமாற்றம் பார்க்கும். இவ்வாறு அனுப்பியது வெற்றியடைந்தால், பேலன்ஸ் டிரான்ஸ்பர் பரிவர்த்தனை ஐசிஐசிஐ வங்கியின் சுயவிருப்ப முடிவின் வேறு விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயலாக்கப்படும்.

## திருப்பிச் செலுத்தல்:

இவ்வசதி ஈஸி பிடி ஆக இருந்தால், கார்டு உறுப்பினர் வட்டி மற்றும் ஃபேசிலிட்டியை மாதாந்திர தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். மாற்றும் வசதியை வழங்கிய நேரத்தில் கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கியால் தெரிவிக்கப்பட்ட மற்றும் அதன் பிறகு கார்டு உறுப்பினருக்கு தெரிவித்தப்படி அந்த விகிதத்தில் வட்டி இருக்கும். ஈஸி பிடி சம்பந்தமான கோரிக்கை கார்டு உறுப்பினரிடம் இருந்து உறுதி செய்யப்பட்ட நேரத்தில் இருந்து வட்டி கணக்கிடப்படும். இஎம்ஐ தொகை உடன் வசதியின் வேறு விவரங்களும் (வட்டி விகிதம் உள்பட) கார்டு உறுப்பினருக்கு அவரது அஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கப்படும்.

ஒரு குறிப்பிட்ட மாதத்துக்கான இஎம்ஐ தொகை அடுத்து வரும் அந்த குறிப்பிட்ட மாதத்துக்கான ஸ்டேட்மென்ட்டில் பிரதிபலிக்கப்படும். கார்டு உறுப்பினரின் கார்டு கணக்கில் இருந்து அந்த குறிப்பிட்ட மாதத்துக்கு உரிய இஎம்ஐ தவணை தொகையை, ஸ்டேட்மென்ட் மூலம் கார்டு உறுப்பினருக்கு தெரிவித்தப்படி கழித்துக் கொள்ளும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது / கார்டு உறுப்பினரால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. கார்டு உறுப்பினர் திருப்பிச் செலுத்தியதும், கார்டு உறுப்பினரால் இஎம்ஐ திருப்பிச் செலுத்திய தொகையின் அளவுக்கு ரொக்க வரம்பு/கடன் வரம்பு மீண்டும் நிறுவப்படும்.

பேமென்ட் செலுத்தும் தேதியில் ஒரு குறிப்பிட்ட மாதத்துக்கான இஎம்ஐ-யின் ஒட்டுமொத்த தொகையை ஸ்டேட்மென்ட்டில் சுட்டிக்காட்டியபடி செலுத்த கார்டு உறுப்பினருக்கு உத்தரவிடப்படும் மற்றும் அந்த தொகை முன்னெடுத்துச் செல்லப்பட/அடுத்த ஸ்டேட்மென்ட்டில் சேர்க்கப்பட அனுமதிக்கப்படாது. குறிப்பிட்டப்படி பேமென்ட் உரிய தேதியில் செலுத்தப்படவில்லை என்றால், கார்டு உறுப்பினர் பணம் செலுத்தவில்லை என அர்த்தமாகும் மற்றும் அந்த தொகையை அவரது கடன் மீது விதிக்கத்தக்க வட்டி மற்றும் கட்டண இணைப்பில் குறிப்பிட்டப்படி தாமத பேமென்ட் கட்டணங்கள் உடன் சேர்த்து கட்டும் பொறுப்பு கார்டு உறுப்பினருக்கு உள்ளது.

ஈஸி பிடி தவிர்த்து இதர சூழல்களில் கடன் தொகையானது மொத்த பாக்கி தொகை மற்றும்/அல்லது இஎம்ஐ தொகை பாக்கியின் பகுதியாக இருக்கும் மற்றும் பிரிவு VI மற்றும் XXXIV ல் முறையே வழங்கப்பட்டுள்ள விதத்தில் திருப்பிச் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

ஒருவேளை கார்டு உறுப்பினர் வட்டியில்லா பேலன்ஸ் டிரான்ஸ்பர் வசதியை பெற்றிருந்தால், மாற்றம் செய்யப்பட்ட முதல் பேலன்ஸ் தொகைக்கு மட்டுமே குறிப்பிட்ட காலவரம்புக்கு வட்டி கிடையாது. ஒருவேளை, வசதியை பெற்றப் பிறகு மொத்த பாக்கி தொகையில் பகுதியாக மட்டுமே பணத்தை கார்டு உறுப்பினர் செலுத்துகிறார் என்றால், கார்டு உறுப்பினரால் செலுத்தப்பட்ட தொகை மட்டுமே ஒதுக்கி வைக்கப்படும் மற்றும் வட்டியும் சேவை கட்டணமும் மேலே பிரிவு VI (I)ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைப்படி விதிக்கப்படும்.

ஒரு வேளை கார்டு உறுப்பினர் எல்டிபிடி வசதியை பெறுகிறார் எனில், ஐசிஐசிஐ வங்கியால் குறிப்பிடப்பட்ட விகிதம் டிரான்ஸ்பர் செய்யப்பட்ட அசல் நிலுவைத் தொகைக்கு மட்டுமே பொருந்தும். வசதியை பெற்றப் பிறகு மொத்த பாக்கி தொகைக்கு பகுதியாக பேமென்ட் செலுத்தப்பட்டால், கார்டு உறுப்பினரால் செலுத்தப்பட்ட தொகை ஒதுக்கப்படும் மற்றும் வட்டியும் சேவை கட்டணமும் மேலும் பிரிவு VI (I) (சி)ல் குறிப்பிடப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைப்படி விதிக்கப்படும். குறைந்தபட்ச பாக்கி டொகையை கணக்கிடும் போது மாற்றம் செய்யப்பட்ட அசல் பாக்கி தொகையில் 5% பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும்.

## வசதியை முன்கூட்டியே முடித்தல்:

வசதி ஈஸி பிடி ஆக இருக்கும் பட்சத்தில், பாக்கியை திருப்பிச் செலுத்தும் காலம் முன்பே வசதி முன்முடிக்கப்பட்டால்/ரத்து செய்யப்பட்டால், அவ்வாறு முன்மூடிய/ரத்து செய்யப்பட்ட நேரத்தில் நிலுவையில் உள்ள ஃபேசிலிட்டி தொகையை அதன் மீதான வட்டி மற்றும் இதர அனைத்து பணமும் ஃபேசிலிட்டி சம்பந்தமானது கார்டு உறுப்பினரால் உடனடியாக திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். முன்முடிக்கும் வசதியை பெற ஐசிஐசிஐ வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்வதன் மூலம் கார்டு உறுப்பினர் எந்த நேரத்திலும் ஃபேசிலிட்டியை முன்முடிக்கலாம். ஃபேசிலிட்டியை வழங்கும் நேரத்தில் கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கி அனுப்பிய தகவலில் சுட்டிக்காட்டியபடி அவ்வாறான முன்முடிக்கும் கட்டணங்களை கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டும்.

ஐசிஐசிஐ வங்கி அனைத்து உரிமைகள் மற்றும் நிவாரணிகளுக்கு பாரபட்சமின்றி, இஎம்ஐ-யை தொடர்ச்சியாக இரண்டு மாதங்களுக்கு செலுத்தாவிட்டால் கடனை உடனடியாகம் அதன் மீதான வட்டி மற்றும் கடன் சம்பந்தமான வேறு அனைத்து பணத்தையும் திருப்பிச் செலுத்த கார்டு உறுப்பினரை அழைக்கும் உரிமை உள்ளது மற்றும் அவ்வாறு கேட்கப்பட்டதும் அந்த தொகை அனைத்தையும் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு கார்டு உறுப்பினருக்கு உள்ளது.

## கடனை ரத்து செய்தல்:

கடன் வழங்கியதில் இருந்து 15 நாட்களுக்குள் ஐசிஐசிஐ வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொண்டு கடனை ரத்து செய்யும் வசதி கார்டு உறுப்பினருக்கு உள்ளது. அவ்வாறு ரத்து செய்தால் அது வரைவு காசோலை கிரெடிட் கார்டு ஆபரேஷன்ஸ், ஐசிஐசிஐ வங்கி லிட். சி விங், ஆட்டம்

எஸ்டேட்ஸ், சந்திவிலி ஃபார்ம் ரோடு, சந்திவிலி. சந்திவிலி ஸ்டூடியோவுக்கு அடுத்து, மஹாடா எதிரா அந்தேதி - கிழ்க்கு, மும்பை - 400072 என்ற முகவரிக்கு திரும்ப வந்தடைவது மற்றும் கார்டு உறுப்பினர் அல்லது பயனாளர் அந்த வரைவு காசோலையை ரொக்கமாக மாற்றாததற்கு உட்பட்டது.

## XIV. துணை கார்டு

முதன்மை கார்டு உறுப்பினரின் குடும்ப உறுப்பினர்(களுக்கு) ஒரு ஆட்-ஆன் கார்டு வழங்க முதன்மை கார்டு உறுப்பினரின் ஒரு கோரிக்கை பெறப்பட்டதும், ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகள்படி முதன்மை கார்டு உறுப்பினரின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி ஒரு துணை கார்டை வழங்கும்.

துணை கார்டை பயன்படுத்துவது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டதாக கருதப்படும். ஏதாவது துணை கார்டு வைத்திருப்பவர் மற்றும் அது வழங்கப்பட அதிகாரமளித்த முதன்மை கார்டு உறுப்பினர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் / பணம் செலுத்தலுக்கு கூட்டாக மற்றும் தனித்தனியே கடமைப்பட்டவர்கள், இருப்பினும், அனைத்து பாக்கி கட்டணங்கள் மற்றும் துணை கார்டின் கீழ் செலுத்துவதை கட்ட வேண்டியது முதன்மை கார்டு உறுப்பினரின் பொறுப்பாகும். ஒரு துணை கார்டுக்கு கடன் வழங்குவது, ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்ட அந்த கட்டணம்/விகிதத்தில் ஒரு சிறப்பு வசதியாக இருப்பது, துணை கார்டுதாரர் உறுப்பினராக தொடர்வது முதன்மை கார்டுதாரர் உறுப்பினராக தொடர்ந்து நீடிப்பதை முற்றிலும் சார்ந்தது.

## XV. பில்லிங்

கார்டு பயன்படுத்தியால் ஏற்பட்ட அனைத்து கட்டணங்கள் மற்றும் கார்டு கணக்கிற்கு பொருந்தும் அனைத்து கட்டணங்கள் ஒரு மாதாந்திர அடிப்படையில் அனைத்து கார்டு உறுப்பினர்களுக்கும் பில்லிங் செய்யப்படும். கார்டு உறுப்பினருக்கு ஸ்டேட்மென்ட்டை அனுப்புவதில் தாமதம் எதுவும் நேராமல் இருப்பதை ஐசிஐசிஐ வங்கி முயற்சி செய்யும். எனினும், குறிப்பிட்ட காலத்துக்கு நிலுவை பாக்கி எதுவுமில்லை மற்றும் முந்தைய மாதத்தில் கார்டு கணக்கில் பரிவர்த்தனை எதுவுமில்லை என்றால் ஸ்டேட்மென்ட் எதுவும் உருவாக்கப்படாது.

கார்டு உறுப்பினரால் மட்டும் ஸ்டேட்மென்ட் அணுகப்படுவதை உறுதி செய்ய ஆன்லைனில் ஸ்டேட்மென்ட்டை பொருத்தமான பாதுகாப்புடன் வழங்க ஐசிஐசிஐ வங்கி முயற்சிக்கும். எந்தவொரு காரணம் எப்படியிருப்பினும் ஸ்டேட்மென்ட் பெறப்படாத நிலையில், அவற்றை அனுப்புவதில் ஐசிஐசிஐ வங்கி தரப்பில் தாமதம் எதுவும் இல்லாத பட்சத்தில் கார்டு உறுப்பினர் தனது வசமுள்ள கட்டண ரசீதுகளின் நகல்களை கணக்கிடுவதன் மூலம் அல்லது அது பற்றி ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொண்டு விசாரித்து அனைத்து பாக்கிகளையும் பேமென்ட் தவணை தேதிப்படி கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டும்.

## XVI. உடனடி வணிக அடிப்படையிலான தவணை செயற்திட்டத்துக்கு விதிமுறைகள்

‘‘இஎம்ஐ’’ அல்லது ‘‘ஈக்குவேட்டட் மன்த்லி இன்ஸ்டால்மென்ட்’’ என்பது கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டிய அசல் தொகை, வட்டி மற்றும் பொருந்தினால் வேறு கட்டணங்கள் என மாதாந்திர தவணை தொகைகளை குறிக்கிறது.

‘‘இன்ஸ்டன்ட் இஎம்ஐ’’ என்பது கார்டு உறுப்பினர் கோரிக்கையின்படி இஎம்ஐ ஆக மாற்றுவதை குறிக்கிறது, கார்டை பயன்படுத்தி ஐசிஐசிஐ வங்கி இடிசி (மின்னணு தரவு பதிவு) டெர்மினலில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் மற்றும்/அல்லது அந்த ஆன்லைன் பரிவத்தனைகளில், அவ்வாறு மாறுவதற்கான தெரிவு கிடைத்தால் மாற்றப்படும். ஐசிஐசிஐ வங்கி அதன் சுயவிருப்ப முடிவின்படி, கார்ட் மீதான கட்டணத்தை உடனடியாக செலுத்தச் செய்யும் கார்டு உறுப்பினரின் கடமைக்கு பாரபட்சமின்றி கிரெடிட் கார்டு மீது உடனடி இஎம்ஐ-யை தனிப்பட்ட கார்டு உறுப்பினருக்கு கிடைக்கச் செய்யும் உரிமை கொண்டுள்ளது, கார்டு உறுப்பினர் குறிப்பிட்ட கொள்முதல்களுக்கு சமமாக்கப்பட்ட மாதாந்திர

தவணைகள் (இஎம்ஐ) மூலம் பணம் செலுத்தும் தெரிவை பெறுகிறார் அதே போல் ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தின் மூலம் கார்டு உறுப்பினருக்கு தெரிவிக்கப்படும் மற்றும் கார்டு உறுப்பினருக்கு அனுப்பப்பட்ட ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிட்டப்படி பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்:

(i) உடனடி இஎம்ஐகள் மூலம் பணம் செலுத்துவதை ஒரு கார்டு உறுப்பினர் ஒரு தடவை தேர்ந்தெடுத்து விட்டால், அதில் பின்னர் மாற்றம் செய்தால் முன்மூடல் கட்டணம் விதிக்கப்படும், இது கொள்முதலின் தன்மையை பொறுத்து ஐசிஐசிஐ வங்கி அவ்வப்போது நிர்ணயிப்பதாக இருக்கும். இஎம்ஐயை முன்மூடல் வசதியை பெற ஐசிஐசிஐ வங்கியின் வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொண்டு எந்த நேரத்திலும் கடனை (நிலுவையில் உள்ள தொகையை முன்பே செலுத்துதல்) கார்டு உறுப்பினர் மூடலாம். மூன்மூடல் கட்டணம் நிலுவையில் உள்ள அசல் தொகையில் 3% சமமாக இருக்கும் அதனுடன் அடுத்த மாதத்துக்கான வட்டி கார்டு கணக்கிற்கு விதிக்கப்படும். கடனை முன்கூட்டியே கட்டி முடிக்க கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்ள வேண்டும்;

(ii) பில் செய்யப்பட்ட மற்றும் நிலுவகையில் உள்ள தொகையில் எந்தவொரு பாகம் உடனடி இஎம்ஐகளில் செலுத்த அனுமதிக்கப்படவில்லை எனில் மற்றும் அந்தப் பாகம் பேமென்ட் தவணை தேதிக்குள் செலுத்தப்படவில்லை எனில், அதற்கு ஒரு வட்டி, சேவை கட்டணம் மற்றும் தாமத கட்டணம் பிரிவு 6ல் குறிப்பிடப்பட்ட விகிதம் மற்றும் முறையில் வசூலிக்கப்படும்;

(iii) உடனடி இஎம்ஐ வசதி கிரெடிட் கார்டில் தற்சமயம் பின்கூறப்பட்ட கொள்முதல்கள் சம்பந்தமாக கிடைக்கும் அதாவது (ஏ) வணிக நிறுவனத்தில் புதிய கொள்முதல்கள்; (பி) ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம் மூலம் வணிக நிறுவனத்தில் கடந்த கால கொள்முதல்களை மாற்றுதல்.

(iv) உடனடி இஎம்ஐ வசதி கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கியின் சுயவிருப்ப முடிவின்படி கிடைக்கிறது மற்றும் அந்த வசதி கிடைக்கும் இதன்படி:

(ஏ) அந்த காலவரம்பு மற்றும் ஐசிஐசிஐ வங்கி தீர்மானிக்கும் அந்த வணிக நிறுவனங்களில்;

(பி) உடனடி இஎம்ஐகளுக்கு வட்டி வரம்பு ஐசிஐசிஐ வங்கி முடிவு செய்தப்படி கார்டு உறுப்பினர் மற்றும் வணிகர் வரையறுக்கப்பட்டதாக இருக்கும்;

(சி) முதலில் செலுத்தும் தொகை, பரிவர்த்தனை கட்டண தொகை, உடனடி இஎம்ஐகளை செலுத்தும் காலம் மற்றும் வேறு பேமென்ட் விவரங்கள் ஐசிஐசிஐ வங்கி முடிவு செய்தபடி கார்டு உறுப்பினர் மற்றும் வணிகர் வரையறுக்கப்பட்டதாக இருக்கும். இந்த உடனடி இஎம்ஐ வசதி பிசினஸ் கார்டு, கார்பொரேட் கார்டு, இஎம்ஐ கார்டு மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கார்டுக்கு கிடைக்காது.

## XVII. ஆட்டோ டெபிட் வசதி

கார்டு பாக்கிகளை செலுத்த ஆட்டோ டெபிட் வசதியை கார்டு உறுப்பினர் பெறலாம். ஆட்டோ டெபிட் வசதி பெறப்பட்டதும், கார்டு உறுப்பினரின் வங்கி கணக்கில் (இதன் விவரங்கள் ஐசிஐசிஐ வங்கிக்கு வழங்கப்பட வேன்டும்) இருந்து, கார்டு உறுப்பினருக்கு அனுப்பிய ஸ்டேட்மென்ட்டில் சுட்டிக்காட்டிய பேமென்ட் தேதிப்படி மேலே குறிப்பிடப்பட்ட தொகை கழித்துக் கொள்ளப்படும். எனினும், பேமென்ட் உரிய தேதி ஒரு பிசினஸ் நாளாக இருக்க வேண்டும் இல்லையெனில் அடுத்த பிசினஸ் நாளில் வங்கிக் கணக்கில் இருந்து கழித்துக் கொள்ளப்படும். பேமென்ட் உரிய தேதியில் சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லை எனில், கார்டு பாக்கியுடன் சேர்த்து கூடுதலாக பொருந்தும் கட்டணங்கள் அனைத்தையும் கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டியதிருக்கும். ஆட்டோ டெபிட் வசதியை பெற கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கியிடம் சமர்ப்பித்த அனைத்து விவரங்களும் சரியானது மற்றும் முழுமையானது என்பதை கார்டு உறுப்பினர் ஒப்புக் கொண்டு மற்றும் உறுதி செய்கிறார். ஆட்டோ டெபிட் பரிவத்தனை தாமதமானால் அல்லது முழுமையற்ற அல்லது சரியற்ற தகவல் காரணங்கள் அல்லது எந்தவொரு காரணம் எப்படியிருப்பினும் செயல்படுத்தப்படவில்லை என்றால் அதற்கு ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது. மேலும் கார்டு உறுப்பினர் ஒப்புக் கொண்டு மற்றும் ஐசிஐசிஐ வங்கிக்கு சாதகமாக

பிறப்பிக்கப்பட்ட ஆட்டோ டெபிட் அறிவுறுத்தல்கள் பற்றி கார்டு உறுப்பினர் தனது வங்கிக்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளர் மற்றும் அந்த வங்கி கணக்கை ஐசிஐசிஐ வங்கியின் முன் சம்மதமின்றி மூடுவதில்லை என்றும் உறுதியளிக்கிறார். அவ்வாறு அறிவுறுத்தல்களை ஐசிஐசிஐ வங்கியின் எழுத்துப்பூர்வமான சம்மதம் நீங்கலாக திரும்பப்பெற/ரத்து செய்ய முடியாது.

## XVII. பேமென்ட் ரிட்டர்ன் ஆவது

கார்டு உறுப்பினர் தனது கார்டுக்குரிய பாக்கிக்கு பணம் செலுத்த கொடுத்த காசோலை அல்லது வேறு ஏதாவது பேமென்ட் இன்ஸ்ட்ரூமென்ட் அல்லது அறிவுறுத்தல் செயல்படுத்தப்படவில்லை, அல்லது அதனை செயலாக்க முடியாததால் கார்டு உறுப்பினருக்கு திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்றால், கார்டு உறுப்பினருக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கைகளை தொடங்க ஐசிஐசிஐ வங்கிக்கு உரிமை உள்ளது மற்றும் தனது சுயவிருப்ப முடிவின்படி அபராதம் விதிக்கும் மற்றும்/அல்லது கார்டை நிரந்தரமாக/தற்காலிகமாக ரத்து செய்யலாம். மேலும் காசோலை திரும்பி வந்ததன் கட்டணங்கள் மற்றும் பேமென்ட் தாமத கட்டணங்கள் அல்லது ஐசிஐசிஐ வங்கி முடிவு செய்யும் வேறு ஏதாவது கட்டணங்களை செலுத்தும் பொறுப்பு கார்டு உறுப்பினருக்கு உண்டு.

## XIX. விவகாரங்கள்

பேமென்ட்க்காக ஐசிஐசிஐ வங்கியால் பெறப்பட்ட ஏதாவது சார்ஜ் ஸ்லிப், அல்லது வேறு பேமென்ட் கோரிக்கை, அந்த ஒரு சார்ஜ் ஸ்லிப் அல்லது வேறு கோரிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கட்டணம், கார்டு உறுப்பினருக்கு முறையாக ஏற்பட்டது என்பதன் இறுதிச் சான்றாக இருக்கும். கிரெடிட் கார்டு தொலைந்து விட்டது, திருடப்பட்டது அல்லது மோசடியாக பயன்படுத்தப்பட்டது மற்றும் அது குறித்து இங்கே மேலே பிரிவு 9ல் கூறியபடி புகார் தெரிவிக்கப்பட்டது என்றிருந்தால் அதனை நிரூபிக்கும் பொறுப்பு கார்டு உறுப்பினரை சேர்ந்தது. இந்தப் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வேறு பேமென்ட் கோரிக்கையில் ஒரு வணிக நிறுவனத்தில் கார்டை பயன்படுத்தியதால் கார்டுதாரருக்கு ஏற்பட்ட அனுமதிக்கப்பட்ட செலவுகள் சம்பந்தமான ஏதாவது மற்றும் அனைத்து பேமென்ட்களாக இருக்கும், இவை ஒரு சார்ஜ் ஆக பதிவு செய்யப்பட்டிருக்காது. அந்த சார்ஜ் ஸ்லிப்களில் கார்டு எண் உடன் சேர்த்து கார்டுதாரர் கையொப்பம் இருப்பது கார்டு உறுப்பினருக்கு உள்ள பொறுப்பின் இறுதி ஆதாரமாக இருக்கும். கடன்கள் ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம்/இன்ஃபினிட்டியை அணுகியதன் மூலம் பெறப்பட்டது என்றல், ஏபின்/கடவுச்சொல்/பயனாளர்-ஐடி பயன்படுத்தி ஐசிஐசிஐ வங்கி வாடிக்கையாளர் சேவை மையம்/இன்ஃபினிட்டியை அணுகியதே அந்த பரிவர்த்தனையை கார்டு உறுப்பினர் மேற்கொண்டதற்கான ஒரு இறுதி ஆதாரமாக இருக்கும். வாங்கிய பொருட்கள் அல்லது சேவைகளை கார்டுதாரர் தான் பெற்றார் என்பதை ஐசிஐசிஐ வங்கி உறுதி செய்ய வேண்டியதில்லை. ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கட்டணத்தை கார்டுதாரர் ஒப்புக் கொள்ளாத பட்சத்தில் அது பற்றி ஸ்டேட்மென்ட் கிடைக்கப் பெற்றதில் இருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் ஐசிஐசிஐ வங்கிக்கு தெரியப்படுத்த வேண்டும், தவறினால் ஸ்டேட்மென்ட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அனைத்து கட்டணங்களும் சரியாக உள்ளது என பொருள் கொள்ளப்படும்.

## XX. செக்யூரிட்டி

ஒரு செக்யூர்ட் கிரெடிட் கார்டு ஆக இருந்தால் கார்டு கணக்கில் உள்ள முழுமையான பாக்கித் தொகையை, கார்டு பரிவர்த்தனைகளில் நிலுவையில் உள்ள பாக்கி தொகையை வட்டி மற்றும் வேறு அனைத்து செலவு சேர்த்து, இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள், செயல்படுத்தப்பட்டது ஆனால் கார்டு உறுப்பினரால் கிரெடிட் கார்டு பயன்படுத்திய போது கார்டு கணக்கில் இன்னமும் சார்ஜ் செய்யப்படாதது அந்த செக்யூரிட்டிகள்/ஃபிக்ஸட் டெப்பாசிட்கள் / அவ்வாறு இதர சொத்துகள் கார்டு உறுப்பினர் பெயரில் தனியாக அல்லது வேறு ஒரு நபருடன் கூட்டாக அல்லது மூன்றாவது நபரின் பெயர் இருக்கும் பிணைகள் ஐசிஐசிஐ வங்கி பரிந்துரைத்த வடிவம் மற்றும் முறையில், ஐசிஐசிஐ வங்கி அங்கீகரித்தப்படி பற்றுறுதி/அடமானம் வழியில் பாதுகாக்கப்படும். செக்யூரிட்டி உருவாக்கத்துக்காக ஐசிஐசிஐ வங்கிக்கு திருப்தி அளிக்கும் வடிவில் மற்றும் முறையில் அந்த ஆவணங்கள் அனைத்தையும்

கார்டு உறுப்பினர் செயல்படுத்துவார். செக்யூரிட்டி உருவாக்கத்தில் சம்பந்தப்பட்ட செலவுகள் மற்றும் முறைப்படியாக இதர அனைத்தையும் பூர்த்தி செய்ததில் முத்திரை தீர்வை உள்ளடங்கும் ஆனால் அது மட்டும் உட்பட்டதல்ல கார்டு உறுப்பினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

## XXI. வசூலித்தல்கள்

ஐசிஐசிஐ வங்கிக்கு சுய அபாயத்தில் மற்றும் கார்டு உறுப்பினரின் செலவில் கார்டு உறுப்பினரின் பாக்கிகளை வசூலிக்க மற்றும்/அல்லது கார்டு உறுப்பினரால் வழங்கப்பட்ட ஏதேனும் பிணையை வசப்படுத்த, ஒன்று அல்லது அதிக நபர்(களை) பணியில் ஈடுபடுத்தும் உரிமை உள்ளது மற்றும் ஐசிஐசிஐ வங்கி (அவ்வாறான நோக்கங்களுக்கு) கார்டு உறுப்பினர் மற்றும் பிணை குறித்து அந்த நபர்க(ளுக்கு) அந்த தகவல், உண்மைகள் மற்றும் எண்களை ஐசிஐசிஐ சரி என கருதுவதற்கு ஏற்ப அனுப்ப முடியும். மேலும் ஐசிஐசிஐ வங்கி சரியென கருதும் அனைத்து செயல்கள், பத்திரங்கள், இவற்றுடன் தொடர்புள்ள விஷயங்கள் மற்றும், அல்லது அது சம்பந்தமான நிகழ்வை மேற்கொள்வதற்கான உரிமை மற்றும் அதிகாரத்தை ஐசிஐசிஐ வங்கி அந்த நபர்(களுக்கு) வழங்கலாம்.

## XXII. பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம்

வணிகம், வணிகத்தில் வாரண்டி அல்லது வணிக நிறுவனத்தில் இருந்து கார்டு உறுப்பினரால் பெறப்பட்ட சேவைகள் தாமதமாக வழங்கப்பட்டது, வழங்கப்படாதது, பொருட்கள் பெறப்படாதது அல்லது கார்டு உறுப்பினர் பழுதடைந்த பொருட்களை பெற்றது உள்ளிட்டவற்றுக்கு ஐசிஐசிஐ வங்கி எந்த விதத்திலும் பொறுப்பாகாது. கிரெடிட் கார்டு என்பது கார்டு உறுப்பினருக்கு பொருட்கள் வாங்க மற்றும்/அல்லது சேவைகளை பெற வழங்கப்பட்ட ஒரு வசதி இதில் பொருட்களின் தரம், விநியோகம் அல்லது இதரவகையில் வணிகள் குறித்து வாரண்டி பொறுப்பு எதுவும் ஐசிஐசிஐக்கு கிடையாது அல்லது பிரதிநிதியாக இருக்காது. விற்பனைப் பொருள் சம்பந்தமாக ஏதாவது விவகாரம் அல்லது க்ளெய்ம் இருந்தால் அதனை கார்டு உறுப்பினர் வணிக நிறுவனத்துடன் தீர்த்துக் கொள்ள வேண்டும். க்ளெய்ம் அல்லது விவகாரம் இருப்பது கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டிய அனைத்து பொறுப்புகளில் இருந்து அவரை விடுவிக்காது மற்றும் அந்த கட்டணங்களை உடனடியாக செலுத்த கார்டு உறுப்பினர் ஒப்புக் கொள்கிறார்.

## XXIII. கிரெடிட் பரிவர்த்தனை

ஒரு கொள்முதலுக்கு டெபிட் செய்வது மற்றும் அதனை தொடர்ந்து பொருட்கள்/சேவைகளை ரத்து செய்ததால் கிரெடிட் செய்யப்படுவது இரண்டு தனி பரிவர்த்தனைகளாக இருக்கும். ஸ்டேட்மென்ட்டில் இருக்கும் கொள்முதல் பரிவர்த்தனைக்கு கூடுதலாக ஏதாவது கட்டணங்கள் விதிக்கப்படுவதை தவிர்க்க கார்டு உறுப்பினர் கண்டிப்பாக பணம் செலுத்த வேண்டும். ரத்து செய்யப்பட்டதும் ரீஃபண்ட் தொகையை ஐசிஐசிஐ வங்கி எப்போது பெறுகிறதோ அப்போது கார்டு கணக்கில் (ரத்து செய்யும் கட்டணங்கள் கழித்து) கிரெடிட் செய்யப்படும். எனினும், கிரெடிட் கார்டு ஸ்லிப்பை கார்டு உறுப்பினர் வெற்றிகரமாக சமர்ப்பித்ததும், கிரெடிட் கார்டு கணக்கில் போஸ்ட் செய்யப்படும். கிரெடிட் கார்டு கணக்கில் ஒரு நியாயமான நேரத்துக்குள் போஸ்ட் செய்யப்படாவிட்டால், கார்டு உறுப்பினர் கண்டிப்பாக ஐசிஐசிஐ வங்கிக்கு தெரியப்படுத்த வேண்டும்.

## XXIV. வெளிநாடுகளில் செய்யப்படும் செலவுகள்

கிரெடிட் கார்டு வெளிநாடுகளில் பயன்படுத்தப்பட்டால் பொருத்தமான அன்னிய செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள், ஆர்பிஐயால் பிறப்பிக்கப்பட்டு மற்றும் அவ்வப்போது திருத்தப்படுவதற்கு ஏற்ப கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை கார்டு உறுப்பினர் ஏற்றுக் கொள்கிறார். பணப்பரிமாற்ற கட்டுப்பாடு ஒழுங்குமுறைகள்படி தனக்குரிய அளவை ஒருவேளை கார்டு உறுப்பினர் கடந்து விட்டால், அது பற்றி உடனடியாக ஐசிஐசிஐ வங்கியின் கவனத்துக்கு எழுத்துப்பூர்வமாக கொண்டு வர வேண்டும். அவ்வாறான ஏதாவது செலவுகளுக்கு ஆர்பிஐ நிர்ணயித்தப்படி கடவுச்சீட்டில் மேல்குறிப்பு எழுத உத்தரவிடப்பட்டால், கடவுச்சீட்டில் மேல்குறிப்பு எழுதி வாங்கும் பொறுப்பு முற்றிலும் கார்டுதாரரை சார்ந்தது. ஆர்பிஐ பிறப்பித்துள்ள நடப்பிலுள்ள

பரிமாற்ற கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்க தவறினால், அவ்வப்போது திருத்தப்படும் அன்னிய செலாவணி பரிமாற்ற மேலாண்மை சட்டம், 1999ன் கீழ் அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் அல்லது ஆர்பிஐ உத்தரவுப்படி கார்டு வசதியை பயன்படுத்த தடை விதிக்கப்படும். ஆர்பிஐ வழிகாட்டுமுறைகள்படி அவ்வப்போது பிறப்பிக்கப்படுவதில் பரிந்துரைத்தப்படி அன்னிய செலாவணி உரிமைவழங்கல் மீறப்பட்டதன் காரணமாக ஒரு செலவு மறுக்கப்பட்டதால் நேரடியாக அல்லது முறைமுகமாக ஏற்படும் ஏதாவது இழப்பு அல்லது சேதத்துக்கு, கார்டுதாரர் அவரின் உரிமை வழங்கலை மீறி விட்டார் என ஐசிஐசிஐ வங்கிக்கு தெரிய வந்ததும், அதற்கு ஐசிஐசிஐ வங்கிக்கு பொறுப்பு எதுவும் இருக்காது. ஒரு பரிவர்த்தனை இந்திய ரூபாய் தவிர்த்து இன்னொரு பணத்தில் செய்யப்பட்டால், அந்த பரிவர்த்தனை இந்திய ரூபாயாக மாற்றப்படும். இந்த மாற்றம் பரிவர்த்தனை ஐசிஐசிஐ வங்கியுடன் தீர்வு காணப்பட்ட தேதியில் நடைபெறும், இது பரிவர்த்தனை நடந்த அதே தேதியாக இருக்காது. பரிவர்த்தனை யுஎஸ் டாலர்களில் இல்லையெனில், மாற்றம் யுஎஸ் டாலர்கள் மூலம் செய்யப்படும், இது செலவிட்ட தொகையை யுஎஸ் டாலர்களில் மாற்றி விட்டு மற்றும் அதன் பிறகு யுஎஸ் டாலர் தொகை இந்திய ரூபாய்களில் மாற்றப்படும்.

உரித்தாகும் சட்டத்தால் ஒரு பிரத்யேக விகிதம் உத்தரவிடப்பட்டால் தவிர, யுஎஸ் டாலரில் இருந்து இந்திய ரூபாய்க்கு மாற்றும் விகிதம் விசா, மாஸ்டர்கார்டு மற்றும் ஏமெக்ஸ் வழங்கப்பட்ட விகிதங்களில் செட்டில்மென்ட் தேதிப்படி இருக்கும், அவ்வாறான பரிவர்த்தனைகளில் ஒரு பணம் மாற்று காரணி மதிப்பீட்டினால் அதிகரிக்கப்பட்டிருக்கும்.

## XXV. ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டு வெகுமதிகள்

கார்டு உறுப்பினர்/களுக்கு பின்கூறப்பட்டுள்ள கிரெடிட் கார்டு வெகுமதி புள்ளி திட்டங்களை ஐசிஐசிஐ வங்கி வழங்கும்:

1. ‘‘ஐசிஐசிஐ வங்கி ரிவார்ட்ஸ் ஸ்கீம்’’ என்பது ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதி திட்டத்தை குறிக்கிறது. ‘‘ஐசிஐசிஐ வங்கி ரிவார்ட் புள்ளிகள்’’ என்பது ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வெகுமதி புள்ளிகளை குறிக்கிறது.
2. ‘‘தேர்ந்தெடுக்கப்பட்ட ரிவார்ட்ஸ் ஸ்கீம்’’ என்பது ஐசிஐசிஐ வங்கியின் ப்ரீமியம் வெகுமதி திட்டத்தை குறிக்கிறது.‘‘தேர்ந்தெடுக்கப்பட்ட ரிவார்ட் புள்ளிகள்’’ என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வெகுமதி புள்ளிகளை குறிக்கிறது.
3. ‘‘ஐசிஐசிஐ வங்கி ரிவார்ட்ஸ் பேபேக் பவர் கொண்டது’’ என்பது பேபேக் உடன் சேர்ந்து ஐசிஐசிஐ வழங்கும் வெகுமதியை குறிக்கிறது.

‘‘பேபேக் பாயின்ட்ஸ்’’ என்பது பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வெகுமதி புள்ளிகளாகும்.

‘‘பேபேக்’’ என்பது இந்த பிராண்ட் பெயரின் கீழ் எல்எஸ்ஆர்பிஎல்லின் வெகுமதி திட்டத்தை குறிக்கிறது. ‘‘எல் எஸ்ஆர்பிஎல்’’ என்பது லாயல்டி சொல்யூசன்ஸ் அண்ட் ரிசர்ச் லிமிடெட் என அர்த்தமாகும், கம்பெனிகள் சட்டம், 1956ன் கீழ்தொடங்கப்பட ஒரு நிறுவனம், இது தனது பதிவு அலுவலகத்தை ஃப்ளோரென்ஸ், ஜே.எல். நேரு ரோடு, வகோலா, சாந்தாகுரூஸ் (கி). மும்பை 400055 என்ற முகவரியில் கொண்டுள்ளது (இதன்பிறகு ‘‘எல்எஸ்பிஆர்எல்’’ என்றே குறிப்பிடப்படும், இதன் வெளிப்படுத்தல் அதனுடைய பொருள் அல்லது சூழலுக்கு முரணாக இருந்தால் தவிர, அதன் வழிவருபவர்கள் மற்றும் நியமிக்கப்பட்டவர்கள் உள்ளடங்கும்); பேபேக் பிராண்ட் பெயர் கீழ். ‘‘பேபேக் கார்டு’’ என்பது எல்எஸ்ஆர்பிஎல் குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் பேபேக் புள்ளிகளை மீட்டெடுக்க எல்எஸ்ஆர்பிஎல் விநியோகித்தது அன அர்த்தமாகும் மற்றும் உள்ளடங்கும்.

‘‘பேபேக் உறுப்பினர்’’ என்பது ஒரு பேபேக் கார்டு வைத்துள்ள ஒரு நபர் மற்றும் பேபேக் இணையதளத்தில் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் பேபேக் உடன் பதிவு செய்யப்பட்டவரை குறிக்கிறது.

‘‘பேபேக் மெம்பர்ஷிப் டேட்டா’’ என்பது ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டு உடன் தொடர்புள்ள கார்டு உறுப்பினர்/களின் தரவு அல்லது தகவல் என அர்த்தமாகும் அதாவது (i) பெயர் (ii) மின்னஞ்சல் முகவரி (ii) மொபைல் எண் (iii) பிறந்த தேதி (iv) முகவரி (v) கிரெடிட் கார்டு கணக்கு எண்.

‘‘பேபேக் வெப்சைட்’’ என்பது url:www.payback.in என்ற இணையதளத்தை குறிக்கிறது.
‘‘பொறுப்பற்ற கணக்கு’’ என்பது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் பேமென்ட் பிரிவில் குறிப்பிட்டப்படி பணம் செலுத்தப்படாத ஒரு கார்டு கணக்கை குறிக்கிறது.
‘‘எஃபெக்டிவ் தேதி’’ என்பது பேபேக் திட்டங்(கள்) படி ஐசிஐசிஐ வங்கி வெகுமதி தொடங்கும் தேதியை குறிக்கிறது, இது அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கியால் கார்டு உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும். எனினும், பேபேக் உடன் பதிவு செய்த தேதியில் இருந்து மட்டுமே பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதியின் கீழ் பயன்களை கார்டு உறுப்பினர் பெற முடியும்.
‘‘திட்ட முடிவு தேதி’’ என்பது ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதி(கள்) திட்டத்தை ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி ரத்து செய்த தேதியை குறிக்கிறது.
‘‘வேலிட் சார்ஜ்’’ என்பது கார்டு மீது பொருட்களை வாங்கியது அல்லது சேவைகளை கார்டு உறுப்பினர் பெற்றதால் மற்றும் ஐசிஐசிஐ வங்கி வெகுமதிகள் திட்டத்தில் சேர்த்ததன் நோக்கத்துக்காக அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கியால் சேர்த்துக் கொள்ளப்படும் இதர ஏதாவது செலவை குறிக்கிறது.
குறிப்பிட்ட காலத்தின் போது ஐசிஐசிஐ வங்கி வழங்கிய ஏதாவது புரோமோஷனல் திட்டம் அல்லது அதன்பிறகு, கார்டு பயன்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட்டால், அல்லது ரத்த செய்யப்படவுள்ளது, அல்லது கார்டு கணக்கு ஒரு பொறுப்பற்ற கணக்கு என குறிப்பிடப்பட்டால், ஏதாவது சலுகை/பயன் - ஆனால் பரிசு/தள்ளுபடி/ரொக்கம் என இவை மட்டும் உட்பட்டது அல்லாமல் புரோமோஷன் காலத்தின் போது வங்கி வழங்கியவை அதன் நிமித்தமாக உடனடியாகவும் மற்றும் தானாகவும் கார்டு உறுப்பினருக்கு ரத்து செய்யப்படும்.
‘‘வருடாந்திர ஆண்டு’’ என்பது ஒரு கார்டு வழங்கிய தேதியில் இருந்து பன்னிரெண்டு மாத காலத்தை குறிக்கிறது மற்றும் அதன் பிறகு ஒவ்வொரு பன்னிரண்டு-மாத காலத்தை குறிக்கிறது.

1. ஐசிஐசிஐ வங்கி வெகுமதி திட்டத்துக்கு பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

i ஐசிஐசிஐ வங்கி வெகுமதி திட்டம் நடைமுறை தேதியில் இருந்து அமலுக்கு வரும் மற்றும் குறிப்பிட்ட ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டுகளை மட்டுமே வைத்திருக்கும் கார்டு உறுப்பினர்/களுக்கு நடைமுறைப்படுத்திய தேதியில் இருந்து மற்றும் பிறகு கிடைக்கிறது.

i ஐசிஐசிஐ வங்கி வெகுமதி திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டுகள் மீது கார்டு உறுப்பினரால் செய்த செல்லத்தக்க செலவுகளுக்கு ஐசிஐசிஐ வங்கி வெகுமதி புள்ளிகளை ஐசிஐசிஐ வங்கி வழங்கும்.

i ஐசிஐசிஐ வங்கி வெகுமதி புள்ளிகள் ஈட்டும் முறைமை வெகுமதி ஈட்டுவதன் ஒரு வருடாந்திர ஆண்டு முறையை பின்பற்றும்.

i ஐசிஐசிஐ வங்கி வெகுமதி புள்ளிகள், ஐசிஐசிஐ வங்கி வெகுமதி திட்டத்தின் கீழ் கார்டு உறுப்பினரால் ஈட்டப்பட்டது கார்டு உறுப்பினருக்கு அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கையில் சுட்டிக்காட்டபடும்.

i ஐசிஐசிஐ வங்கி அவ்வப்போது கொண்டு வரும் மீட்டெடுக்கும் சலுகைகளுக்கு எதிராக தனக்கு சேர்ந்த ஐசிஐசிஐ வங்கி வெகுமதி புள்ளிகளை கார்டு உறுப்பினர் மீட்டெடுக்க முடியும்.

i. ஐசிஐசிஐ வங்கி வெகுமதி புள்ளிகள் மீட்டெடுக்கப்பட்டதும், அவ்வாறு மீட்டெடுக்கப்பட்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதி புள்ளிகள் கார்டு கணக்கில் சேர்ந்த ஐசிஐசிஐ வங்கி வெகுமதி புள்ளிகளில் இருந்து தானாகவே குறைந்து விடும் அல்லது கழிக்கப்பட்டு விடும்.

i திட்ட முடிவு தேதிக்கு முன்பாக எந்த நேரத்திலும் குறிப்பிட்ட கிரெடிட் கார்டு பயன்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட இருக்கிறது, அல்லது கார்டு கணக்கு ஒரு பொறுப்பற்ற கணக்காக குறிப்பிடப்படுகிறது என்றால், கார்டு உறுப்பினருக்கு கிரெடிட் செய்யப்பட்ட ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதி புள்ளிகள் அனைத்தும் அது நிமித்தமாக உடனடியாக மற்றும் தானாகவும் ரத்தாகி விடும்.

i அவ்வாறு ரத்து செய்யப்பட்ட ஐசிஐசி வங்கி வெகுமதி புள்ளிகள், கார்டு உறுப்பினர் தனது மெம்பர்ஷிப்பை ஐசிஐசிஐ வங்கியுடன் திரும்பவும் உருவாக்கிக் கொண்டாலும் கிரெடிட் செய்யப்படாது.

- i திட்டம் முடிக்கப்படும் தேதியின் முடிவில், கார்டு உறுப்பினரின் கிரெடிட்டில் இருக்கும் ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதி புள்ளிகள் குறிப்பிடப்பட்ட நேரத்துக்குள் மீட்டெடுக்கப்படாதவரை தானாகவே காலாவதியாகி விடும்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதிகள் திட்டத்துக்கு பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

- i கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதிகள் திட்டம் நடைமுறை தேதியில் இருந்து அமலுக்கு வரும் மற்றும் குறிப்பிட்ட ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டுகளை வைத்திருக்கும் கார்டு உறுப்பினர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது.
- i கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதிகள் திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டுகள் மீது கார்டு உறுப்பினருக்கு ஏற்பட்ட செல்லத்தக்க செலவுகளுக்கு ஐசிஐசிஐ வங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகளை வழங்கலாம்.
- i தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகள் ஈட்டும் முறைமை வெகுமதி ஈட்டும் ஒரு வருடாந்திர ஆண்டை பின்பற்றும்.
- l தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதிகள் திட்டத்தின் கீழ் கார்டு உறுப்பினரால் ஈட்டப்பட்டது கார்டு உறுப்பினருக்கு அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும்.
- i ஐசிஐசிஐ வங்கியின் இணையதளமான க்க்க்ஜ்க்ஜ் என்பதில் கிடைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதிகள் விவரபட்டியலில் அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கியால் செய்யப்படும் மீட்டெடுக்கும் சலுகைகளுக்கு எதிராக கார்டு உறுப்பினர் தனக்கு சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகளை மீட்டெடுக்க முடியும்.
- i தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகள் மீட்டெடுக்கப்பட்டப் பிறகு, கார்டு கணக்கில் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகளில் இருந்து மீட்டெடுக்கப்பட்டவை தானாகவே குறைந்து விடும் அல்லது கழிக்கப்பட்டு விடும்.
- i திட்டமுடிவு தேதிக்கு முன்பாக எந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டு பயன்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட இருக்கிறது, அல்லது கார்டு கணக்கு ஒரு பொறுப்பற்ற கணக்காக குறிப்பிடப்படுகிறது என்றால், கார்டு உறுப்பினருக்கு கிரெடிட் செய்யப்பட்ட கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகள் அனைத்தும் அது நிமித்தமாக உடனடியாகவும், தானாகவும் ரத்தாகி விடும்.
- i அவ்வாறு ரத்து செய்யப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகள், கார்டு உறுப்பினர் தனது மெம்பர்ஷிப்பை ஐசிஐசிஐ வங்கியுடன் திரும்பவும் உருவாக்கிக் கொண்டாலும் கிரெடிட் செய்யப்படாது.

திட்டம் முடிக்கப்படும் தேதியின் முடிவில், கார்டு உறுப்பினரின் கிரெடிட்டில் இருக்கும் ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதி புள்ளிகள் குறிப்பிடப்பட்ட நேரத்துக்குள் மீட்டெடுக்கப்படாதவரை தானாகவே காலாவதியாகி விடும்.

1. பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதிகளுக்கு பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதி நடைமுறை தேதியில் இருந்து அமலுக்கு வரும் மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டு மட்டும் வைத்திருக்கும் கார்டு உறுப்பினர்களுக்கு நடைமுறை தேதியில் மற்றும் அதன் பிறகு கிடைக்கும்.

பேபேக் மெம்பர்ஷிப் தரவு எல்எஸ்ஆர்பிஎல் மற்றும் அதன் அஃபிலியேட்கள் உடன் பேபேக் கணக்கை நிகழ்நிலைப்படுத்துவதற்காக பகிர்ந்துக் கொள்ளப்படும் மற்றும் பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதிகள் சமப்ந்தமான சேவைகள் மற்றும் பயன்கள் கார்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

- i பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதிகளின் கீழ், குறிப்பிட்ட ஐசிஐசிஐ வங்கி கிரெடிட் கார்டுகள் மீது கார்டு உறுப்பினராக ஏற்பட்ட நியாயமான செலவுகளுக்கு ஐசிஐசிஐ வங்கி பேபேக் புள்ளிகளை வழங்கும்.

- i பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதிகளின் கீழ் கார்டு உறுப்பினர் ஈட்டப்பட்ட பேபேக் புள்ளிகள், கார்டு உறுப்பினருக்கு அனுப்பிய மாதாந்திர ஸ்டேட்மென்ட்டில் சுட்டிக்காட்டப்படும். ஒவ்வொரு பில்லிங் சுழற்சியின் முடிவிலும், முந்தைய பில்லிங் சைக்கிளில் செல்லத்தக்க பரிவர்த்தனைகளில் கார்டு உறுப்பினர்கள் ஈட்டிய பேபேக் புள்ளிகள் கார்டு கணக்கில் இருந்து கார்டு உறுப்பினரின் பேபேக் கணக்கிற்கு ஐசிஐசிஐ வங்கியால் மாற்றப்பட்டு விடும்.
- i கார்டு உறுப்பினர்/கள் அவர்களுக்குரிய பேபேக் புள்ளிகளை ஒரு பேபேக் உறுப்பினரான பின்பு மற்றும் பேபேக் வெகுமதி பட்டியலில் கிடைக்கும் பொருள் வகைகளுக்கு எதிராக மட்டுமே பேபேக் கார்டை பயன்படுத்த முடியும். அதன் விவரங்களை பேபேக் உறுப்பினர்/களுக்கு எல்எஸ்ஆர்பிஎல் தெரிவிக்கும் அல்லது அது பற்றிய மேலதிக விவரங்களுக்கு மற்றும் ஒரு பேபேக் உறுப்பினராகிட, பேபேக் இணையதளத்தை கார்டு உறுப்பினர்/கள் பார்க்க முடியும். பேபேக் புள்ளிகளை மீட்டெடுத்தப்பிறகு, அவ்வாறு மீட்டெடுக்கப்பட்ட பேபேக் புள்ளிகள் தானாகவே குறைந்து விடும் அல்லது பேபேக் கணக்கில் சேர்ந்த பேபேக் புள்ளிகளில் இருந்து கழிக்கப்பட்டு விடும்.
- திட்டமுடிவு தேதிக்கு முன்பாக எந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டு பயன்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட இருக்கிறது, அல்லது கார்டு கணக்கு ஒரு பொறுப்பற்ற கணக்காக குறிப்பிடப்படுகிறது என்றால், கார்டு உறுப்பினருக்கு கிரெடிட் செய்யப்பட்ட பேபேக் புள்ளிகள் அனைத்தும் அது நிமித்தமாக உடனடியாகவும், தானாகவும் ரத்தாகி விடும்.
- i அவ்வாறு ரத்து செய்யப்பட்ட பேபேக் புள்ளிகள், கார்டு உறுப்பினர் தனது மெம்பர்ஷிப்பை ஐசிஐசிஐ வங்கியுடன் திரும்பவும் உருவாக்கிக் கொண்டாலும் கிரெடிட் செய்யப்படாது.
- i திட்டம் முடிக்கப்படும் தேதியின் முடிவில், கார்டு உறுப்பினரின் கிரெடிட்டில் இருக்கும் பேபேக் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட நேரத்துக்குள் மீட்டெடுக்கப்படாதது தானாகவே காலாவதியாகி விடும். மேலும், பேபேக் புள்ளிகள் காலாவதியாகி விடும் மற்றும் பேபேக் இணையதளத்தில் அவ்வப்போது வழங்கப்படும் விதிமுறைகள் நிபந்தனைகளில் பேபேக் வரையறுத்தப்படி ஒரு நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் மீட்டெடுக்கப்படாவிட்டால் பயன்படுத்துவதற்கு கிடைக்காது.
- i திட்டமுடிவு தேதிக்கு முன்பு அல்லது திட்டம் முடிக்கப்படும் தேதிக்கு முன்பு எந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிரெடிட் கார்டு பயன்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட்டால், அல்லது ரத்து செய்யப்பட இருக்கிறது, அல்லது கார்டு கணக்கு ஒரு பொறுப்பற்ற கணக்காக குறிப்பிடப்படுகிறது என்றால், கார்டு உறுப்பினர் தொடர்ந்து ஒரு பேபேக் உறுப்பினராக நீடிப்பார் மற்றும் பேபேக் கணக்கில் இருந்து பேபேக் உறுப்பினர் தரவு நீக்கப்படாது.
- i பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதிகளின் கீழ், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் போக கூடுதலாக, பேபேக் புள்ளி மீட்டெடுப்புக்காக எல்எஸ் ஆர்பிஎல்-ன் விதிமுறைகளால் கார்டு உறுப்பினர் நிர்வகிக்கப்படுவார். மேலதிக விவரங்களுக்கு தயவு செய்து பார்க்கவும் ன்க்ஜ்க்ஜ்க்ஜ்ஜ். இங்கே குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் பேபேக் இணையதளத்தில் கிடைக்கும் விதிமுறைகள் இடையே முரண்பாடு எதுவும் இருக்காமானால், பேபேக் இணையதளத்தில் இருக்கும் விதிமுறைகளே இறுதியானதாக இருக்கும். பேபேக் ப்வர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமதிகள் சம்பந்தமாக விவகாரங்கள் ஏதும் இருந்தால், அதனை கார்டு உறுப்பினர் நேரடியாக எல்எஸ்ஆர்பிஎல் உடன் தீர்த்துக் கொள்ள வேண்டும் மற்றும் எந்தவொரு விதத்திலும் எப்படியிருப்பினும் ஐசிஐசிஐ வங்கியை சுட்டிக்காட்ட கூடாது அல்லது மற்றும் ரீகோர்ஸ் செய்யக் கூடாது மற்றும் கார்டு உறுப்பினர் எல்எஸ்ஆர்பிஎல் இடையே பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கி வெகுமடிகளின் கீழ் எழுக்கூடிய எந்தவொரு விவகாரத்துக்கும் ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது.
- i ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதி புள்ளி, கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெகுமதிகள் திட்டம் அதே போல் பேபேக் பவர் கொண்ட ஐசிஐசிஐ வங்கியின் வெகுமதிகளுக்கு பின்கூறப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும் (இதன் பிறகு கூட்டாக ‘‘திட்டங்கள்’’ என்றும்

மற்றும் தனியாக ‘‘சம்பந்தப்பட்ட திட்டம்’’ என்றும் குறிப்பிடப்படும்): சம்பந்தப்பட்ட திட்டத்தின் நடைமுறை தேதிப்படி பொறுப்பற்ற கணக்காக சுட்டிக்காட்டப்படும் கார்டு உறுப்பினர்களுக்கு திட்டங்கள் பொருந்தாது அல்லது திட்டங்கள் காலத்தின் போது பொறுப்பற்றதாக இருக்கும் எந்தவொரு கார்டு கணக்குகளுக்கு பொருந்தாது.

ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி கார்டு உறுப்பினர்களுக்கு கூடுதல் வெகுமதி புள்ளிகளை வழங்கலாம். திட்டங்களின் கீழ் ஐசிஐசிஐ வங்கி தொகுக்கும் ஏதாவது வெகுமதி புள்ளிகள் இறுதியானதாக, முடிவானதாக மற்றும் கார்டு உறுப்பினரை கட்டுப்படுத்துவதாக இருக்கும் மற்றும் எந்தவொரு விவகாரத்துக்கும் உட்படாது.

அரசாங்கம் அல்லது வேறு ஏதாவது ஆணையம் அல்லது சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு அமைப்பு (மத்திய, மாநிலை அல்லது உள்ளூர்) ஏதாவது வரி அல்லது வேறு பொறுப்புகள் அல்லது கட்டணங்களாக முன்கூறப்பட்ட சம்பந்தப்பட்ட கட்டணத்தின் கீழ் மீட்டெடுக்கப்பட்ட வெகுமதி புள்ளிகளுக்கு எழக்கூடிய அல்லது கார்டில் சிறுக சிறுக சேர்ந்தது கார்டு உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கில் இருக்கும். பொருட்கள்/சேவைகளின் பண மதிப்பு மீது டிடிஸ் ஏதாவது இருந்தால் அதனையும் கார்டு உறுப்பினரே செலுத்த வேண்டும்.

- ஐசிஐசிஐ வங்கி அல்லது பேபேக், திட்டம் முடிவு தேதிக்கு பிறகு திட்டங்களை தொடர அல்லது ஒத்திருக்கும் அல்லது ஒரு புதிய திட்டத்தின் மூலம் பதிலி திட்டங்களை கொண்டு வர இங்கே அடங்கியுள்ள எவையும் அவற்றை கட்டுப்படுத்தும் பொறுப்பாக இருப்பது என பொருள் கொள்ளக்கூடாது.
- வெகுமதி புள்ளிகளை மீட்டெடுப்பது தன்னிச்சையானது மற்றும் தொடர்புள்ள அனைத்து கட்டணங்களும் கிரெடிட் கார்டின் வழக்கமான பயன்பாட்டில் ஒரு கார்டு உறுப்பினரால் தன்னிச்சையாக ஏற்படுத்தப்பட்டது என்று கருதப்படும்.
- கிரெடிட் கார்டு பயன்படுத்துவதன் வழக்கமான போக்கில் ஒரு கார்டு உறுப்பினருக்கு ஏதாவது செயல்கள், க்ளெய்ம்கள், கோரிக்கைகள், பொறுப்புகள், இழப்புகள், சேதங்கள், செலவுகள், செலவினங்கள் அல்லது பணயிழப்புகளுக்கு ஐசிஐசிஐ வங்கியை கார்டு உறுப்பினர் பொறுப்பாக்கக் கூடாது.
- கார்டு கணக்கை மூட ஐசிஐசிஐ வங்கி தூண்டினால் அல்லது கார்டு முடிக்கப்பட்டால் / ரத்து செய்யப்பட்டால் அல்லது சம்பந்தப்பட்ட திட்டம் முடிக்கப்பட்டால்/ரத்து செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட ஸ்கீம்களின் கீழ் கார்டு உறுப்பினரால் ஈட்டப்பட்ட வெகுமதி புள்ளிகளை பூஜ்யமாகும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது.
- திட்டங்களில் அல்லது ஐசிஐசிஐ வங்கி அவ்வப்போது அறிமுகப்படுத்தும் வேறு ஏதாவது வெகுமதி புள்ளி திட்டத்தில் எந்த நேரத்திலும் மற்றும் கார்டுதாரருக்கு முன்னறிவிப்பு எதுவுமின்றி சேர்க்க, மாற்றம் செய்ய, திருத்தியமைக்க அல்லது அனைத்தையும் மாற்ற அல்லது பகுதியாக மாற்ற, அல்லது மொத்தமாக திரும்பப் பெறும் உரிமை ஐசிஐசிஐ வங்கி தக்க வைத்துள்ளது. சிறுக சிறுகச் சேரும் வெகுமதி புள்ளிகள் ஐசிஐசிஐ வங்கியின் பல்வேறு வகை கிரெடிட் கார்டுகளில் வேறுபடும் என்பதை கார்டு உறுப்பினர்/கள் புரிந்துக் கொள்ள வேண்டும் மற்றும் ஐசிஐசிஐ வங்கியால் இதரவகையில் தெரியப்படுத்தப்பட்டிருந்தால் தவிர சம்பந்தப்பட்ட கிரெடிட் கார்டு தகவல் தொடர்புகளில் குறிப்பிடப்பட்டது போல் இருக்கும்.
- வெகுமதி புள்ளி மீட்டெடுப்பு கோரிக்கை, இங்கே குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்படி முதன்மை கார்டு உறுப்பினரால் மட்டுமே செய்யப்பட முடியும். சில்லறை பரிவர்த்தனைகளுக்கு கார்டு உறுப்பினர்கள் வெகுமதி புள்ளிகளை ஈட்ட முடியும். எனினும், தொடர்ந்து பழைய நிலைக்கு கொண்டு வரப்பட்ட சில்லறை பரிவர்த்தனைகளுக்கு வெகுமதி புள்ளிகளை கார்டு உறுப்பினர்/கள் ஈட்ட முடியாது.

- ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அல்லது புரொமோஷனல் திட்டங்/கள் அல்லது பிரத்யேக ப்ரொமோக்கள்/திட்டங்களுக்கு வேறு எதாவது சில்லறை பரிவர்த்தனைகளுக்கு போனஸ் வெகுமதி புள்ளிகளை வழங்கலாம்.
- வெகுமதி புள்ளிகள் தகுதியுள்ள முதன்மை, துணை அல்லது பல கார்டுகளுக்கு தனிநபர் கார்டு கணக்கில் சிறுகச் சிறுகச் சேரும். சில்லறை பரிவர்த்தனை/கள், ஏதாவது இருந்தால், துணை கார்டு மற்றும்/அல்லது ஏதாவது பல கார்டு(களில்) வெகுமதி புள்ளிகளை ஈட்டும் இது தானாகவே முதன்மை கார்டு உறுப்பினரின் கார்டு கணக்கில் சிறுகச் சிறுகச் சேரும்.
- ரொக்கமாக அட்வான்ஸ் பணம் எடுத்தல் மற்றும் வேறு ஏதாவது வகை கட்டணங்கள்/செலவுகள் கார்டுக்கு பொருந்துவது அதாவது சேர்த்தல் கட்டணம், வருடாந்திர கட்டணம், துணை கார்டு கட்டணம், பல கார்டு கட்டணம், பேலன்ஸ் டிரான்ஸ்பர் கட்டணம், இஎம்ஐ பரிவர்த்தனைகள், ரொக்க அட்வான்ஸ் கட்டணம், பணமாக மாறாத காசோலைகளுக்கான கட்டணங்கள், நிதி கட்டணங்கள், பொறுப்பற்றதற்கான கட்டணங்கள், தாமத கட்டண செலவுகள், சேவை கட்டணம் மற்றும் வேறு ஏதாவது கட்டணம்/செலவு அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கியால் விதிக்கப்படுபவை உட்பட ஆனால் இவை மட்டும் உள்ளடங்காத வேறு பரிவர்த்தனைகளுக்கு வெகுமதி புள்ளிகளை ஈட்ட கார்டு உறுப்பினர்/கள் தகுதி பெற மாட்டார்கள். முதன்மை கார்டு உறுப்பினரால் ஒரு தடவை மீட்டெடுக்கும் தெரிவு தொடங்கப்பட்டால், அதனை தொடர்ந்து எந்தவொரு கார்டு உறுப்பினராலும் ரத்து செய்ய/விலக்கப்பட/மாற்றப்பட முடியாது.
  - ஐசிஐசிஐ வங்கியால் அல்லது ஐசிஐசிஐ வங்கி டை-அப் வைத்துள்ள ஒரு வணிக பார்ட்னர்/பங்கேற்கும் பார்ட்னரால் வழங்கப்படும் ஏதாவது விசேஷ திட்டம்/ப்ரோமோஷனல் ஆஃபர் அல்லது வேறு ஏதாவது ஒரு பார்ட்னரின் விசுவாச திட்டத்தின் கீழ் எக்ஸ்சேஞ்ச் செய்யப்பட்ட வெகுமதி புள்ளிகள் கார்டு கணக்கிற்கு திரும்ப ட்ரான்ஸ்பர் செய்ய முடியாது அல்லது கார்டு உறுப்பினரின் முயற்சியால் ரத்து செய்யப்படாது. எந்தவொரு வணிக பார்ட்னர்/பங்கேற்கும் பார்ட்னரின் திட்டத்துக்கு மாற்றப்பட்ட/டிரான்ஸ்பர் செய்யப்பட்ட வெகுமதி புள்ளிகளுக்கு அல்லது அவ்வாறான மாறுதல்/டிரான்ஸ்பர் வெகுமதி புள்ளிகள் இதரவகையில் பொருந்தினால் ஐசிஐசிஐ வங்கி பொறுப்பேற்காது.
- மீட்டெடுக்கும் விவரக்குறிப்பில் வழங்கப்படும் திட்டங்களை தேர்ந்தெடுத்தல், சேர்த்தல் அல்லது நீக்குதல் ஐசிஐசிஐ வங்கியின் சுயவிருப்ப முடிவின்படியானது மற்றும் முன்னறிவிப்பு எதுவுமின்றி மாறுதலுக்கு உட்பட்டது.
- மீட்டெடுக்கும் விவரக்குறிப்பு அல்லது தொடர்புள்ள இணையதள பக்கங்களில் பொருட்கள்/சேவைகளின் அனைத்து படங்களும் சுட்டிக்காட்ட மட்டுமே. கார்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களை தயாரிப்பாளரின் சப்ளையர் திரும்பப் பெற்றால், ரத்து செய்தால், மாற்றினால் அல்லது திட்டங்களில் திருத்தம் செய்தால் ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது.
- மீட்டெடுக்க கிடைக்கும் அனைத்து திட்டங்கள்/வவுச்சர்கள்/சேவைகள் அவை கிடைப்பது மற்றும் மீட்டெடுக்கும் நேரத்தில் தயாரிப்பாளரின் வாரண்டிகள்/கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.
- தயாரிப்புகள்/வவுச்சர்கள்/சேவைகளின் தரம், பயன்பாடு மற்றும் தகுதிக்கு ஐசிஐசிஐ வங்கி உத்தரவாதம் எதுவும் வழங்காது மற்றும் பிரதிநிதித்துவம் வழங்காது மற்றும் அவை எந்தவிதத்திலும் குறைபாடுள்ளதாக இருந்தால் அதற்கு ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது. பொருட்கள் 10 வேலை நாட்களுக்குள் விநியோகிக்கப்பட ஐசிஐசிஐ வங்கி முயற்சி செய்யும். எப்படியிருந்தாலும், பொருட்கள் வழங்குவதில் ஏற்படும் ஏதாவது தாமதம் அல்லது இழப்புக்கு ஐசிஐசிஐ வங்கி எந்த விதத்திலும் பொறுப்பாகாது. கார்டு உறுப்பினரால் ஈட்டப்பட்ட வெகுமதி புள்ளிகளுக்கு ரொக்க அல்லது பண மதிப்பு இருக்காது மற்றும் பணத்துக்காக எக்ஸ்சேஞ்ச் செய்துக் கொள்ள முடியாது.
- திட்டங்கள் தடை செய்யப்பட இடங்களில் கிடைக்காது மற்றும்/அல்லது அவ்வாறு திட்டங்களுக்கு வழங்கப்படக்கூடாத விற்பனைப் பொருட்கள்/தயரிப்புகள்/சேவைகளுக்கு கிடைக்காது.

- மீட்டெடுக்கும் விற்பனைக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள்/சேவைகள் மாற்றத்தக்கதல்ல மற்றும் பணமாக மாற்றப்பட முடியாது.
- திட்டங்களுக்கு பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அனைத்தையும் அல்லது எதையேனும் எவ்வித காரணமும் கூறாமல் அல்லது கார்டு உறுப்பினருக்கு எப்படியிருப்பின் முன்னறிவிப்பு எதுவுமின்றி மாற்றம் திருத்தம்/மாற்றம் செய்யும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. மேலும் காரணங்கள் எதுவும் கூறாமல் அல்லது எப்படியிருப்பினும் முன்னறிவிப்பு எதுவுமின்றி திட்டங்களை இடையில் நிறுத்தும் உரிமையும் ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. இங்கே அடங்கியுள்ள எதுவும் திட்டங்களை தொடரும் ஐசிஐசிஐ வங்கிக்கு ஒரு கடமை அல்லது பிரதிநிதித்துவம் ஆகாது.

  திட்டங்களின் கீழ் கார்டு உறுப்பினருக்கு வழங்கப்பட்ட தயாரிப்புகள்/சேவைகள்/வெகுமதிகள் சம்பந்தமான ஒரு தகவல் தொடர்பு/அறிவிப்பு, அந்த தயாரிப்புகள்/சேவைகள்/வெகுமதிகள் கார்டு உறுப்பினருக்கு வழங்கப்பட்டதில் இருந்து 10 நாட்களுக்குள் மட்டுமே ஏற்கப்படும். அதன் பிறகு 10 நாட்கள் கழித்து செய்யப்பட்ட எந்தவொரு உரிமைகோரலும் ஐசிஐசிஐ வங்கியால் ஏற்கப்படாது. தயாரிப்பு/சேவைகள்/வெகுமதிகள் சம்பந்தமாக விவகாரம் எதுவும் இருந்தால் அது ஐசிஐசிஐ வங்கிக்கு எதிரான ஒரு உரிமைகோரலாக இருக்காது.
- தயாரிப்புகள்/சேவைகள்/வெகுமதிகளின் விநியோக நிலையை டெலிவரிக்கு பிறகு 30 நாட்கள் வரை மட்டுமே கண்டறிய முடியும். அதனை தொடர்ந்து டெலிவரி நிலை பற்றிய தகவல் தொடர்பு எதுவும் ஏற்கப்படாது.
- விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கூடுதலானதாக இருக்கும் மற்றும் முதன்மை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு பதிலானது/குறைக்கப்பட்டதாக இருக்காது.

  எப்படியிருந்தாலும், இங்கே கூறப்பட்டுள்ள எதுவும், விவகாரங்கள், ஏதாவது இருந்தால் திட்டங்களில் அல்லது தொடர்பாக, அதன் விளைவாக ஏற்படுபவைகள் மும்பையில் உள்ள உரிய நீதிமன்றங்களில் பிரத்யேக நீதிமன்ற வரம்புக்கு உட்பட்டதாகும்.

## XXVI . வெளிப்படுத்தல்கள்

ஐசிஐசிஐ வங்கி, அதன் குழும நிறுவனங்கள் கார்டு உறுப்பினரின் தகவல், தரவு அல்லது தொடர்புள்ள ஆவணங்களை இதர ஐசிஐசிஐ குழும நிறுவனங்கள் / வங்கிகள்/ நிதி நிறுவனங்கள்/கிரெடிட் பீரோக்கள்/முகமைகள் /ஒழுங்குமுறை ஆணையங்கள் /சட்டப்பூர்வ குழுக்கள்/வரி
ஆணையங்கள்/மத்திய தகவல் பீரோக்கள்/ அந்த இதர நபர்களுக்கு பரிமாற்றம் செய்ய, பகிர அல்லது பகுதியாக கொடுக்க கார்டு உறுப்பினர் உறுதி கூறுகிறார் மற்றும் அதிகாரமளிக்கிறார். ஐசிஐசிஐ வங்கி/அதன் குழும நிறுவனங்களுக்கு அந்த நபர்/களின் மேற்குறிப்பிட்ட தகவல் / தரவை பயன்படுத்த அல்லது செயலாக்கம் செய்வது தேவைப்படலாம் அல்லது பொருத்தமானதாக இருக்கலாம் அல்லது செயலாக்கம் செய்யப்பட்ட தகவல்/ தரவு / திட்டங்களை அதனுடைய வேறு வங்கிகள்/நிதி நிறுவனங்கள்/கடன் வழங்குபவர்கள் / அந்த நபர்களுடன் பதிவு பெற்றுள்ள பயனாளர்களுக்கு வழங்கலாம் மற்றும் இந்த தகவல் பயன்பாட்டுக்கு ஐசிஐசிஐ வங்கி/அதன் குழும நிறுவனங்களை பொறுப்பாக்கக் கூடாது. கார்டு உறுப்பினர் பணம் செலுத்துவதில் தவறி விட்டால் அல்லது ஏதாவது நிதி உதவி/கடன்கள்/நிதி/கடன் வசதி அசல் தொகையை திருப்பிச் செலுத்த அல்லது வட்டி/அதன் மேலுள்ள செலவுகளை கட்டாவிட்டால் ஐசிஐசிஐ வங்கி மற்றும்/அல்லது அவ்வாறு செலுத்த தவறியதன் விவரங்கள் மற்றும் கார்டு உறுப்பினர்/அல்லது அதன் இயக்குநர்கள்/பார்ட்னர்கள்/துணை கார்டுதாரர்களின் பெயர் பொருந்தும் வகையில் அந்த வகையில் பணம் செலுத்த தவறியவர்கள் மற்றும் அந்த ஊடகம் மூலமாக ஐசிஐசிஐ வங்கி அல்லது ஆர்பிஐ அவர்களுக்கு சரியானது என கருதுவதற்கேற்ப விவரங்களை வெளிப்படுத்த அல்லது பிரசுரிக்கும் உரிமை உள்ளது.

கார்டு உறுப்பினரின் கிரெடிட் வரலாறு/திருப்பிச் செலுத்திய பதிவேடு மற்றும்/அல்லது தவணை பாக்கி கடந்த நாட்களின் நிலை போன்ற விவரங்களை கிரெடிட் தகவல் நிறுவனங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2005ன் படி ஸ்டேட்மென்ட்கள் மூலம் கிரெடிட் தகவல் அமைப்புக்கு (ஆர்பிஐயால் பிரத்யேகமாக

அங்கீகரிக்கப்பட்டது) ஐசிஐசிஐ வங்கி வெளிப்படுத்தலாம். ஒரு கிரெடிட் கார்டுக்கான ஒரு விண்னபப்த்தை ஏற்றுக் கொள்வது கார்டு உறுப்பினரின் கிரெடிட் தகுதிக்கு பாதகமற்ற அறிக்கைகள் அடிப்படையிலானதாக இருக்கும். கார்டு கணக்கில் கடமை தவறுதல் ஏதாவது இருந்தால் வேறு வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களுக்கு ஐசிஐசிஐ வங்கி தெரிவிக்கலாம் அல்லது கார்டு உறுப்பினரின் கிரெடிட் வசதியை கார்டு மூலமாக அல்லது இதரவகையில் திரும்பப் பெறலாம். பாதகமான அறிக்கைகள் (கார்டு உறுப்பினர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களின் கடன் பெறும் தகுதி சம்பந்தப்பட்டது) பெறப்பட்டதன் அடிப்படையில் எழுத்துப்பூர்வமாக முன்னறிவிப்பு கொடுத்து 15 நாட்களுக்கு பிறகு கிரெடிட் கார்டை ரத்து செய்யலாம், அதன்பிறகு கார்டு கணக்கில் இருக்கும் ஒட்டுமொத்த நிலுவை அதே போல் கார்டு பயன்படுத்தியதால் ஏற்பட்ட மேற்கொண்டு ஏதாவது கட்டணங்கள் கார்டு கணக்கில் இன்னமும் பில் செய்யப்படாதது கார்டு உறுப்பினரால் உடனடியாக செலுத்தப்பட வேண்டும். தகவலை எந்த வங்கியின் பெயர் அல்லது நிதி நிறுவனத்திடம் இருந்து பெற்றது அல்லது வெளிப்படுத்தியது என்பதை கார்டு உறுப்பினருக்கு தெரிவிக்க ஐசிஐசிஐ வங்கி கடமைப்படவில்லை.

விண்ணப்ப படிவம் மற்றும் அதனுடன் வழங்கப்பட்ட ஆவணங்கள், புகைப்படங்கள் உள்ளிட்டவற்றை தக்க வைக்கும் உரிமை ஐசிஐசிஐ வங்கி/குழும நிறுவனங்களுக்கு உள்ளது மற்றும் அதனை திருப்பிக் கொடுக்காது.

## XXVII. கடன் ஒதுக்கீடு

கிரெடிட் கார்டில் நிலுவையில் உள்ளது மற்றும் பாக்கிகளை கார்டு உறுப்பினருக்கு தகவல் தெரிவிக்காமல் தனது விருப்பப்படி எந்தவொரு மூன்றாவது தரப்புக்கு முழுமையாக அல்லது பகுதியாக டிரான்ஸ்பர் செய்யும், ஒதுக்கும் மற்றும் எந்தவொரு வகையிலும் விற்கும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. அவ்வாறான விற்பனை, ஒதுக்கீடு அல்லது டிரான்ஸ்பர் எப்படியிருப்பினும் கார்டு உறுப்பின்ருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் முழு அதிகாரம் ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. அவ்வாறான ஏதாவது ஒதுக்கீடு, விற்பனை அல்லது டிரான்ஸ்பர் மற்றும் நிலுவை மற்றும் பாக்கிகளை வசூலிப்பதில் ஏற்படும் அனைத்து கட்டணங்கள் மற்றும் செலவுகளுக்கு கார்டு உறுப்பினரே பொறுப்பாவார்.

## XXVIII. பலவகையானது

ஐசிஐசிஐ வங்கியின் கடன் விதிமுறைகள், குறிப்பிட்ட வசதிகள், மெம்பர்ஷிப்கள் மற்றும் சேவைகள்படி நிலையில் பராமரிக்கப்படும் கணக்குகளை கொண்ட கார்டு உறுப்பினர்களுக்கு அந்த கட்டணங்கள் மற்றும் தான் சரியென கருதும் அந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி வழங்கும் தகுதியை ஐசிஐசிஐ வங்கி தக்க வைத்துள்ளது. கட்டணங்களை ரத்து செய்ய அல்லது குறைக்க மற்றும் அந்த பயனை எந்த நேரத்திலும் முன்னறிவிப்பு எதுவுமின்றி மற்றும் கார்டு உறுப்பினருக்கு பொறுப்பு எதுவுமின்றி செய்யும் உரிமையை ஐசிஐசிஐ வங்கி தக்க வைத்துள்ளது. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீறல் காரணமாக மெம்பர்ஷிப் ரத்து செய்யப்பட்டால், அந்த வசதிகள் மற்றும் சேவைகள் தானாகவே ரத்தாகி விடும். அந்த வசதிகளை மேற்கொள்வதில் ஏதாவது குறைபாடு அல்லது மீறல் இருக்கும் பட்சத்தில், மெம்பர்ஷிப் அல்லது சேவைகள் அல்லது ஐசிஐசிஐ வங்கி அல்லது ஒரு வணிக நிறுவனம் அல்லது வேறு ஏதாவது மூன்றாவது தரப்பால் செயல்ட முடியாததற்கு கார்டு உறுப்பினருக்கு ஐசிஐசிஐ வங்கி எந்த விதத்திலும் பொறுப்பாகாது. கார்டு உறுப்பினர் தனது விண்ணப்பத்தில் வழங்கிய தகவலை பயன்படுத்தும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உண்டு மற்றும் சர்வேக்கள், வெளிப்புற ஆதாரங்களில் நுகர்வோர் அறிக்கைகள் உள்ளிட்டவற்றில் இருந்து தகவல், ஐசிஐசிஐ வங்கி/சார்பு நிறுவனங்கள் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்காக பயன்படுத்தும். இந்த தகவலை கார்டு உறுப்பினர்களுக்கு சந்தை சலுகைகளை உருவாக்க ஐசிஐசிஐ வங்கி சேர்ந்து பணியாற்றும் நிறுவனங்களால் அஞ்சல் பட்டியல்களை உருவாக்கவும் ஐசிஐசிஐ வங்கி பயன்படுத்தலாம். கார்டு மீதான கொள்கைகள், சிறப்பம்சங்கள் மற்றும் பயன்களை அவ்வப்போது திருத்தம் செய்யும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது மற்றும் சரியானது என கருதும் எந்தவொரு விதத்திலும் அவ்வாறான திருத்தங்கள்/மாற்றங்களை கார்டு உறுப்பினருக்கு தெரியப்படுத்தும். திருத்தம்/மாற்றங்கள் செய்யப்படும் தேதிக்கு முன்பு ஐசிஐசிஐ

வங்கிக்கு கார்டு திருப்பி அனுப்பப்பட்டால் தவிர, அந்த திருத்தங்கள்/மாற்றங்களுக்கு கார்டு உறுப்பினர் கட்டுப்பட்டவர்.

கார்டு உறுப்பினரின் கார்டு கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து பரிவர்த்தனைகளின் விவரங்கள், கார்டு உறுப்பினர் மற்றும்/அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு கிரெடிட் வழங்க மேற்கொண்டு விண்ணப்பங்களை மதிப்பிடவும் மற்றும் மோசடியை தடுக்கவும் கிரெடிட் ரெஃபெரன்ஸ் முகமைகள், கடன் வழங்குபவர்கள் மற்றும்/அல்லது வேறு முகமைகளுக்கு பகிர்ந்துக் கொள்ளப்படலாம்.

அமைப்பதற்கான பொது உரிமையும் கூடுதலாக அல்லது சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதாவது ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட வேறு உரிமை வழங்கியதின்படி ஐசிஐசிஐ வங்கி முன்னறிவிப்பு எதுவுமின்றி கார்டு கணக்கில் இருக்கும் நிலுவைத் தொகையை கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ வங்கி மற்றும் அதன் குழும நிறுவனங்கள் உடன் பராமரிக்கும் வேறு ஏதாவது கணக்கு(களில்) ஒன்று சேர்க்கலாம் அல்லது ஒருங்கிணைக்கலாம் மற்றும் நிலுவையில் உள்ள பணத்தை அவ்வாறு வேறு கணக்கு(களில்) எதிரீடு செய்யலாம் அல்லது கார்டு உறுப்பினருக்கு தனது கார்டு கணக்கின் கீழ் ஐசிஐசிஐ வங்கியுடன் உள்ள பொறுப்பில் டிரான்ஸ்பர் செய்யலாம். கார்டு உறுப்பினர் கார்டுக்காக விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டப்படி தனது பெயரில், முகவரியில், தொடர்பு எண் மற்றும் மின்னஞ்சல் ஐடியில் மாற்றம் எதுவும் இருந்தால் உடனடியாக தெரிவிக்க வேண்டும். ஐசிஐசிஐ வங்கியின் கவனத்துக்கு முகவரியில் அந்த மாற்றம் கொண்டு வரப்பட்டால் தனது பதிவேட்டில் கார்டு உறுப்பினரின் முகவரியில் மாற்றம் கொண்டு வரும் உரிமையை ஐசிஐசிஐ வங்கி தக்க வைத்துள்ளது. தகவல் தொடர்புக்கு சரியான முகவரியை ஐசிஐசிஐ வங்கிக்கு தெரிவிப்பதை உறுதிப்படுத்துவது கார்டு உறுப்பினரின் முழுப் பொறுப்பாகும், மற்றும் தவறான ஒரு முகவரியால் கார்டு உறுப்பினருக்கு ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது பொறுப்பில் இருந்து ஐசிஐசிஐ வங்கி அனைத்து பொறுப்பையும் மறுதலிக்கிறது.

கார்டு உறுப்பினரால் பெறப்படும் வசதிகள்/சேவைகளுக்கு அவ்வப்போது ஐசிஐசிஐ வங்கி அல்லது அதன் சார்பு நிறுவனங்கள் பரிந்துரைக்கும் அந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்துக்கும் கார்டு உறுப்பினர் இணங்க வேண்டும். அந்த பரிவர்த்தனைகள் அனைத்தும் அல்லது வசதிகள் மூலமாக தொலைவில் இருந்து பரிவர்த்தனைகளை மேற்கொள்ள இணையம், வோர்ல்ட் வைட் வெப், மின்னணு தரவு இன்டர்சேஞ்ச், கால் சென்டர்கள், டெலிசர்வீஸ் ஆபரேஷன்ஸ் (வாய்ஸ், வீடியோ, தரவு அல்லது அவற்றுடைய காம்பினேஷன்) அல்லது எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர், ஆட்டோமேட்டட் மெஷின்ஸ் நெட்வொர்க் அல்லது தொலைதொடர்பில் வேறு முறைகள் வழியே ஐசிஐசிஐ வங்கி அல்லது அதன் சார்பு நிறுவனங்களால் அல்லது சார்பாக நிறுவப்பட்டது, அந்த வசதிகள்/சேவைகள் வழங்கப்படுவது சம்பந்தமாக சட்டப்பூர்வ பிணைப்புகள் மற்றும் செல்லத்தக்க பரிவர்த்தனைகள், ஐசிஐசிஐ வங்கி அல்லது அதன் சார்பு நிறுவனங்கள் அவ்வாறான வசதிகள்/சேவைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணக்கமாக அவ்வப்போது பரிந்துரைத்ததை பின்பற்றி செய்யப்படுகிறது.

(சி) கிராஸ் கரன்சி எதிரீடு பொறுத்தவரை, ஒரு கரன்சியை இன்னொரு கரன்சியாக மாற்றுவது தீர்மானிக்கப்பட்ட ஒரு விகிதத்தில் ஐசிஐசிஐ வங்கி மற்றும்/அல்லது அதன் குழும நிறுவனங்களின் சுயவிருப்ப முடிவின்படி செய்யப்படும்.

## XXX. விவகாரங்களை தீர்த்தல்

1. ஆட்டோமேட்டட் விவகாரம் தீர்வு: கார்டுதாரர் புகார்கள், க்ளெய்ம்கள், விவகாரங்கள் அல்லது குறைகள் (ஒன்றாக ''குற/கள்'' என்று சொல்லப்படும்) சம்பந்தப்பட்ட உண்மை விஷயங்கள் முழுமையாக அல்லது பகுதியாக செல்லத்தக்கது (அல்லது இல்லை) என ஒரு ஆட்டோமேட்டட் முறையில் அல்லது ஐசிஐசிஐ வங்கியின் சம்பந்தப்பட்ட பதிவேடுகளை பரிசோதிப்பதன் மூலம் ஆராயப்பட்டது, அவ்வாறு ஆராயப்படலாம் மற்றும் அந்த குறை/களை ஏற்பது அல்லது நிராகரிப்பது (முழுமையாக அல்லது பகுதியாக) மனக்குறை உள்ள கார்டுதாரருக்கு அவ்வாறு ஆராயப்பட்டதும் முறையாக தெரிவிக்கப்படும். குறை/கள் முழுமையாக அல்லது பகுதியாக செல்லத்தக்கது என ஏற்கப்பட்டதென்றால், மனக்குறையுள்ள கார்டுதாரருக்கு உரிய தீர்வை பொருத்தமாக ஐசிஐசிஐ வங்கும்.

2. குறை தீர்க்கும் இன்டர்னல் செயலாக்கம்: மேலே குறிப்பிடப்பட்ட ஆட்டோமேட்டட் முறையில் தீர்வு காணப்படாத குறை/கள், அல்லது குறிப்பிடப்பட்ட ஆட்டோமேட்டட் முறை மூலம் வழங்கப்பட்ட தீர்வு கார்டுதாரருக்கு திருப்தியாக இல்லையென்றால், அல்லது ஆட்டோமேட்டட் முறை செயலாக்கத்துக்கு வரும் முன்பு எழுந்தது, மற்றும் www.icicibank.com என்பதில் வாடிக்கையாளர் குறைதீர் கொள்கைப்படி குறைதீர்ப்புக்கு எழுப்பப்படக்கூடிய திறனுள்ளதை அவ்வப்போஅது திருத்தியப்படி அந்த கொள்கைக்கு ஏற்ப குறைதீர்ப்புக்கு முன்வைக்கப்பட முடியும்.

3. ஆன்லைன் முறையில் விவகாரத்துக்கு தீர்வு: குறைகள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்குகளுக்கு உட்பட்டது), ஏதாவது உரிமைகோரல்கள் அல்லது வங்கி தொடங்கும் செயல்கள் (ஒன்றாக ''க்ளெய்ம்/ஸ்'' என்று சொல்லப்படுவது) மற்றும் வேறு ஏதாவது க்ளெய்ம் அல்லது விவகாரம் எதுவாக இருப்பினும் (ஒப்பந்தத்தில், உரிமைத்தீங்கு அல்லது இதரவகையில் எப்படியிருந்தாலும்) இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் இருந்து அல்லது சம்பந்தமாக எழுவது ஏதாவது கேள்வி கட்டுமானம், அர்த்தம், இருத்தல், செல்லத்தக்கது, மீறல், திரும்பஅழைத்தல், மீட்டல் அல்லது இந்த விதிமுறைகளின் கீழ் ரத்து செய்தல் ஆகியன மத்தியஸ்தம் அல்லது சமரச செயலாக்கம் மூலமாக தீர்வுக்கு அனுப்பப்படும், மற்றும் அந்த செயலாக்கம் ஒரு சுதந்திரமான ஆன்லைன் முறையில் தீர்வு விவகாரம் தீர்க்கும் இன்ஸ்டிடியூஷன் சமா-வின் விதிமுறைகள்படி பொருந்தும் மத்தியஸ்தம் அல்லது சமரசத்துக்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

மத்தியஸ்தம் அல்லது சமரச செயலாக்கம் குறையை அல்லது க்ளெய்மை சமா விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் அல்லது <21> நாட்களுக்குள் (எது முன்னரோ அது) தீர்க்காவிட்டால் பிறகு குறை அல்லது க்ளெய்முக்கு தீர்வு காண சமா விதிமுறைகளில் பொருந்தியபடி மற்றும் நடுவர் தீர்ப்பாய மன்றம் சட்டம், 1996ன்படி நடுவர் தீர்ப்பாயத்துக்கு கொண்டு செல்லப்படும். அந்த நடுவர் தீர்ப்பாயம் விசாரணை (ஆதாரம் பதிவு செய்வது அல்லது ஆவணங்களை ஆராய்வது உள்பட) நடத்தி, முடித்து மற்றும் சமா மூலம் அதன் இணையதளம்/பிளாட்பார்ம் www.sama.live அல்லது மொபைல் செயலி வழியே ஆன்லனில் செயல்படுத்தப்படும். நடுவர் தீர்ப்பாயம் என்பது சமா விதிமுறைகள்படி நியமிக்கப்பட்ட ஒரு சுதந்திரமான ஒற்றை நடுவரை கொண்டதாக இருக்கும். நடுவர் மன்ற விசாரணைகள் மும்பையில் நடக்கும். நடுவர் மன்ற நடைமுறை விதிகள் சமாவின் விதிமுறைகளாக இருக்கும்.

4. மேலே குறிப்பிட்டப்படி, ஆன்லைன் முறையில் விவகாரத்துக்கு குறைதீர்க்கும் செயலாக்கம் பின்கூறப்பட்டதற்கு பொருந்தாது:

ஏ) சட்டப்பூர்வ, ஒழுங்குமுறை மற்றும் அரசாங்க ஆணையங்களிடம் இருந்து அல்லது அவை மூலமாக பெறப்பட்ட ஏதாவது குறை/கள். அந்த வகையில் சட்டப்பூர்வ, ஒழுங்குமுறை மற்றும் அரசாங்க ஆணையங்களிடம் இருந்து அல்லது அவை மூலமாக பெறப்பட்ட குறை(களுக்கு) ஐசிஐசிஐ வங்கி அந்த ஆணையங்கள் கருதும் முறையில் தீர்வு கண்டு மற்றும் பதிலளிக்க வேண்டும்.

பி) குறை/கள் மூன்றாவது தரப்பு சார்ந்திருத்தல்களை கொண்டிருக்கலாம் - மூன்றாவது தரப்பு/களிடம் இருந்து தகவல் அல்லது விளக்கங்களை பெற்ற பிறகு மட்டுமே ஐசிஐசிஐ வங்கியால் குறை/களை மீளாய்வு செய்ய, மதிப்பிட மற்றும் தீர்க்க முடியும்.

சி) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்டோமேட்டட் விவகாரம் தீர்வின் கீழ் அல்லது வங்கியின் வாடிக்கையாளர் குறைதீர்ப்பு பாலிசிப்படி குறைதீர்வு நிலுவையில் இருக்கும் ஏதாவது குறை/கள்.

## XXXI. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுதல்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை திருத்தும் அல்லது இணைப்பை சேர்க்க, கார்டு மீதான சிறப்பம்சங்கள் மற்றும் பயன்கள் உள்பட, நடப்பிலுள்ள மீதங்கள், வட்டி கட்டணங்கள் அல்லது விகிதங்கள் மற்றும் கணக்கிடும் முறைகளை மாற்றும் முழுமையான சுயவிருப்ப முடிவு ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது. இந்த திருத்தி அமைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் கார்டு மீதுள்ள அனைத்து தொகைகளும் முழுமையாக திருப்பிச் செலுத்தப்படும் வரை ஏற்படும் அனைத்து செலவுகள் மற்றும் இதர பொறுப்புகள் அனைத்துக்கும் கார்டு உறுப்பினர் தான் பொறுப்பாவார்.

திருத்தப்பட்ட விதிமுறைகளை இன்ஃபினிட்டி அல்லது ஐசிஐசிஐ தீர்மானிக்கும் வேறு ஏதாவது முறையில் இடம்பெறச் செய்வதன் மூலம் தகவலை ஐசிஐசிஐ வங்கி தெரிவிக்கலாம். இன்ஃபினிட்டியில் இடம்பெறச் செய்யப்படும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளையும், அதில் செய்யப்படும் திருத்தங்களை அவ்வப்போது பார்ப்பது செய்வது கார்டு உறுப்பினரின் பொறுப்பாகும் மற்றும் கார்டை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதாக கருதப்படுகிறது. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் மேற்குறிப்பிட்ட விதத்தில் மாற்றம் எதுவும் செய்யப்பட்டால், அவற்றை அமல்படுத்தும் தேதிக்கு ஒரு மாதத்துக்கு முன்பு தெரிவிக்கப்படும்.

## XXXII. அறிவிப்புகள்

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அல்லது அது சம்பந்தமாக கார்டு உறுப்பினர் பாக்கி வைத்துள்ள அனைத்து தொகைகள் உள்ளிட்ட அனைத்து அறிவிப்புகள் அல்லது இதர தகவல் தொடர்புகள் எழுத்துப்பூர்வமாக ஐசிஐசிஐ வங்கி லிமிடெட், ஐசிஐசிஐ போன் பேங்கிங் சென்டர், ஐசிஐசிஐ பேங்க் டவர், 7வது தளம், சர்வே எண்:115/27, பிளாட் எண் 12, நானக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஹைதராபாத் - 500032, இந்தியா என்ற முகவரிக்கு தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும், இதரவகையில் தெரிவிக்கப்பட்டிருந்தால் கடிதம் அல்லது தொலைநகல் மூலம் செய்யப்பட வேண்டும். அவ்வாறான எந்தவொரு அறிவிப்பு அல்லது வேறு தகவல் தொடர்பு செயலாற்றல் கொண்டதாக கருதப்படும்:

(i) கடிதமாக அனுப்பியிருந்தால், நேரில் கொடுக்கப்பட்டது அல்லது தபாலில் அனுப்பப்பட்டிருந்தால் கடிதத்தை திரும்பப் பெறுவது அனுப்பியவரின் கட்டுப்பாட்டுக்கு வெளியில் இருப்பது; மற்றும் (ii) தொலைநகல் மூலம் அனுப்பட்டிருந்தால், எப்போது அனுப்பப்பட்டது (சரியான தொலைநகல் எண்ணுக்கு அனுப்பியது பெறப்பட்டதை உறுதிப்படுத்துவது). இருப்பினும், ஐசிஐசிஐ வங்கியால் உண்மையில் பெறப்பட்டு மற்றும் ஏற்றுக் கொண்டிருந்தால் தவிர ஐசிஐசிஐ வங்கிக்கு அனுப்பிய முகவரி அல்லது தகவல் தொடர்பு செயல்பாட்டில் இருக்காது. அறிவிப்புகள் அல்லது தகவல் தொடர்பு அனுப்பி வைக்கப்படலாம் இவ்வாறு: (i) ஐசிஐசிஐ வங்கியின் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள கார்டு உறுப்பினரின் முகவரி அல்லது தொலைநகல் எண் மற்றும் அந்த அறிவிப்புகள்/தொலைதொடர்புகள் எங்கு அனுப்பப்பட வேண்டியது (விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டப்படி), மற்றும் (ii) ஐசிஐசிஐ வங்கியின் மண்டல/பிராந்திய/கிளை/அலுவலக முகவரி அல்லது தொலைநகல் எண் (விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு), அல்லது கார்டு உறுப்பினர் மற்றும் ஐசிஐசிஐ வங்கி ஒருவருக்கொருவர் எழுதி தெரிவித்துக் கொண்டபடி வேறு முகவரி அல்லது தொலைநகல் எண். கார்டு உறுப்பினர் தனது தொடர்பு முகவரி அல்லது விவரங்களில் ஏதாவது மாற்றங்களை எழுத்துப்பூர்வமாக ஐசிஐசிஐ வங்கிக்கு தெரிவிக்க தவறி விட்டால், விண்ணப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது கார்டு உறுப்பினர் கடைசியாக தெரிவிக்க முகவரிக்கு ஒரு நோட்டீஸ்/தகவல் அனுப்பப்பட்டது சரியானதுதான் மற்றும் அந்த நோட்டீஸ் ''வழங்கப்படவில்லை'' என ஐசிஐசிஐ வங்கிக்கு திரும்ப வந்தாலும் அல்லது வராவிட்டாலும் கார்டு உறுப்பினருக்கு போதிய சேவை வழங்கப்பட்டது என கருத்தில் கொள்ளப்படும். கார்டு உறுப்பினர் வசிக்கும் அல்லது வேலை செய்யும் பகுதியில் கிடைக்கும் பத்திரிகையில் ஒரு அறிவிப்பை பிரசுரிப்பது அதன் பிரசுரிப்பு தேதியில் இருந்து கார்டு உறுப்பினருக்கு போதிய அறிவிப்பாக இருக்கும்; இருப்பினும், ஒரு பத்திரிகையில் வரும் ஒரு அறிவிப்பு ஐசிஐசிஐ வங்கியால் ஏற்கப்பட்டால் தவிர ஐசிஐசிஐ வங்கிக்கு எதிராக செயலாற்றல் கொண்டதாக இருக்காது.

## XXXIII. குளோபல் இந்திய கிரெடிட் கார்டு விதிமுறைகள்

இந்த விதிமுறைகள் (''விதிகள்'') குளோபல் இந்திய கிரெடிட் கார்டு பயன்படுத்தும் கார்டு உறுப்பினருக்கு மட்டுமே பொருந்தும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் கிரெடிட் கார்டுகளை பயன்படுத்துவதற்கான வேறு விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக இருக்கும் (''விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்''). இந்த விதிமுறைகள் மற்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் இடையே ஒரு முரண்பாடு இருந்தால், இந்த விதிமுறைகளே மேலோங்கி இருக்கும். குளோபல் இந்திய கிரெடிட் கார்டில் ரொக்கப் பணம் எடுக்க அனுமதிக்கப்படாது. குளோபல் இந்திய கிரெடிட் கார்டு மீது ரொக்க வரம்பு எதுவும் வழங்கப்படாது. பேமென்ட் செலுத்தும் உரிய தேதியன்று மொத்த பாக்கி தொகையை கார்டு உறுப்பினர் ஐசிஐசிஐ

வங்கிக்கு செலுத்த வேண்டும். எம்ஏடி முறையில் பணம் செலுத்தும் வசதி எதுவும் குளோபல் இந்திய கிரெடிட் கார்டுக்கு பொருந்தாது. குளோபல் இந்திய கிரெடிட் கார்டுக்கு பேமென்ட் ஈசிஎஸ் முறையில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

## XXXIV. மெய்நிகர் கிரெடிட் கார்டு விதிமுறைகள்

இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (''விதிகள்'') ஐசிஐசிஐ வங்கியால் வழங்கப்படும் மெய்நிகர் கிரெடிட் கார்டு வசதிகளுக்கு பொருந்தும் மற்றும் வழிமுறைகளை ஒழுங்குப்படுத்துகிறது. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கூடுதலானது மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் கிரெடிட் கார்டு வாதிகளை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஐசிஐசிஐ வங்கியின் இன்டர்நெட் பேங்கிங் சேவைகளை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஐசிஐசிஐ வங்கி சேமிப்புக் கணக்கிற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் (''முதன்மை விதிகள்'') மதிப்பை குறைப்பதாக இருக்காது. இந்த விதிமுறைகள் மற்றும் முதன்மை விதிமுறைகள் இடையே ஏதாவது முரண்பாடு இருந்தால், இந்த விதிகளே மேலோங்கி இருக்கும். பயன்படுத்தப்பட்ட ஆனால் வரையறுக்கப்படாத அனைத்து கேப்பிடலைஸ்ட் விதிகள் முதன்மை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்டுள்ள அர்த்தங்களை கொண்டிருக்கும்.

''கணக்கு/கள்'' என்பது கணக்கு(கள்) விளக்கத்தை ஐசிஐசிஐ வங்கியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் சேமிப்புக் கணக்கின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் வரையறுத்தப்படி குறிக்கிறது.

''மெய்நிகர் கிரெடிட் கார்டு'' என்பது முதன்மை கார்டு உறுப்பினருக்கு அவருக்கு ஏற்கனவே இருக்கும் கார்டு கணக்கில் கூடுதலாக பிறப்பிக்கப்படும் இன்னொரு கிரெடிட் கார்டை குறிக்கிறது. இந்த ஆட் ஆன் கிரெடிட் கார்டு முதன்மை கார்டு உறுப்பினரின் கணக்கு/களின் லாக்ட் இன் பிரிவில் ஒரு மின்னணு பிம்பமாக உருவாக்கப்பட்டு மற்றும் சேமித்து வைக்கப்படும். மெய்நிகர் கிரெடிட் கார்டுக்கு பிளாஸ்டிக் கார்டு எதுவும் கொடுக்கப்படாது.

''மெய்நிகர் கிரெடிட் கார்டு உறுப்பினர்'' என்பது முதன்மை விதிமுறைகள் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு ஐசிஐசிஐ வங்கியால் முதன்மை கார்டு உறுப்பினருக்கு வழங்கப்பட்ட ஒரு ஆட்-ஆன் மெய்நிகர் கிரெடிட் கார்டை குறிக்கிறது.

மெய்நிகர் கிரெடிட் கார்டு வசதிக்கு விண்ணப்பித்து மற்றும் ஒப்புக் கொள்வதன் மூலம், இங்கே கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை முதன்மை கார்டு உறுப்பினர் ஒப்புக் கொண்டு மற்றும் ஏற்றுக் கொண்டதாக கருதப்படுகிறது.

ஐசிஐசிஐ வங்கியால் வழங்கப்படும் மெய்நிகர் கிரெடிட் கார்டுக்கு ஐசிஐசிஐ வங்கியின் லாக்ட் இன் பிரிவு மூலம் அல்லது ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது குறிப்பிடப்பட்ட இதர முறையில் முதன்மை கார்டு உறுப்பினர் விண்ணப்பிக்கலாம். முதன்மை கார்டு உறுப்பினர் தான் தேர்ந்தெடுக்க ஒரு கிரெடிட் வரம்புக்குள் ஆன்லைனில் பரிவர்த்தனை செய்ய மெய்நிகர் கிரெடிட் கார்டு உதவுகிறது, எனினும், எந்த நேரத்திலும் அவரது கிரெடிட் கார்டின் கிரெடிட் வரம்புக்கு அப்பால் எந்த சூழ்நிலையிலும் செய்ய முடியாது.

மெய்நிகர் கிரெடிட் கார்டு பயன்படுத்தி செய்யப்பட்ட கொள்முதல் விவரங்கள் ஸ்டேட்மென்ட்டில் குறிப்பிடப்படும் மற்றும் முதன்மை கார்டு உறுப்பினருக்கு தனியாக ஸ்டேட்மென்ட் எதுவும் அனுப்பப்படாது. மெய்நிகர் கிரெடிட் கார்டின் கீழ் கிடைக்கும் இணைப்பில் க்ளிக் செய்வதன் மூலம் மெய்நிகர் கிரெடிட் கார்டின் நடப்பு, மற்றும் கடந்த கால ஸ்டேட்மென்ட்களையும் முதன்மை கார்டு உறுப்பினர் பார்க்க முடியும். முதன்மை கார்டு மற்றும் மெய்நிகர் கிரெடிட் கார்டு பயன்படுத்தி ஏற்பட்ட செலவுகளுக்கு ஒரு ஒற்றை பேமென்ட்டை முதன்மை கார்டு உறுப்பினர் செலுத்த வேண்டும். மெய்நிகர் கிரெடிட் கார்டின் முக்கிய விவரங்கள் அதாவது கார்டு எண், மெய்நிகர் கிரெடிட் கார்டின் காலாவதி தேதி, சிவிவி இத்யாதி கணக்கில் உள்நுழைந்ததும் கிடைக்கும் மெய்நிகர் கிரெடிட் கார்டு பிரிவில் மட்டுமே பார்க்க முடியும். மெய்நிகர் கிரெடிட் கார்டின் கிரெடிட் வரம்பு முதன்மை கார்டின் வரம்பையே கொண்டிருக்கும். மெய்நிகர் கிரெடிட் கார்டை ஹாட்லிஸ்ட் செய்வது/முடக்குவது கணக்கில் உள்நுழையும்

பிரிவில் கிடைக்கும் மெய்நிகர் கிரெடிட் கார்டுகள் பிரிவின் கீழ் பொருத்தமான தெரிவுகளில் க்ளிக் செய்து மேற்கொள்ள முடியும். மெய்நிகர் கிரெடிட் கார்டு உறுப்பினர் கணக்கை மூடிவிட்டால், மெய்நிகர் கிரெடிட் கார்டு வசதி தொடர்ந்து நீடிக்கும்.

மெய்நிகர் கிரெடிட் கார்டு பயன்பாடு ஆன்லைன் பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே என கட்டுப்படுத்தப்படும். ஆன்லைன் பரிவர்த்தனைகளாக இருக்கும் பட்சத்தில், மெய்நிகர் கிரெடிட் கார்டு பயன்படுத்தி பொருள் வாங்கப்படும் நேரத்தில் சார்ஜ் ஸ்லிப்புகளில் முதன்மை கார்டு உறுப்பினரால் கையொப்பமிட முடியாது என்பது முதன்மை கார்டு உறுப்பினருக்கு தெரிந்திருக்கும். அதன்படி, அவ்வாறான ஒரு கொள்முதல் அல்லது ஒரு செலவின் உண்மைத்தன்மை அல்லது செல்லத்தக்கது சம்பந்தமாக ஏதாவதொரு காரணத்தால் எப்படியிருப்பினும் விவகாரம் எதுவும் எழுந்தால், நிலுவையில் உள்ள பாக்கிகள் அனைத்தையுமே ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டியது முதன்மை கார்டு உறுப்பினரின் பொறுப்பாகும் மற்றும் எந்த சூழ்நிலைகளிலும் ஐசிஐசிஐ வங்கியை கடமை/பொறுப்பாக்கக் கூடாது. மெய்நிகர் கிரெடிட் கார்டு மூலம் செய்யப்படும் பேமென்ட்டை ஏற்றுக் கொள்ள எந்தவொரு வணிகர் மறுத்தாலும் அதற்கு ஐசிஐசிஐ வங்கி பொறுப்பாகாது.

மெய்நிகர் கிரெடிட் கார்டை வழங்குவதன் ஒரே நோக்கமாவது மெய்நிகர் கிரெடிட் கார்டு உறுப்பினர் ஆன்லைனில் பேமென்ட் செய்யும் வசதிக்காக மட்டுமே மற்றும் மெய்நிகர் கார்டு உறுப்பினரால் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனையின் தகுதி, பாதுகாப்பு அல்லது சட்டப்பூர்வமானதை உறுதிப்படுத்துவதற்கல்ல.

மெய்நிகர் கிரெடிட் கார்டு பயன்படுத்துவது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதற்கு உட்பட்டது. இந்த விதிகளின் கீழ் பேமென்ட் செலுத்த மெய்நிகர் கிரெடிட் கார்டு உறுப்பினர் கட்டுப்பட்டவர்/பொறுப்பு உள்ளவர் மற்றும் பாக்கிகள் அனைத்தும் மற்றும் மெய்நிகர் கிரெடிட் கார்டு பயன்பாட்டில் செலுத்தத்தக்கது கட்டப்படுவதை அவர் உறுதி செய்ய வேண்டும். ஒரு மெய்நிகர் கிரெடிட் கார்டு வசதி, ஒரு பிரத்யேக வசதியாக இருப்பதால் ஐசிஐசிஐ வங்கியால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அந்த கட்டணம்/விகிதத்தில் இருக்கும்.

## XXXV. உடனடி கிரெடிட் கார்டு விதிமுறைகள்

1. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (''விதிகள்'') ஐசிஐசிஐ வங்கியால் வழங்கப்பட்ட உடனடி கிரெடிட் கார்டுக்கு பொருந்தும் மற்றும் ஒழுங்குப்படுத்துகிறது மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் கிரெடிட் கார்டு வசதிகளை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் வைப்பு நிதியை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் (''முதன்மை விதிகள் மற்றும் நிபந்தனைகள்'') க்ஜ்க்க்ஜ்க்க் என்பதில் இடம்பெற்றிருப்பதற்கு கூடுதலாகும் மற்றும் மதிப்பு குறைவானதல்ல. இந்த விதிகள் மற்றும் முதன்மை விதிகள் மற்றும் நிபந்தனைகள் இடையே ஏதாவது முரண்பாடு இருக்கும் பட்சத்தில், இந்த விதிகளே மேலோங்கி இருக்கும். இங்கே பயன்படுத்தப்பட்ட ஆனால் வரையறுக்கப்படாத அனைத்து கேப்பிடலைஸ்ட் சொற்களும் முதன்மை நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட அதே அர்த்தத்தை கொண்டிருக்கும்.

2. ''கார்டுதாரர்'' என்பது ஐசிஐசிஐ வங்கியில் ஒரு வைப்பு நிதி வைத்திருக்கும்/வைக்கும் ஒரு நபரை குறிக்கிறது மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் உடனடி கிரெடிட் கார்டுக்கு பொருந்துகிறது மற்றும் முதன்மை விதிகள் மற்றும் நிபந்தனை மற்றும் இங்கே குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒரு உடனடி கிரெடிட் கார்டு வழங்கப்படுகிறது. ''உடனடி கிரெடிட் கார்டு'' என்றால் கார்டுதாரர் ஐசிஐசிஐ வங்கியில் பராமரிக்கும் ஃபிக்ஸட் டெப்பாசிட்டுக்கு எதிராக கார்டுதாரருக்கு ஐசிஐசிஐ வங்கியால் வழங்கப்பட்ட ஐசிஐசிஐ வங்கி உடனடி கிரெடிட் கார்டை குறிக்கிறது.

3. உடனடி கிரெடிட் கார்டுக்கு தகுதி பெற, கார்டுதாரர் குறைந்தது ரூ. 10,000/- ஃபிக்ஸட் டெப்பாசிட் தொகையை ஐசிஐசிஐ வங்கியில் பராமரித்து வர / வைக்க வேண்டும்.

4. உடனடி கிரெடிட் கார்டு மீதான கிரெடிட் வரம்பு ஃபிக்ஸட் டெப்பாசிட் தொகையில் எண்பத்து ஐந்து சதவீதமாக (85%) இருக்கும், குறைந்தபட்ச கடன் வரம்பு ரூ.8,500/-ஆகவும் மற்றும் அதிகபட்சம் ரூ. 5 லட்சமாகவும் இருக்கும். மேற்குறிப்பிட்ட கடன் வரம்பு ஐசிஐசிஐ வங்கியின் சுயவிருப்ப முடிவின்படி

அவ்வப்போது மாற்றத்துக்கு உட்பட்டது மற்றும் ஐசிஐசிஐ வங்கி சரியானது என கருதும் அந்த வழிமுறை மற்றும் விதம் மூலமாக கார்டுதாரருக்கு தெரிவிக்கப்படும்.

5. கார்டுதாரர் குறிப்பிடப்பட்ட முறையில் மற்றும் ஐசிஐசிஐ வங்கி அவ்வப்போது குறிப்பிட்டவாறு சம்பந்தப்பட்ட ஆவனங்களை சமர்ப்பித்து வைப்பு நிதிகளை முதலீடாக வைப்பது தேவைப்படும். கார்டுதாரர் வைப்பு நிதியை ஒரு ஐசிஐசிஐ வங்கி கிளையில் அல்லது ஐசிஐசிஐ வங்கியால் சுயவிருப்ப முடிவின்படி அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு மற்றும் தெரிவிக்கப்படும் இதர மாற்று வழிமுறையில் மட்டுமே வைக்க வேண்டும். அவ்வாறு தொடங்கப்படும் வைப்புகள் தானாக புதுப்பிக்கும் முறையில் மட்டுமே தொடங்க முடியும். கார்டு கார்டுதாரர்/ஐசிஐசிஐ வங்கியால் ரத்து செய்யப்படும் பட்சத்தில், உடனடி கிரெடிட் கார்டு உடன் இணைக்கப்பட்ட வைப்பு நிதி, அந்த வைப்பு நிதியை வைக்கும் சமயத்தில் கார்டுதாரர் முன்வைத்த அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தொடர்ந்து நீடிக்கும்.

6. உடனடி கிரெடிட் கார்டு வழங்கப்பட்டதை தொடர்ந்து, கார்டுதாரரால் வைக்கப்பட்ட வைப்பு நிதியில் ஒட்டுமொத்த தொகை, கார்டுதாரரால் ஈட்டப்பட்ட வட்டி மீது ஐசிஐசிஐ வங்கி பற்றுரிமையை உடனடி கிரெடிட் கார்டு ரத்து செய்யப்படும் வரை அல்லது வைப்பு நிதி முதிர்வு வரை, சூழ்நிலைப்படி கொண்டிருக்கும்.

7. விண்ணப்பதாரருக்கு ஐசிஐசிஐ வங்கி உடன் ஏற்கனவே வைப்பு நிதி உள்ளது என்றால், அந்த வைப்பு நிதி கார்டுதாரரின் உடனடி கிரெடிட் கார்டு கணக்கு உடன் இணைக்கப்படும் மற்றும் வைப்பு நிதி உடனடியாக தானாகவே புதுப்பிக்கும் ஒரு முறைக்கு மாற்றப்படும். வைப்பு நிதி தானாகவே புதுப்பிக்கும் நேரத்தில் உரித்தாகும் வட்டி விகிதம் மேற்குறிபிட்ட வைப்பு நிதி தொகைக்கு பொருந்துவதாக இருக்கும்.

8. உடனடி கிரெடிட் கார்டு உடன் இணைக்கப்பட்டுள்ள வைப்பு நிதியில் இருந்து கார்டுதாரர்/கள் பகுதியாக பணம் எதையும் எடுக்க முடியாது.

9. இந்து கூட்டுக் குடும்பங்கள், பங்குதாரர் நிறுவனங்கள், மைனர்கள் அல்லது கூட்டாக தொடங்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் வைப்பு நிதிக்கு உடனடி கிரெடிட் கார்டு பெற முடியாது. ஒற்றை தனிநபர் பெயரிலுள்ள வைப்புநிதிகளுக்கு மட்டுமே உடனடி கிரெடிட் கார்டு பெறும் தகுதி உள்ளது.

10. வைப்பு நிதி வசதிக்கு நியமனதாரார்கள் வசதிகள் கிடைக்கிறது.

11. வைப்பு அல்லது உடனடி கிரெடிட் கார்டு முடிக்கப்பட்டது /திரும்பப் பெறுதல்/ரத்து செய்தால் அல்லது உடனடி கிரெடிட் கார்டு மீதுள்ள நிலுவை தொகையை உரிய தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் கட்ட கார்டுதாரர் தவறி விடுகிறார், அல்லது உடனடி கிரெடிட் கார்டில் நிலுவையில் இருக்கும் தொகை, ஏதாவது கட்டணங்கள், செலவுகள் அல்லது விதிமுறைகள்படி ஐசிஐசிஐ வங்கியால் விதிக்கப்படும் வேறு ஏதாவது தொகை உள்ளிட்டவை சேர்த்து எந்த நேரத்திலாவது ஃபிக்ஸட் டெப்பாசிட் தொகையில் 95% என்பதற்கு அதிகமாகி விட்டால், வைப்பு நிதிக்கு சிறுக சிறுக சேர்ந்த வட்டி உள்பட ஒட்டுமொத்த வைப்பு நிதியை பணமாக்கும் உரிமையும் மற்றும் அந்த தொகையை உடனடி கிரெடிட் கார்டின் கீழ் ஐசிஐசிஐக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் கழித்தும் கொள்ளும் உரிமையும் உள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள கழிப்புக்கு பிறகு தொகை ஏதும் மீதமிருந்தால் கார்டுதாரருக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.

12. இன்ஸ்டாசேவ் ஃபிக்ஸட் டெப்பாசிட்களை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகள்படி, ஒரு தடவை கடவுச்சொல் (ஓடிபி) மூலம் இ-கேஒய்சி (மின்னணு - உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துக் கொள்ளுங்கள்) அடிப்படையில் தொடங்கப்பட்ட இன்ஸ்டாசேவ் ஃபிக்ஸட் டெப்பாசிட் உள்ள கார்டுதாரர்களுக்கு, இன்ஸ்டாசேவ் ஃபிக்ஸட் டெப்பாசிட்டுகள் மற்றும் சேமிப்புக் கணக்கு தொடங்கிய ஒரு (1) ஆண்டுக்குள் பிசிக்கல் கேஒய்சி சரிபார்த்தல் நிறைவடையாதிருந்தால் அல்லது வாடிக்கையாளர் தவிர்த்தால், எந்தவொரு காரணம் எப்படியிருப்பினும் சம்பந்தப்பட்ட சேமிப்பு மற்றும் இன்ஸ்டாசேவ் ஃபிக்ஸட் டெப்பாசிட் அக்கவுண்ட் மூடப்பட வழிவகுக்கும். மேற்குறிப்பிட்டப்படி நிகழ்ந்தால், இன்ஸ்டாசேவ் ஃபிக்ஸட் டெப்பாசிட்டுக்கு எதிராக கார்டுதாரரால் பெறப்பட்ட உடனடி கிரெடிட் கார்டு மூடப்படும், மற்றும் அந்த இன்ஸ்டாசேவ் ஃபிக்ஸட் டெப்பாசிட்டுக்கு எதிராக குறிக்கப்பட்ட பற்றுரிமையும் நீக்கப்படும். இருப்பினும், அவ்வாறான சூழலில், எப்படி இருந்தாலும் இங்கே அல்லது இதர ஏதாவது ஆவணத்தில் அடங்கியுள்ளப்படி ஒட்டுமொத்த ஃபிக்ஸட் டெப்பாசிட் தொகை, சேர்ந்த

வட்டி உள்பட அனைத்தையும் பணமாக்கும் உரிமை ஐசிஐசிஐ வங்கிக்கு உள்ளது மற்றும் அவ்வாறான தொகை உடனடி கிரெடிட் கார்டு சம்பந்தமாக ஐசிஐசிஐ வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கு எதிராக கழித்துக் கொள்ளப்படும். பாக்கி சரி செய்தப்பிறகு மீதி தொகை ஏதாவது இருந்தால் அது கார்டுதாரருக்கு திருப்பிக் கொடுக்கப்படும்.

13. ஃபிக்ஸட் டெப்பாசிட் மீது பற்றுரிமை குறிக்கப்பட்டப்பிறகு உடனடி கிரெடிட் கார்டு ஆக்டிவேட் செய்யப்படலாம்.

14. எந்தவொரு சமயத்திலும் ஒரு கார்டுதாரருக்கு ஒரு உடனடி கிரெடிட் கார்டு மட்டுமே கொடுக்கப்படும்.

ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்

பதிவு அலுவலகம்:- ஐசிஐசிஐ பேங்க் டவர்ஸ், சக்லி சர்க்கிள் அருகில், பழைய பத்ரா ரோடு, வதோதரா - 390 007

கார்ப்பொரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ பேங்க் டவர்ஸ், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051.

பொறுப்பு துறப்பு:

''ஐசிஐசிஐ வங்கி தனது சுயவிருப்ப முடிவின்படி, அந்த விதிமுறைகள் உத்தரவிட்டப்படி அல்லது அவசியப்படி, தனது திட்டங்கள்/சேவைகள் தொடர்பாக வெளிப்புற சேவை வழங்குபவர்/கள் அல்லது முகவர்/கள் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளும்.''

''ஐசிஐசிஐ வங்கி'' மற்றும் ''ஐ-மேன்'' சின்னங்கள் ஐசிஐசிஐ வங்கி லிட்.டின் வணிகச்சின்னம் மற்றும் உடைமை ஆகும். அறிவுசார் சொத்து, அல்லது இங்கே அடங்கியுள்ள இதர எவற்றையேனும் தவறாக பயன்படுத்துவது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது.